Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 30.00


ஜனவரி 24 - 30, 2013

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 998

## அபிவிருத்தியும் அரசியல் தீர்வும் தமிழர்களின் பயணமும்!






## அமெரிக்கப் பாதுகாப்பில் சவுதியில் கொடுங்கோல் ஆட்சி

## மொட்டை சீமானின் வெட்டிப் பேச்சுக்கள்



## இறைபணி செய்தல்

இறைவனுக்கு பணிவிடைசெய்தல் என்பது வாழ்க்கையில் எல்லோருக்கும் அமைந்துவிடுவதில்லை. சிலருக்கு முற்பிறப்பின் நற்பலனாக தானாகவே அமைந்துவிடுவதுண்டு. வேறுசிலர் இறைவன்பால் அன்பு பூண்டு மனமுவந்து பணிவிடை செய்வதுண்டு. இன்னும் சிலருக்கு பணிவிடை செய்வதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகளை இறைவன் ஏற்படுத்திக் கொடுக்கின்றபோதும், அவர்கள் தங்களின் அசண்டையீனத்தாலும், ஆங்காரத்தனத்தாலும் அலட்சியப்படுத்திவிட்டு ஒதுங்கிவிடுதலுமுண்டு.

இந்து சமயத்தில் இறைவனுக்குப் பணிவிடைசெய்வதற்கு முன்னோடியாக விளங்குபவர்கள், நாயன்மார்களும் ஆழ்வார்களுமாவர். இவர்கள் இறைவன் மீது அளவிலா பக்திகொண்டு இறைவனுக்கு பணிசெய்தது மட்டுமல்ல, அந்த இறைவனைக் குறித்தும் பதிகங்கள் பலபாடி போற்றியும் துதித்தும் உள்ளனர்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே..." எனும் நாவுக்கரசரின் வாக்கிற்கமைய நாயன்மார்களும், ஆழ்வார்களும் இறைவன் முன் எப்படி வாழ்ந்து காட்டினார்களோ, அதன்படி நாமும் இறைபணி செய்து வாழ்வோமானால் எம்மை எந்தவொரு தீயசக்திகளும் அணுகாது என்பது திண்ணம்.

-அனந்த நாராயணன், கைவேலி.

ஆன்மீகம்

## அறிவிலிகள்

வாழ்க்கைக்குத் தேவையானது எல்லாம் ஒரு மனிதனுக்குப் பூரணப்பட்டு இருக்கும்போது அவன் தெய்வத்தைப் பெரும்பாலும் நாடிச் செல்வது கிடையாது. சிலர் அந்தத் தெய்வமே இல்லை என வாதாடிக் கொண்டிருப்பர். வேறு சிலர் பூரணப்பட்டிருக்கும் தமது தேவைகள் குறைவுபடத் தொடங்கும்போது இறைவனைத் தேடத் தொடங்குவார்கள்.

அதாவது, சுயநலம் சார்ந்த வெளிப்பாடு அவர்களில் பிரதிபலிக்கும். இப்படியாக வாழ்நாள் பூராகவும் தன்னைப் படைத்து, தன்னை ஆழ்கிறவனை மறுதலிப்பவர்களைப் பார்த்து 'அறிவிலிகள்' என வேதம் எடுத்தியம்புகின்றது.

ஆயினும், இவர்களின் பிற்பகுதிக்காலம் சொல்லொணாத் துன்பதுயர்களில் சிக்கும்போதுதான், தாங்கள் நடந்துவந்த பாதையைத் திரும்பிப் பார்ப்பார்கள். சிலர் மறுதலித்தபடியே மரணத்துக்கேதுவாகின்றனர். "கர்த்தர் இல்லையென அறிவிலிகள் சிலர் தம் உள்ளத்தில் சொல்லிக் கொள்கிறார்கள். (சங்கீதம்-53:1) என் சங்கீதக்காரன் தாவீதுராஜா கூட எடுத்துரைக்கிறார்.

சாமுவேல், புதுக்குடியிருப்பு.

## இஸ்லாத்தின் பார்வையில் புத்திசா[லி]

மனிதர்களே! மரணத்திற்குப் பின்னுள்ள மறுமை வாழ்க்கைக்காகச் சிந்தித்துச் செயற்படுங்கள். மறுமை வாழ்வை அடிப்படையாகக் கொண்டு சிந்திக்காத மனிதர்கள் அல்லாஹ்வுக்கு அவர்கள் உள்ளத்தில் அற்ப ஓர் இடத்தையே ஒதுக்கி இருப்பார்கள்.

இவர்களது வாழ்க்கையில் எங்காவது, எதிலாவது ஓர் பாதிப்பு ஏற்படும் போதுதான் அவர்களுக்கு அல்லாஹ்வின் ஞாபகமே வரும். அப்போது அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்கள் குறித்து அல்லாஹ்விடம் முறையிட்டு அழுது மன்றாடுவார்கள்.

இவர்கள் படித்த பட்டதாரிகளாக இருக்கலாம், பலவித பதவிகளை வகிப்பவர்களாக இருக்கலாம், பணம் படைத்தவர்களாக இருக்கலாம், இவர்கள்தான் இஸ்லாமிய சிந்தனையின் அடிப்படையை இழந்தவர்கள். இறை தூதர் அவர்கள் கூறுகிறார்கள் மரணத்திற்குப் பின்னுள்ள மறுமை வாழ்க்கைக்காகச் சிந்தித்துச் செயற்படக் கூடியவனே இஸ்லாத்தின் பார்வையில் புத்திசாலி.

எம்.சீ. கலீல். கல்முனை -05.

## கவிதைப்போட்டி இல 995



### சுதந்திரம்

பாராட்டுக்குரியது

ஆ! என் மீது ஏன்
ஏறி உட்கார்ந்தாய்?
ஆம். ஏறி
உட்கார்ந்துள்ளேன் தான்
எல்லோரையும் போல
உன் உடல் ஓரத்தில்
கூனிக் குறுகி ஒழிந்து
கொண்டிருக்க
எனக்கு விருப்பமில்லை
உயர்ந்து. ஒய்யாரமாக
உன்னையும் விடவும்
உயரத்தில்
பறந்து ஓடியாட விரும்பும்
நோக்கத்தில்
இப்போதே நான்
பயிற்சி பெற
விரும்புகிறேனே!

எஸ்.சண்முகநாதன், வெள்ளவத்தை.

## கவிதைப் போட்டி இல 998



### புரிகிறதா?

பாசம் என்பது
பறவைகளுக்குள்ளும்
பதிந்துள்ளது
பாராளுமன்றத்தில் இல்லை

எஸ்.பி.பாலமுருகன். பதுளை.

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 05.02.2013

கவிதைப் போட்டி இல. 998 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### அனர்த்த அடையாளம்



அடைமழை
அனர்த்தத்தில்
விடைபெற்ற
உயிரினத்தில்
பெடையும் குஞ்சுகளும்
இயல்பு வாழ்வில்
தடைப்பட்டுத் தவிப்பது
உயர்திணைக்கும்
உரியதுவே!

கிண்ணியா, முத்தாலிப்.

### ஒற்றுமை

இதுதான்
தாய்சேய் ஒற்றுமை!
இதுவரை
மனிதனுக்குள்
இல்லாததும் இதுதான்!

A.பாரிஸ், மிகிந்தலை.

### காப்பாற்று!

அன்னையின் அன்பான
அரவணைப்பில் பாசமுடன்
சந்தோசமாக
ஒன்று கூடி ஒற்றுமையுடன்
இருக்கும் பாசக்குஞ்சுகளே
உங்களைக் கொன்று- தன்
பசி தீர்ப்பதற்காக
வானத்தில் இருந்து வட்டமடித்து
பதுங்கி வருகின்றது - ஒரு
பருந்து சென்று மறைந்து
உங்கள் உயிர்களைக்
காப்பாற்றுங்கள்!

யோ.சரோ, கரணவாய்.



### சின்னாபின்னம்

கோழியைக் குஞ்சு மிதித்தாலும்
குஞ்சைக் கோழி மிதித்தாலும்
இரண்டுக்குமே விளையாது
ஒரு தீங்கும்- ஆனால்
பேரினமொன்று
சிற்றினங்களை மிதித்தாண்டால்
நாடே சின்னா பின்னம்.

அ.சந்தியாகோ, கண்டி

## உங்கள் பக்கம்

### தாதியர் பிரச்சினை நீங்குமா?

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற தாதியர்கள் தங்குவதற்கான விடுதி வசதி பற்றாக்குறை நீண்டகாலமாகவே காணப்படுகின்றது.

சுமார் 100 தாதியர் மட்டும் தங்கக் கூடிய விடுதியில் 200 பேரைத் தங்க வைக்க வேண்டிய சூழல் இருப்பதால் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது.

விடுதி வசதி வழங்கப்படாத தூரப் பிரதேசத்தைச் சேர்ந்த தாதிகள் தனியார் இடங்களிலும் பாதுகாப்பற்ற இடங்களிலும் தங்கி வருகின்றனர். இதனால் அவர்களினால் முழுமையான முறையில் சேவை செய்ய முடியாதிருக்கின்றது. அத்துடன் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த தாதியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்வதில் கூடிய ஆர்வம் காட்டிவருகின்றனர். இதனால் தாதியர்களின் பூரணமான அர்ப்பணிப்புமிக சேவையை யாழ். போதனா வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ள முடியாத சூழல் காணப்படுகின்றது.

தாதியர் விடுதி அமைப்பதற்காக மின்சார சபைக்குச் சொந்தமான காணி ஒன்று மின்சார சபையினால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. அதனைச் சட்டப்படி யாழ். மாவட்டச் செயலகம் கையளித்தால் விடுதி அமைப்புப் பணிகளை மேற்கொள்ள முடியுமென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் காண்பித்துவருகின்ற அசமந்தப் போக்கே குறித்த விடுதி அமைக்கும் திட்டம் இழுபட்டுச் செல்வதற்குக் காரணமாக இருக்கின்றது என்பது தாதியர்களின் குற்றச்சாட்டாகும்.

எனவே இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் உரிய முறையில் செயற்பட்டு தாதியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

எஸ்.திருநாவுக்கரசு
(தாதி ஒருவரின் தந்தை)


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலை நகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com





## வாசகர் சாலை



### சூடானவையே இல்லையா!

அற்புதன் காலத்தில் இருந்த சுவை, விறுவிறுப்பு கொஞ்சம் குறைவாகவே காணப்படுகின்றது. முரசின் மகுட வாசகம் போன்று சூடு, சுவை, சுவாரசியம் வரவேண்டியது அவசியமாகும். கூடுதலான பக்கங்களில் கட்டுரை களையே பிரசுரிக்கின்றீர்கள். அவை அறிவுபூர்வமானவையாக இருந்தாலும் எரிச்சலடைய வைக்கின்றது. முரசின் 1000 ஆவது இதழ் வரப்போகின்றது. அதிலிருந்தாவது மாற்றத்தைக் கொண்டு வாருங்கள்.

ஜே.லாஹிர், கல்முனை.

### பாராட்டப்பட வேண்டியவை!

தினமுரசின் சில பக்கங்கள் அருமையிலும் அருமை. பாப்பா முரசு24 ஆம் பக்கம், மருத்துவம், லேடீஸ் ஸ்பெஷல் பக்கம் என்பவை அறிவையும், அழகையும், மருத்துவ ரீதியாகவும் நல்ல பலாபலன்களை தரக்கூடியதாக இருக்கின்றது. இதைவிட எல்லாப் பக்கங்களும் பாராட்டப்பட வேண்டியவையே.

வே. பிரிந்தா, புலோலி.

### மாற்றங்கள் தேவை!

கடல் போன்று பலவற்றையும் கொண்டது தான் முரசு. பல்சுவை அம்சங்களையும் திறம்பட வாரி வழங்குகின்றாய். தொழில்நுட்ப வளர்ச்சியின் வேகம் அதீத முன்னேற்றத்தைத் தொட்டுக் கொண்டிருக்கின்றது. அந்தவகையில் தொழில்நுட்பம் சம்பந்தமானவை மற்றும் சிறு தகவல்களை எல்லாம் அள்ளி வழங்கலாமே.

எஸ்.அன்ரனி, மன்னார்.

### சிறந்த வழங்கி!

வாசகர்களின் தேவையறிந்து சில அம்சங்களை முரசு வழங்கி வருகின்றது. உணர்வு ரீதியான கதைகளை சிறு கதைப் பக்கத்தில் வழங்கி வருகின்றாய்.

'வலிகளின் சன்மானம்' கதை வறுமையின் வலிகளை யதார்த்த ரீதியாக சுமந்துகொண்டு தொடர்கிறது. மீனவ மக்களின் வாழ்வியல் சுவைகளையும். சுமைகளையும் கதையில் இழையோடியிருப்பது பிரமாதமாக உள்ளது. இவ்வாறு நிஜத்தை வரையுங்கள் ரமேஸ்.

எம்.ஜலீல், யாழ்ப்பாணம்.

### பிரமாதம்

புதுமலரில் இதழ்
பரப்பும் புத்தம் புதிய இதழே!
உன்னை உன்னைப் பாராட்டி
நன்றி தெரிவிப்பதில் நான் பெருமகிழ்வு
கொள்கின்றேன். நாடு
முழுவதும் நீ பறந்துசெல்கின்றாய்.
புன்னகை இதழ் என்றே உன்னை
எண்ணத்தோன்றுகின்றது. நீ சுமந்துவரும்
அனைத்து விடயங்களும் சூப்பரோ சூப்பர்.
எதை வாசித்து எதை
விடுவது என்று சில நேரங்களில்
யோசிக்கத் தோன்றும். வண்ண இதழாய்
நீ வந்து எம்மனதில் வட்டமடித்துச்
செல்வதை நினைத்து நான்
உளநெகிழ்ச்சி கொள்கின்றேன்.

எம். ஆஷா, வவுனியா.

# சிறார்களின் மனநிலைகளைப் புரிந்துகொண்டால் அவர்களை கல்விமான்களாக மாற்ற முடியும்

## சில்வேஸ்திரி அலன்ரின் எம்.பி

பாடசாலைக் கல்விக்காக சிறார்கள் கால் எடுத்து வைக்கும் நாள் அவர்களின் வாழ்க்கையின் ஓர் முக்கிய நிகழ்வாகவும் என ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) அவர்கள் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவு சைவப் பிரகாசம் வித்தியாலய கால்கோள் விழா நிகழ்விலும், கற்றல் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்விலும் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாடசாலைக் கல்விக்காக சிறார்கள் கால் எடுத்து வைக்கும் நாள் அவர்களின் வாழ்க்கையின் ஓர் முக்கிய நிகழ்வாகவும் அவர்களின் வாழ்க்கையை தீர்மானிப்பதாக கல்விச்செல்வம் திகழபோகின்றது. சிறார்களின் மனநிலைகளுக்கேற்றவாறும் அவர்களின் செயற்பாடுகளை புரிந்துகொண்டு அவர்களுக்கு ஏற்ற வகையில் ஆசிரியர்கள் கல்விகற்பிப்பதன் ஊடாக அவர்களை சிறந்த கல்விமான்களாக மாற்றமுடியும். விளையும் பயிரை முளையில் தெரியும் என்பார்கள். அதேபோன்று கல்விப்பாதையில் அத்திபாரமாக திகழப்போவது ஆரம்ப பாடசாலைக் கல்வியே. எனவே நாம் அனைவரும் அவர்களை சிறந்த நற்பிரஜைகளாகவும் கல்விமான்களாகவும் உருவாக்க உழைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தற்போது அனைத்துப் பாடசாலைகளிலும் சத்துணவுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. தீவக வலயப் பாடசாலைகளுக்கு குறித்த சத்துணவை இந்தப் பிரதேசங்களில் போதியளவு பெற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் வேறு பிரதேசங்களில் இருந்து பெற்று அவற்றை வழங்குவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். எமது வடபகுதி மக்கள் தற்போது சுமூகமானதோர் வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர். எமது வாழ்க்கையில் கல்வி எந்தளவிற்கு முக்கியம் என்பது அனைவருக்கும் தெரியும். எனவே ஆசிரியர்கள், அதிபர், பெற்றோர்கள் அனைவரும் சேர்ந்து உழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

# அலரிமாளிகையில் ரிஸானா நபீக்கின் குடும்பம்

சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பணிப்பெண் ரிஸானா நபீக்கின் குடும்பத்திற்கு 10 இலட்சம் ரூபா நிதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் தெரிவித்தார்.

ரிசானா நபீக்கின் குடும்பத்தினரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் சந்தித்துள்ளார்.

இதன்போதே, பணிப்பெண் ரிஸானா நபீக்கின் குடும்பத்திற்கு 10 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் தெரிவித்தார்.

அத்துடன் ரிஸானா நபீக்கின் சகோதரரிற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் திருகோணமலை மாவட்ட அலுவலகத்திலும் தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இந்த நியமனக் கடிதமும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இந்த சந்திப்பின்போது கையளிக்கப்பட்டது என நாடாளுமன்ற உறுப்பினர் தௌபீக் மேலும் தெரிவித்தார். இந்த சந்திப்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் மற்றும் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் ஆகியோரும் கலந்துகொண்டனர்.


இன்னும்...

02 வாரங்களில்

வாரமலர்

தினமுரசு

1000

தடம் பதிக்கின்றது...


## மொழிப் பிரச்சினைகள் வந்தால் அழையுங்கள் '1956'

நாட்டில் எப்பாகத்திலும் மொழி சம்பந்தமாக பிரச்சினைகள் வருமிடத்து 1956 என்ற இலக்கத்திற்கு அழைத்து முறைப்பாட்டினைப் பதிவு செய்யமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுக் கொள்கைக்கான அமைப்பின் கீழ் இயங்கும் மொழிச்சங்க உறுப்பினர்களுக்கான அனுபவப் பகிர்வு கடந்த 17ஆம் 18ஆம திகதிகளில் திருகோணமலை - கந்தளாய் இளைஞர் மன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு விளக்கமளிக்கும் போதும் மாற்றுக் கொள்கைக்கான அமைப்பின் பணிப்பாளர் சட்டத்தரணி லயனல் குருகே தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த மொழிச்சங்க உறுப்பினர்களின் அனுபவப் பகிர்வும் கலந்துரையாடலும் இதன்போது இடம்பெற்றது.

## கூடுதல் கட்டணம் அறவிட்ட நடத்துனருக்கு அபராதம்

கொழும்பில் இருந்து மாத்தளைக்கு பயணித்த தனியார் சொகுசு பஸ்ஸில் பயணிகளிடம் கூடுதல் கட்டணம் அறவிட்ட நடத்துநருக்கு 2,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன் பஸ் வண்டியை இரண்டு தினங்களுக்கு சேவையிலிருந்து இடைநிறுத்துவதற்கும் மத்திய மாகாண தனியார் போக்குவரத்து அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கொழும்பிலிருந்து மாத்தளைக்கான கட்டணம் 295 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த தனியார் சொகுசு பஸ் வண்டியில் பயணிகளிடம் 355 ரூபா கட்டணம் அறவிடப்பட்டதாக மத்திய மாகாண தனியார் போக்குவரத்து அதிகார சபையிடம் முறைபாடு செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்து பஸ் நடத்துனருக்கு அபராதமும் குறிப்பிட்ட பஸ் வண்டிக்கு இரண்டு நாள் போக்குவரத்து தடையும் விதிக்கப்பட்டுள்ளது.



**தாழ்த்தப்பட்டவர்களுக்கும் வறிய மக்களுக்கும் எதிரான கருத்துக்களைப் பகிரங்கமாகத் தெரிவித்து அரசியல் செய்வதற்குச் சாதகமான சூழ்நிலை பொன்னம்பலம் இராமநாதனின் காலத்தில் இருந்தது. அப்போது சர்வஜன வாக்குரிமை இல்லை. பணம் படைத்தவர்களும் படித்தவர்களுமே அன்றைய வாக்காளர்கள். தமிழ் வாக்காளர்களில் பெரும்பாலானோர் இராமநாதனின் சாதீய சிந்தனைக்குச் சார்பானவர்களாகவே இருந்தனர்.**

## வாழ்வின் எழுச்சிக்கு எதிரான பிரச்சாரம்

# கூட்டமைப்பின் சுயநல அரசியல்

### சங்கர சிவன்

**வா**ழ்வின் எழுச்சி (திவிநெகும) சட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கின்றது. கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாகத் தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமை வழங்கியவர்கள் பின்பற்றிய கொள்கையின் தொடர்ச்சியாகவே இந்த எதிர்ப்பைப் பார்க்க வேண்டியுள்ளது. வெவ்வேறு நிறப்பாத்திரங்களில் ஒரே பண்டத்தைப் போட்டு வைத்திருப்பதைப் போலத் தமிழ்க் காங்கிரஸ் முதல் தமிழ் தேசியக் "கூட்டமைப்பு" வரை ஒரே தலைமைப் பாரம்பரியமே தொடர்கின்றது. பொன்னம்பலம் இராமநாதன் போன்ற தலைவர்களின் வழிவந்த அரசியல் என்றும் இதைக் கூறலாம்.

பொன்னம்பலம் இராமநாதன் [illegible] சாதிப் பாகுபாட்டை வலியுறுத்தியவர். தாழ்த்தப்பட்ட மக்களையும் வறிய மக்களையும் அவர் மனிதர்களாகவே மதிக்கவில்லை... கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு மாணவிகளுடன் சமமாக இருந்து உணவு அருந்துவதற்கு அனுமதிக்கப்பட்டதற்கு எதிராக இவர் ஆளுநருக்கு முறைப்பாடு செய்தார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வறிய மக்களுக்கும் எதிரான மனோநிலை காரணமாகவே டொனமூர் ஆணைக்குழு சிபார்சு செய்த சர்வஜன வாக்குரிமையைப் பொன்னம்பலம் இராமநாதன் எதிர்த்தார். புல்லு வளர்வது போல வளர்கின்றவர்களுக்கு வாக்குரிமையா என்று அப்போது கேட்டார்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கும் வறிய மக்களுக்கும் எதிரான கருத்துக்களைப் பகிரங்கமாகத் தெரிவித்து அரசியல் செய்வதற்குச் சாதகமான சூழ்நிலை பொன்னம்பலம் இராமநாதனின் காலத்தில் இருந்தது. அப்போது சர்வஜன வாக்குரிமை இல்லை. பணம் படைத்தவர்களும் படித்தவர்களுமே அன்றைய வாக்காளர்கள். தமிழ் வாக்காளர்களில் பெரும்பாலானோர் இராமநாதனின் சாதீய சிந்தனைக்குச் சார்பானவர்களாகவே இருந்தனர்.

சுதந்திரத்திற்குப் பின் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கியவர்கள் புதிய நிலையிலேயே செயற்பட வேண்டியிருந்தது. சர்வஜன வாக்குரிமை நடைமுறைக்கு வந்த பின்னரே இத்தலைவர்கள் அரசியலுக்கு வந்தவர்கள். தாழ்த்தப்பட்ட மற்றும் வறிய மக்களின் வாக்குகளும் இத்தலைவர்களின் அரசியல் பதவிகளுக்குத் தேவைப்பட்டன. இராமநாதன் பின்பற்றிய சாதி மற்றும் வர்க்க ஒடுக்குமுறை அரசியலைப் பிற்காலத் தலைவர்கள் பகிரங்கமாகச் செய்ய இயலாது. எனவே மறைமுகமாக அதைச் செய்வதற்கு வசதியாக இனப்பிரச்சினையைத் தூக்கிப் பிடிக்கின்றனர்.

தமிழ் மக்கள் என்று இன்று பொதுப்படையாகச் சொல்கின்ற போதிலும் தமிழ் மக்கள் மத்தியில் ஒருமை நிலை இல்லை. அதாவது தமிழ் மக்கள் மத்தியில், வேறுபாடு இல்லாமல இல்லை. சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கப் பட்டவர்கள் ஒருபுறமும் அவர்களை ஒடுக்குபவர்கள் மறுபுறமுமாகத் தமிழினம் பிரிந்து நிற்கின்றது.

எல்லாத் தமிழ் மக்களுக்கும் பொதுவானதாகத் தேசிய இனப்பிரச்சினை இருக்கின்றது. அதேவேளை ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்குப் பிரத்தியேகமான பிரச்சினைகளும் இருக்கின்றன. இம் மக்களில் பெரும்பாலானோருக்குச் சொந்தமாக வீடோ காணியோ இல்லை. இவர்களுக்குப் போதுமான தொழில்வாய்ப்பும் இல்லை. எல்லோரும் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்கள். மேலே குறிப்பிட்ட தமிழ்த் தலைவர்கள் இந்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக எந்தக் காலத்திலும் கவனம் செலுத்தவில்லை. யாராவது இதைப் பற்றிக் கேட்டால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்றும் சொல்லி மழுப்புவார்கள். ஆனால் இனப்பிரச்சினைக்கான தீர்வையும் தட்டிக்கழித்துக் கொண்டே வருகின்றார்கள்.

தமிழ்க் காங்கிரஸ் முதல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரை பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் பெற்றவர்களைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனக் கூறுவதிலும் பார்க்க மேட்டுக்குடித் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்வதே பொருத்தமானது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பதை இவர்கள் விரும்பாததற்கு இதுவே காரணம். இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டால் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளில் தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அதனால் மேட்டுக் குடியினரின் அதிருப்திக்கு உள்ளாக நேர்ந்துவிடும் என்பதால் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு முயற்சிப்பதாகப் பாசாங்கு செய்துகொண்டு தீர்வுக்குத் தடையாகச் செயற்படுகின்றார்கள்.

இந்தத் தலைவர்களின் தந்திர அரசியலுக்குத் தகுந்த பதிலடியாக இப்போது வாழ்வின் எழுச்சித்திட்டம் வந்திருக்கின்றது. வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களைக் கைதூக்கிவிடுவதற்கான ஏற்பாடுகளை இச்சட்டம் கொண்டிருக்கிறது. வாழ்வின் எழுச்சிச்சட்டம் நடைமுறைக்கு வரும்போது ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்நிலை பெரிதும் உயரும். இதைச் ஜுணிக்க முடியாத தமிழ்த் தலைவர்கள் வாழ்வின் எழுச்சிக்கு எதிரான பிரசாரத்தில் இறங்கியிருக்கின்றார்கள்.

சாதீய ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கப்பட்டமக்களின் வாழ்க்கை நிலை வாழ்வின் எழுச்சித திட்டத்தின் கீழ் உயர்வதையிட்டு இரண்டுவிதமான அச்சத்துக்குத் தமிழ்த் தலைவர்கள் உள்ளாகின்றனர். இம்மக்கள் தங்கள் பிடியில் இருந்து விலகிவிடுவார்கள் என்பது ஒரு அச்சம். இதுவரை காலமும் இத்தலைவர்கள் சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் செய்யாது என்று சொல்லிச் சொல்லியே தங்கள் பிழைப்பை நடத்திக் கொண்டிருந்தார்கள். வாழ்வின் எழுச்சிச் சட்டம் மக்களுக்கு நேரடியாக நன்மை புரியும் போது தங்கள் போலி அரசியலை மக்கள் புரிந்துகொள்வார்கள் என்று இவர்கள் அஞ்சுவது நியாயமானது தான்.

வாழ்வின் எழுச்சிச்சட்டத்தைப் பயன்படுத்திக் கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் பலமடையலாம் என்பது கூட்டமைப்புத் தலைவர்களின் இரண்டாவது அச்சம்.

வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## இனவேறுபாடு வேரோடு அறுக்கப்படவேண்டும்!

கடந்த வாரம் மகரகமவில் முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமான வர்த்தக நிலையத்தை அகற்றக்கோரி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம், இலங்கையில் இன ஐக்கியத்தை சீர்குலைக்க எடுக்கப்படும் செயற்பாட்டின் இன்னொரு வடிவமாகவே இருந்தது.

புலிகள் அழிக்கப்பட்டபின்னர் தமிழ் மக்களை பொறிக்குள் வாழ நிர்ப்பந்திருப்பதுபோல் இந்த நாட்டின் இன்னொரு சிறுபான்மை இனமான முஸ்லிம் மக்களையும் வலிந்து வன்முறைக்குள் இழுக்க முயற்சிப்படுகின்றதோ என்று முஸ்லிம் மக்கள் சந்தேகிக்கின்றனர்.

தற்செயலாக நடக்கின்ற நிகழ்வுகளாக இவற்றை கருதமுடியவில்லை. திட்டமிட்டு முஸ்லிம் மக்களை வெறுப்பேற்றுவதுபோல் உள்ளது.

இவ்விடயங்களின் ஆணிவேர் கண்டுபிடிக்கப்பட்டு அறுக்கப்படாமல் இருப்பதே குறித்த சந்தேகங்களை உறுதி செய்கின்றன. பள்ளிவாசல்களில் தாக்குதல், ஹலால் பிரச்சினை, இப்போது வர்த்தக நிலையங்களை குறிவைக்கும் பிரச்சினை. இது நாள் வரை இவ்வாறான பிரச்சினைகள் எழவில்லை.

புலிகள் ஒரு பிரச்சினையாக இருந்தவரை சும்மா இருந்துவிட்டு, இப்போது எத்தனை தமிழ் கடைகள் இருக்கின்றன? எத்தனை முஸ்லிம் கடைகள் இருக்கின்றன? என்றும் எந்த ஊரில் எந்த இனத்தவர் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள்? என்று ஆராய்ந்து பார்க்கத் தொடங்கியிருக்கின்றார்கள்.

சிறுபான்மை இனங்கள் எல்லா வகையிலும் சிறுபான்மையினராகவே இருக்கவேண்டும் என்று சிந்திக்கின்றவர்களாலேயே இவ்வாறான தாக்குதல்கள் தொடுக்கப்படுகின்றன. இந்த நிலைமையானது இலங்கைக்கு ஆரோக்கியமானதல்ல.

அது நாட்டின் ஒருமைப்பாட்டையும், ஐக்கிய உணர்வையும் சிதைத்துவிடும், ஒற்றுமையின் வேர்களை அறுத்துவிடும். எனவே கண்டனத்துக்குரிய இன வேறுபாட்டையும், சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களையும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

சிறுபான்மையினரை அரவணைத்தும், அவர்களுக்கான உரிமைகளை மதித்தும் வாழாத பெரும்பான்மையினரின் இருப்பானது மதிக்கத்தக்கதாக இருக்காது. அத்தகைய பெரும்பான்மையினர் தமது உரிமைகளையும், இறைமையையும் முழுமையாக அனுபவிக்க முடியாதவர்களாகவே வாழ்வார்கள் என்பதை உலக வரலாறுகள் நிரூபித்திருக்கின்றன.

இன்னொருவருக்கு உன்னால் வழங்கப்படாததை நீயும் பெற்றுக் கொள்ளமுடியாது. இந்த உலக உண்மையை இலங்கையர்கள் அனைவரும் உணர்ந்து வாழ்வது நமக்கும், நாட்டுக்கும் நல்லதாகும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# அபிவிருத்தியும் அரசியல் தீர்வும் தமிழர்களின் பயணமும்!

**கூட்டமைப்பினர் ஒருபோதும் தமிழ் மக்களுக்கு தீர்வொன்னைப் பெற்றுத்தரப்போவதில்லை என்பது தெளிவாகின்றது. எனவே தமிழ் மக்கள் அரசியல் தீர்வா? அபிவிருத்தியா? என்று சிந்திக்காமல் சமாந்தரமான பயணத்திற்குத் தயாராகவேண்டும். யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக நடைபெறும் வர்த்தகக் கண்காட்சியானது தமிழ் மக்களின் சிந்தனையை தூண்டியிருக்கவேண்டும். அதே போல் வாழ்வெழுச்சித்திட்டமானது தமிழ் மக்களுக்கு பல நன்மைகளை கொண்டிருக்கின்றது. பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவும் பல திட்டங்கள் வாழ்வெழுச்சித் திட்டத்தில் உண்டு.**

**தமிழ்** மக்களிடம் இரண்டு கேள்விகள் முன் வைக்கப்படுகின்றது. தமிழ் மக்களுக்கு அபிவிருத்தி வேண்டுமா? அரசியல் பிரச்சினைக்கு தீர்வு வேண்டுமா? இப்படி கேட்கின்றவர்கள் தமிழ்க் கூட்டமைப்பினர்.

ஆனால் தமிழ் மக்கள் எல்லாமும் இழந்து சுமார் நான்கு தசாப்தங்களுக்குப் பிறகு இப்போதுதான் உயிர் அச்சுறுத்தல் இன்றியும் அடுத்த விடியலின் மீது நம்பிக்கையோடு உறங்கச் செல்கின்றனர். சரி பாதி, பிழை பாதியாக சில நிகழ்வுகள் நடந்தேறினாலும் ஒரு நிம்மதி இருக்கின்றது.

கண்காணிக்கப்படுகின்ற வாழ்க்கை, எழுதப்படாத சட்ட அமுலாக்கங்கள், அதிகார துஷ்பிரயோகங்கள் மற்றும் எந்தத் தேவைகளுக்காகவும் குரல் கொடுக்க முடியாத வாழ்க்கையை தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இப்படியெல்லாம் குற்றச்சாட்டுக்கள் இருக்கவே செய்கின்றது.

தமிழ் மக்களை மிகச் சுதந்திரமாக வாழவிட்டுவிடக் கூடாது என்று சிலரும், தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்ந்துவிட்டால் தமக்கு வாழ்க்கை போய்விடும் என்று அஞ்சுகின்றவர்களுக்குமிடையே தமிழ் மக்கள் வசமாக மாட்டிக் கொண்டுள்ளார்கள்.

தமிழ் மக்களுக்கு பிரச்சனைகள் இருக்க வேண்டும் என்பதற்காகவே அரசியல் முடக்கத்தையும், இளைஞர், யுவதிகளை உசுப்பேற்றிவிடுவதை திட்டமிட்டு செயற்படுத்தி வருகின்றனர்.

தம்மைத் தாமே தமிழர்கள் ஆழுகின்ற தீர்வு தமிழ் மக்களுக்கு கிடைக்கவேண்டும் என்று கூறும் கூட்டமைப்பினர், அதை அடைந்து கொள்வதற்கான வழிவகையையும், அதில் இருக்கக்கூடிய நடைமுறைச் சிக்கல்களையும் தமிழ் மக்களுக்கு எப்போதும் எடுத்துவிளக்கியதில்லை.

இந்திய பத்திரிகையாளர் ஒருவர் கூறியதுபோல், தமிழ் மக்களும் இலேசுப்பட்டவர்கள் இல்லை. வெட்டிப் பேச்சு ஆசாமிகள் உரு ஏற்றும்போது அப்படியே புல்லரிப்பு ஏற்பட்டு மயங்கி விடுவார்கள். தமிழ் தேசிய உணர்வில் தம்மை மறந்துவிடுவார்கள். அதற்காக வாக்குப்போடுவார்கள், பணம் வழங்குவார்கள், கொஞ்சம் அதிகமாகிவிட்டால் தோளில் தூக்கிக் கொண்டு ஊர்வலம் வருவார்கள்.

அரசியல், பொருளாதாரம், அபிவிருத்தி என்பவை பற்றியெல்லாம் சிந்திக்க மாட்டார்கள். அவ்வப்போது கலாசாரம், பன்பாடு என்று இடைக்கிடையே பேசிக் கொள்வார்கள். யாராவது துரோகள் யார்?தமிழ்தேசிய வாதிகள் யார்? என்று பட்டிமன்றம் நடத்தினால் அதை வேடிக்கை பாரப் பார்கள். எப்போதும் பார்வையாளராகவே இருந்துவிடுவார்களாம்.

இப்படித்தான் தமிழ் மக்களின் வட்டத்துக்கு வெளியில் இருந்து பார்ப்பவர்கள் தமிழ் மக்களைப் பற்றி மதிப்பீடு செய்கின்றார்கள்.

அவை எதையும் கணக்கில் எடுக்காமல் உலகப்பரப்பில் சில இலட்சம்பேராக மட்டும் இருக்கும் இலங்கைத் தமிழ் மக்கள், தந்திரோபாயங்களற்று பிரச்சினைகளை மட்டும் பேசுகின்றவர்களாக வாழ்கின்றோம். தீர்வுகளை மூன்றாம் தரப்புகள் வாங்கித்தரும் என்று கிறுக்கர்கள் கூறும் வெட்டிப் பேச்சுக்களை கேட்டுக் கொண்டிருக்கின்றோம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு அபிவிருத்தியும் வேண்டும், கௌரவமான அரசியல் தீர்வும் வேண்டும். அதே வேளை அழிந்த நமது வாழ்விடத்தை மீண்டும் புதுப்பொலிவோடு தூக்கி நிறுத்த அர்த்தபூர்வமான மீள்கட்டுமானமும் தேவை.

இந்த மூன்று நோக்கங்களையும் தமிழ் மக்கள் சமாந்தரமாகவே பார்க்கின்றார்கள். இவை எதுவும் தனித்தனியான பயணங்களில்லை. நிரந்தரமான அரசியல் தீர்வு கட்டாயம் பெறப்பட வேண்டும். அதற்காக அபிவிருத்தியையும், மீள்கட்டுமானத்தையும் புறம் ஒதுக்கித் தள்ளிவிடமுடியாது. இப்படியொரு தெளிவான செய்தியை தமிழ் மக்கள் இலங்கை அரசுக்கும், சர்வதேசத்துக்கும் வழங்கவேண்டும்.

மக்களின் செய்தி என்பதை தேர்தல் முடிவுகளாகவே உலகம் பார்க்கின்றது. ஆனால் தமிழ் மக்கள் தேர்தல்களில் தந்திரோபாயமற்ற உணர்ச்சி அரசியலுக்கும், பகைமை அரசியலுக்கும் தமது ஆதரவை இதுவரை காட்டியதால் மீள முடியாத பின்னடைவுகளையே சந்தித்துள்ளனர்.

இந்தப் பின்னடைவும் கூட இனத்தின் பாதுகாப்பையும், கலை கலாசாரத்தையும், பண்பாட்டையும் சிதைத்துப் போட்டுள்ளது என்ற புரிதல் ஏற்படவேண்டும். இதுவரையான தவறுகள் திருத்தப்படுதல் அவசியமாகும்.

ஆயுத வன்முறைக்கும், எதிர்ப்பு அரசியலுக்கும் எத்தனையோ வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுவிட்டது. அதனால் தமிழ் மக்கள் கண்ட பலன் எதுவும் இல்லை. பெறப்பட்டதெல்லாம் அழிவுகளும், இழப்புக்களும்தான்.

எதிர்காலத்தையிட்டு தமிழ் மக்கள் பொறுமையோடும், புத்தி சாதுரியத்தோடும் சிந்திக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்கள் நடைமுறை யதார்த்தத்துக்கும், காலமாற்றத்துக்கும் வாய்ப்பொன்றை வழங்கா விட்டால் இதே அநாதரவும், ஒப்பாரிகளுமே மிச்சமாக இருக்கப்போகின்றது.

மீண்டும் அகிம்சைப்போராட்டத்துக்கு இளைஞர், யுவதிகளை தயாராக இருக்குமாறு அழைப்புவிடும் இவர்கள், 77ஆம் ஆண்டு அழைத்ததற்காக தமிழ் மக்கள் கொடுத்த விலை மிக அதிகமாகும். இனியும் அவ்வாறானதொரு விலையை தமிழ் மக்களால் வழங்க முடியாது. ஆனாலும் கூச்சமில்லாமல் தமிழ் மக்களை நோக்கி அழைப்பு விடுகின்றார்கள்.

இது தமிழ் மக்களை துடைத்தழிக்க விரும்பும் தீயநோக்கம் கொண்ட முயற்சியாகும். தமிழ் மக்கள் விழிப்படைய வேண் டும். இன்றுவரையிலும் தந்தை செல்வாவின் சிந்தனைகளையும், இராசமாணிக்கத்தின் சிந்தனைகளையும் கூறி தமது கையாலகாத்தனத்தை மறைக்கின்றார்கள். தமது செயற்பாடுகளால் இதுவரை தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட நன்மைகளையும்,வெற்றிகளையும் இவர்களால் பட்டியலிட முடியாது. அப்படி எதுவும் இவர்களிடம் இல்லை.

இப்போது எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் மகா நாட்டில் இலங்கை அரசுக்கு காத்திருக்கும் சவால்களையும், நெருக்கடிகளையும் ஏதோ இவர்களே ஏற்படுத்தியிருப்பதாக கூறுகின்றார்கள். இலங்கை அரசு அந்தச் சவாலையும் எதிர்கொள்ளும், அல்லது அதற்கான பரிகாரத்தைச் செய்யும். அதனால் தமிழ் மக்களுக்கு ஒன்றும் ஏற்பட்டுவிடாது. யாருடைய காதையும் முறுக்கி சர்வதேசம் தமிழ் மக்களுக்கு அதுவும் இவர்கள் கூறுவதுபோல் தனிநாட்டுக்கு ஒப்பான தம்மைத் தாமே ஆளுகின்ற தீர்வை வாங்கி தமிழ் மக்களிடம் தந்துவிடாது.

மார்ச் மாதத்துக்குப்பின்னர் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கு கூறப்போகும் நொண்டிச்சாட்டு எது? என்பதை இப்போதிருந்தே தேடிக் கொண்டிருப்பார்கள். இலங்கை அரசுடன் வெளிப்படையான பேச்சுக்களை நடத்த இவர்கள் எப்போதும் தயாராக இல்லை.

ஆகவே கூட்டமைப்பினர் ஒருபோதும் தமிழ் மக்களுக்கு தீர்வொன்றைப் பெற்றுத்தரப்போவதில்லை என்பது தெளிவாகின்றது. எனவே தமிழ் மக்கள் அரசியல் தீர்வா? அபிவிருத்தியா? என்று சிந்திக்காமல் சமாந்தரமான பயணத்திற்குத் தயாராக வேண்டும். யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக நடைபெறும் வர்த்தக கண்காட்சியானது தமிழ் மக்களின் சிந்தனையை தூண்டியிருக்க வேண்டும். அதேபோல் வாழ்வெழுச்சித்திட்டமானது தமிழ் மக்களுக்கு பல நன்மைகளை கொண்டிருக்கின்றது. பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவும் பல திட்டங்கள் வாழ்வெழுச்சித் திட்டத்தில் உண்டு.

தொழில் முயற்சியிலும், பொருளாதாரத்திலும், கல்வியிலும் தமிழ் மக்கள் உயர்ந்து நிற்கும்போது முன்வைக்கப்படும் கோரிக்கைளில் ஒரு வலிமை இருக்கும். சவால்களை எதிர்கொள்ளும் வலிமை கிடைக்கும். ஒடுக்குமுறைகளை தகர்த்து வாழ முடியும் என்ற நம்பிக்கை உயிர்ப்புப் பெறும்.

சிவன்

**ரிஷி**




# புலிகளின் வீழ்ச்சி! இறுதி நாட்கள்...

**2002ஆம்** ஆண்டுவரை, விடுதலைப் புலிகளுக்கு ஆயுத சப்ளை செய்துவந்த கே.பி.யிடம் இருந்து அந்தப் பொறுப்பு மற்றையவர்களின் கைகளுக்கு மாறியபின், ஆயுத சப்ளை செயின் எப்படியெல்லாம் அறுந்தது. யார் யாரெல்லாம் போட்டு குழப்

ஏற்ற வகையில் எப்படி மாற்றி அமைக்க வேண்டும் என்ற ரிப்போர்ட் ஒன்றை தயாரித்து கொடுத்தது யார் தெரியுமா? அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு!

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் யுத்த திட்டமிட லாளர்கள் அடங்கிய டீம் ஒன்று இலங்கை சென்று சுமார் 10 நாட்கள் தங்கியிருந்து, இலங்கை இராணுவத்தின் பிளஸ்கள் எவை, மைனஸ்கள் எவை என்று கணித்து, விடுதலைப்புலிகளை

கிடைத்தபின், 2003ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் இரு ஆயுதக் கப்பல்கள் மூழ்கடிக் கப்பட்டன. இரண்டுமே டேங்கர் ரக கப்பல் கள். அதன்பின் 3 ஆண்டுகளுக்கு தாக்குதல் ஏதுமில்லை. மீண்டும் 2006ஆம் ஆண்டு, செப்டெம்பர் 17ஆம் திகதி, இலங்கை மட்டக் களப்பில் இருந்து கிழக்கே 240 கி.மீ. தொலை வில், கடலில் வைத்து புலிகளின் மற்றொரு இலங்கை கடற்படையால் கப்பல் மூழ்கடிக் கப்பட்டது. அதுவும் டேங்கர் ரக கப்பலே.

ஒருவகையில் பார்த்தால், இந்தக் கப்பல் முற்றுமுழுதாக கடற்படை தாக்குதலில் மூழ்கடிக்கப்படவில்லை. விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்களும் வந்து குண்டு வீசி, விடுதலைப் புலிகளின் டேங்கரை மூழ்கடித்தன.

அந்த கப்பல், இலங்கை கரைக்கு அருகில் வரும் தகவல் எப்படி கடற்படைக்கு கிடைத்தது?

விடுதலைப் புலிகளின் சட்டலைட் போன் உரையாடல்களை ஒட்டுக் கேட்பதன் மூலம் அந்தத் தகவல் கிடைத்தது.

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல், இலங்கை கரையில் இருந்து 300 கடல் மைல்களுக்கு அப்பால் வந்தபோது, கப்பலில் இருந்தவர்கள், சட்டலைட் போன் மூலம்

கொழும்பு பத்திரிகைகள், டி.வி. எல்லாமே கடற்படையும், விமானப்படையும் கூட்டாக சேர்ந்து செய்த இந்த ஒப்பரேஷனை ஆஹா, ஓஹோ என்று புகழ்ந்து தள்ளின.

இந்த புகழால் வந்தது, சிக்கல்!

இலங்கை இராணுவத்துக்கும், கடற்படைக் கும் இடையே உரசல்கள் இருந்தன! கடற் படையும், விமானப்படையும் கூட்டாக பேர் வாங்கிக் கொண்டு போனதை, இராணுவத்தில் இருந்த ஒரு பிரிவினரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

அவர்களது கோபத்துக்கு காரணம், என்னதான் கடற்படையும், விமானப்படை யும் தாக்குதல் நடத்தினாலும், Directorate of Military Intelligence ஒட்டுக் கேட்டு தகவல் சொல்லாவிட்டால், இவர்களால் தாக்கியிருக்க முடியுமா? இராணுவ உளவுத் துறைக்கு புகழில் பங்கு கிடைக்கவில்லை!

இராணுவத்தில் உள்ள கோபம் கொண்ட பிரிவினர், கொழும்பில் இருந்து வெளியாகும் சண்டே டைம்ஸ் பத்திரிகையின் இராணுவ செய்தியாளர் இக்பால் அத்தாஸ் என்பவரை அழைத்து, விடுதலைப் புலிகளின் சட்டலைட் போன் ஒட்டுக் கேட்கப்பட்ட விஷயத்தை

## கடலில் சங்கமமான கப்பல்கள்; காட்டிக் கொடுத்தது அமெரிக்கா



யுத்தத்தில் ஜெயிக்க வேண்டுமானால், இலங்கை இராணுவத்தை எப்படி மாற்றி அமைக்கவேண்டும் என அறிக்கை ஒன்றை கொடுத்தது. US Defence Department Report on SL 2002 என்ற அந்த ரிப்போர்ட்டின் முக்கிய விஷயம்:

பினார்கள் என்பதை முன்னர் பார்த்தோம்.

விடுதலைப் புலிகள் யுத்தத்தில் தோல்வி யடைந்த காரணங்களில் மிக முக்கியமான காரணம் அதுதான். அதாவது, யுத்தம் புரிய ஆயுதங்கள் போய்ச் சேரவில்லை.

இப்போது மும்பை வழியாக சென்னைக்கு ஆயுதங்கள் கொண்டு வந்த கதையைப் பார்க்க முன்னர், மற்றொரு கோணத்தில் இந்த தொடர் திரும்புகிறது.

இலங்கை இராணுவம் இந்த யுத்தத்தை எப்படி, யாருடைய உதவியுடன் ஜெயித்தது? யார், என்னவெல்லாம் செய்தார்கள்? எப்படிச் செய்தார்கள்?

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதான பேச்சு வார்த்தை தொடங்கியபோது, எப்படியும் மீண்டும் யுத்தம் வெடிக்கும் என்று அனைவருக்கும் தெரியும். காரணம், அதற்குமுன் நடந்த பேச்சுவார்த்தைகள் யாவும் அப்படியே முடிந்தன. இருதரப்பும், யுத்த ஏற்பாடுகளை செய்வதற்கே பேச்சு வார்த்தை காலங்களைப் பயன்படுத்தினார்கள்.

அந்தவகையில், சமாதான பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்த போதே, 2002ஆம் ஆண்டு, இலங்கை இராணுவத்தை போருக்கு

விடுதலைப் புலிகளுக்கான ஆயுத சப்ளை முற்றாக நிறுத்தப்பட்டால்தான், யுத்தத்தில் இலங்கை இராணுவம் ஜெயிக்க முடியும். அதற்காக இலங்கை கடற்படை சீரமைக்கப்பட வேண்டும். இலங்கை கடற்படையில், Corvettes, Frigates, Destroyers, Battleships ஏதும் இல்லாத நிலையில், ஆழ்கடல் யுத்தத்தில் ஈடுபடும் வசதியை கடற் படை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த பரிந்துரை, இலங்கை பாதுகாப்பு அமைச்சால் மிகவும் சீரியஸாக எடுத்துக் கொள்ளப்பட்டது. கடற்படையில் மாற்றங்கள் செய்யப்பட்டன.

விடுதலைப் புலிகளுடன் இறுதி யுத்தத்தில் இலங்கை இராணுவம் 2009ஆம் ஆண்டு, வெற்றி பெற்றது. அந்த வெற்றிக்கு அடித்தளம் போடப்பட்டது, 2007ஆம் ஆண்டு. இலங்கை இராணுவத்தில் 2007ஆம் ஆண்டை, 'கடற்படை யின் ஆண்டு' என்கிறார்கள். அந்த ஆண்டுதான், விடுதலைப் புலிகளின் முக்கிய ஆயுதக் கப்பல்கள் பல ஒவ்வொன்றாக தாக்குதலுக்கு உள்ளாகி, மூழ்கடிக்கப்பட்டன.

2002ஆம் ஆண்டு அமெரிக்க அறிக்கை

**விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல், இலங்கை கரையில் இருந்து 300 கடல் மைல்களுக்கு அப்பால் வந்தபோது, கப்பலில் இருந்தவர்கள், சட்டலைட் போன் மூலம் வன்னியில் உள்ளவர்களுடன் தொடர்பு கொண்டார்கள். வன்னியில் இருந்த புலிகளின் முக்கியஸ்தர்கள் பலரது சட்டலைட் போன்கள் ஒட்டுக் கேட்கப்பட்டது, புலிகளுக்கு தெரியாமல் இருந்தது.**

வன்னியில் உள்ளவர்களுடன் தொடர்பு கொண்டார்கள். வன்னியில் இருந்த புலிகளின் முக்கியஸ்தர்கள் பலரது சட்டலைட் போன்கள் ஒட்டுக் கேட்கப்பட்டது, புலிகளுக்கு தெரியாமல் இருந்தது.

இலங்கை ராணுவத் தலைமையகத்தில், Directorate of Military Intelligence அலுவலகம் 2ஆம் மாடியில் இயங்குகிறது. இதில் வலது கோடியில் உள்ள ஆபரேஷன் ரூமில், விடுதலைப் புலிகளின் சட்டலைட் போன்கள் ஒட்டுக் கேட்கப்படும் கருவிகள் இருந்தன. 24 மணி நேரமும், இந்த ஒட்டுக் கேட்கும் கருவியில், இராணுவ உளவுப் பிரிவினர் பணியில் இருந்தார்கள்.

அப்படி ஒட்டுக் கேட்ட தகவல் மூலம், புலிகளின் கப்பல் வரும் விஷயம் தெரிய, இலங்கை கடற்படையும் விமானப்படையும் கூட்டாக சேர்ந்து, அந்த கப்பலை மூழ்கடித்தன.

சொல்லி, அதனால்தான் புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது என்ற இரகசியத்தை அவிழ்த்துவிட்டார்கள்.

இக்பால் அத்தாஸ் மிக்க ஆனந்தத்துடன், அடுத்த ஞாயிற்றுக்கிழமை வெளியான பத்திரிகையில் விலாவாரியாக போட்டு வாங்கிவிட்டார். உடனே, விடுதலைப் புலிகளின் தளபதிகள் சட்டலைட் போன்களில், இதுபோன்ற விஷயங்களை பேசுவதை நிறுத்திக் கொண்டார்கள்.

கொதித்து போனது, இலங்கை கடற் படை. ஆனால், எதுவும் செய்ய முடிய வில்லை. காரணம், ஒட்டுக் கேட்டல் முழுவதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த இலாகாவால் நடத்தப்பட்டது. அவர்களாக பார்த்து தகவல் கொடுத்தால் தான், கடற்படைக்கு எதுவும் தெரியும் என்ற நிலை.

அப்போது இலங்கை கடற்படைக்கு தளபதியாக இருந்தவர், அட்மிரல் வசந்த கரன்னகொட.

அட்மிரல் வசந்த கரன்னகொட, 2005ஆம் ஆண்டு செப்டெம்பர் 1ஆம் திகதி, இவர் இலங்கை கடற்படைக்கு தளபதியாக்கப்பட்டார். அவர் தலைவராகி சரியாக 1 வருடத்தின்பின் 2006ஆம் ஆண்டு செப்டெம்பர் 17ஆம் திகதி, புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. அத்துடன், புலிகளின் போன் உரையாடலில் இருந்து உளவுத் தகவல் கிடைப்பது அறுந்துபோனது.

அட்மிரல் வசந்த கரன்னகொடவுக்கு, அமெரிக்க தூதருடன் மரியாதை நிமித்த சந்திப்பு ஒன்றுக்கு நேரம் ஒதுக்கப்பட்டி ருந்தது. மரியாதை நிமித்த சந்திப்பு என்று தொடங்கி, சீரியஸாக 1 மணி நேரம் நீடித்தது, அந்த சந்திப்பு.

(தொடரும்...)

# ஓர் இரகசிய கொலைத் திட்டம்

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

**அப்பார்ட்** மென்ட் பில்டிங்கை நோக்கி நடந்தார். பில்டிங்கின் முன்புறக் கதவு முழுமையாக கண்ணாடியினால் ஆனது. அதை நெருங்கினார். அவரது கையில் ஒரு ரோல் பிளாஸ்டிக் ஷீட் இருந்தது.

மற்றைய இரண்டு ஜோடி உளவாளிகளில் ஒரு ஜோடி யிடம், அப்துல்லாவைச் சுடு வதற்காக சைலன்சர் பொருத் தப்பட்ட துப்பாக்கி இருந்தது. மற்றைய ஜோடியிடம் லப்டொப் கம்பியூட்டரும், போன் இணைப்பை ஒட்டுக்கேட்கும் கருவிகளும் இருந்தன.

ரூபன்ஸ்டெயின் அப்பார்ட்மென்ட்டின் கண்ணாடிக் கதவை நெருங்கியவுடன், முதலாவது ஜோடி காரிலிருந்து இறங்கினார்கள். அவர்களில் ஆணின் ஜாக்கெட்டுக் குள் துப்பாக்கி இருந்தது.

இருவரும் அப்பார்ட்மென்ட்டில் உள்ள யாரோ ஒரு நண்பரைப் பார்க்கப் போவது போல, பில்டிங்கை நோக்கி கைகளைக் கோர்த்தபடி இயல்பாக நடந்து சென்றார்கள்.

இப்படியான வேலைகளுக்கு தனியே ஆண் உள வாளிகளை மாத்திரம் பயன்படுத்தினால் சந்தேகம் ஏற்படும் என்ற காரணத்தால்தான், பெண் உளவாளி களையும் சேர்த்தே அனுப்புவது மொசாத்தின் வழக்கம். ஆணும் பெண்ணும் ஜோடியாக ஒரு காரியத்துக்குச் செல்லும்போது, அவர்கள் கணவன் மனைவி, அல்லது காதலர்கள் என்ற நினைப்பு தோன்றும். சந்தேகம் அவ்வளவாக ஏற்படாது.

ஒட்டுக்கேட்கும் கருவியை வைத்திருந்த ஜோடி காரை விட்டு இறங்கவில்லை. காருக்கு உள்ளே இருந்தபடி லப்டொப் கம்பியூட்டரும் இயக்கி அப்துல்லாவின் வீட்டு தொலைபேசிக்கு வேறு ஏதாவது அழைப்புகள் வருகின் றனவா என்று கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த நள்ளிரவு நேரத்தில் தனியாக ஒரு ஆள் காரில் அமர்ந்து கவனித்துக் கொண்டிருந்தால் பார்ப்பவர்களுக்குச் சந்தேகம் ஏற்படும். காருக்குள் இருப்பவர்கள் ஒரு ஆணும் பெண்ணுமாக இருந் தால் அவர்கள் காதலர்கள் - ஏதோ பேசிக் கொண்டி ருக்கிறார்கள் என்று பார்ப்பவர்கள் நினைப்பார்கள் என்பதால் அந்த ஏற்பாடு.

திட்டம் எல்லாம் கச்சிதமாகவே இருந்தது. ஆனால்




இவர்கள் எதிர்பார்த்திராத மற்றுமோர் காரியமும் அங்கே நடந்து கொண்டி ருந்தது.

இவர்களால் இலக்கு வைக்கப்பட்ட அப்பார்ட் மென்ட் பில்டிங்குக்கு எதிரே, மற்றுமோர் அப் பார்ட்மென்ட் பில்டிங்கும் இருந்தது. அதன் மூன்றா வது மாடியில், வீதியைப் பார்த்தபடியிருந்த ஜன்னல் ஒன்று, அந்த நள்ளிரவு நேரத்தில் திறந்து கொண்டது.

ஜன்னலைத் திறந்தவர் நடுத்தர வயதைத் தாண்டிய ஒரு சுவிஸ் பெண்மணி. இந்தப் பெண்மணியின் அடையாளங்கள் பின்னாட்களில் மறைக்கப்பட்டன. இந்த விவகாரம் பின்னாட்களில் ஒரு கிரிமினல் வழக் காக சுவிஸ் நீதிமன்றம் ஒன்றுக்கு வந்தபோது, இந்தப் பெண்மணியின் பெயரை திருமதி S என்றே சுவிஸ் பொலிஸ் குறிப்பிட்டிருந்தது. அவர் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படவேயில்லை. அவரது அடையாளங் கள் அனைத்தும் சுவிஸ் பொலிஸால் மறைக்கப்பட்டது.

வழக்கு இஸ்ரேலிய உளவுத்துறை மொசாத்துக்கு எதிராக நடைபெற்ற காரணத்தால், இந்த நடுத்தர வயது பெண்ணின் அடையாளம் அறியப்பட்டால், மொசாத் அவரை பழிவாங்கலாம் என்ற நினைப்பில் சுவிட்சலாந்துப் பொலிஸார் அப்படிச் செய் திருக்கலாம்.

*(முற்றும்)*




**வெற்றிக்களிப்புடன்** க'அபாவுக்குள் நுழைந்த முஸ்லிம் இராணுவ வீரர்களுக்கு முகம்மது ஓர் உத்தரவை இட்டிருந்தார். யாரையும் கொல்லாதீர்கள். யாரையும் எதிரி என்று எண்ணாதீர்கள். யாரையும் கைது செய்யவும் வேண்டாம்.

உலக சரித்திரத்தில் இன்று வரை இதற்கு நிகரானதொரு சம்பவம் எந்த தேசத்திலும், எந்தப் போர்க்களத்திலும் நடந்ததில்லை. தோல்வியுற்ற மக்கா இராணுவத்தினர் ஒருவர்கூட கைது செய்யப்படவில்லை. கொல்லப்படவில்லை. மாறாக, "உங்கள்மீது எந்தக் குற்றமும் இல்லை. எல்லாவற்றிலிருந்தும் நீங்கள் விடுதலை பெற்றீர்கள். மனிதர்களுக்கு இடையில் இதுகாறும் இருந்துவந்த அனைத்து ஏற்றத்தாழ்வுகளையும் வெறுப்பையும் காலடியில் இட்டு நசுக்கி விடுவோம்" என்று சொன்னார் முகம்மது நபி.

தொடங்கினார்கள். கல்வி பயிலத் தொடங்கியதனாலேயே தமது கலாசாரச் செழுமை புரிந்தவர்களானார்கள். கலாசார பலம் உணர்ந்ததனாலேயே அதனைக் கட்டிக் காக்க வேண்டிய அவசியத்தைப் புரிந்துகொண்டார்கள்.

காட்டரபிகள்!

இனி யார் அப்படிச் சொல்லிவிட முடியும்? இந்தச் சந்தர்ப்பத்தில் தான் அராபியர்கள் தமது நிலப்பரப்பின் புவியியல், அரசியல் சார்ந்த உண்மைகளையும் உணரத்தொடங்கினார்கள். எல்லைகளால் பிரிந்திருந்தாலும் முஸ்லிம்கள் என்கிற அடையாளத்தால் தாங்கள் ஒரே மக்கள் தாம் என்பதையும் உணரத்தொடங்கினார்கள். தங்களுடன் இணைந்து வசிக்கும் யூதர்களும் கிருத்தவர்களும் எந்தெந்த வகையில் தம்மிடமிருந்து மாறுபட்டிருக்கிறார்கள் என்பதையும் விழிப்புணர்வுடன் கவனிக்க ஆரம்பித்தார்கள்.

மக்கா வெற்றிக்கு இரண்டு



இதனை அவர் மன்னராகச் சொல்லவில்லை. ஒரு இறை தூதராகச் சொன்னார். அந்தக் கருணை பீறிட்ட உள்ளம்தான் இஸ்லாத்தின் வானளாவிய வளர்ச்சியின் அஸ்திவாரம். அன்றைய தினம் தொடங்கி இஸ்லாம் 'பரப்பப்படவேண்டிய' அவசியமே இன்றித் தானாகப் பரவத்தொடங்கியது. மனிதர்களுக்குள் ஜாதி, மத, இன வித்தியாசம் கூடாது என்பதை அடிப்படையாக வைத்து, இறைவனை மட்டுமே தொழத்தக்கவனாகச் சுட்டிக் காட்டிய இஸ்லாத்தின் எளிமை அராபியர்களைக் கவர்ந்தது. அலையலையாக வந்து அவர்கள் இஸ்லாத்தில் இணைந்தார்கள். சவூதி அரேபியா, ஈராக், ஈரான், லிபியா, சிரியா, பாலஸ்தீன் என்று ஒவ்வொரு தேசமாக இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டது. அதுநாள் வரை 'நீங்கள் யார்?' என்று கேட்டால் எந்த இனக் குழுவைச் சேர்ந்தவர்கள், எந்த கோத்திரத்தினர்கள் என்றெல்லாம் பட்டியலிட்டுக் கொண்டிருந்தவர்கள் அதன்பின், 'நாங்கள் முஸ்லிம்கள்' என்கிற ஒரு சொல்லில் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளத் தொடங்கினார்கள். குர் ஆனை ஓதவேண்டும் என்கிற விருப்பம் காரணமாகவே அரபியில் எழுதப்படிக்கக் கற்கத்

ஆண்டுகள் கழித்து முகம்மது நபி கி.பி. 632 இல் காலமானார். (சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்தார்) அவரது இறப்புக்குப் பிறகு இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் முதல் கலீ:.பாவாக அதிகாரபூர்வமாகப் பதவியேற்றவர், அபூபக்கர். நபிகளாரின் முக்கிய தோழர்களுள் ஒருவர் அவர். இரண்டு ஆண்டுகாலம் (கி.பி.632 இல் இருந்து 634 வரை) ஆட்சியில் இருந்தார்.

உண்மையில் ஒரு சக்கரவர்த்திக்கு நேரெதிரான துறவு மனப்பான்மை கொண்டவர் அவர். பரம சாது. அதைவிடப் பரம எளிமைவாதி. தானென்ற அகங்காரம் ஒருபோதும் தனக்கு வந்துவிடக்கூடாது என்பதால், கலீ:.பாவான பிறகும் ஒரு வயதான மூதாட்டியின் வீட்டுக்குத் தினசரி சென்று வீட்டுவேலைகளைச் செய்துவைத்துவிட்டு, ஊரிலுள்ள அத்தனை பேரின் ஆடுகளுக்கும் பால் கறந்து கொடுத்துவிட்டு வந்தவர்.

ஒரு சமயம் முகம்மது நபியிடம் 'நீங்கள் இல்லாவிட்டால் நாங்கள் யாரிடம் செல்வது?' என்று மக்கள் கேட்டார்கள். 'அபூபக்கரிடம் செல்லுங்கள்' என்பது தான் அவரது உடனடி பதிலாக இருந்தது. அந்தளவுக்கு இஸ்லாத்தின் தோய்ந்தவர் அவர். அவரது காலத்தில்தான் முதல் முதலாகக் குர் ஆன் ஒரு நூலாகத் தொகுக்கப்பட்டது. (தொடரும்...)

# மலையக சனத்தொகை வீழ்ச்சி! ஏன்?

**சனத்தொகை** வளர்ச்சி விகிதத்தை போர் பெரிதும் பாதித்திருக்கலாம், ஆனால் உண்மையான எண்ணிக்கையை அது பெரிதும் பாதிக்கவில்லை, ஸ்ரீலங்கா தமிழ் கலாசாரத்தின் கோட்டையாக திகழ்வதும் மற்றும் சமூகம் சார்ந்த அரசியலை இயக்குவதுமான, யாழ்ப்பாணத்தை பார்த்தால், அது தொடர்ந்தும் நாட்டில் சனத்தொகை அதிகம் செறிந்து வாழும் இடங்களில் ஒன்றாகவே இருந்து வருகிறது. (1981இல் கொழும்புக்கு அடுத்து இருந்த இரண்டாம் இடத்தை அது தவற விட்டிருந்த போதும்கூட). போரினால் சீரழிந்த வடமாகாகணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்கள், மிகவும் குறைந்த சனத்தொகை அடர்த்தியுள்ளனவற்றில் சிலவாகவே உள்ளன. இதேபோல அவை இன்னமும் பல தசாப்தங்களுக்கு அல்லது வரும் நூற்றாண்டுவரும் வரையில் இருந்துகொண்டே இருக்கும்.



இன்னமும் மலையகத் தமிழர்களைப் பொறுத்தமட்டில் அதில் ஒரு ஆழ்ந்த மர்மம் சூழ்ந்துள்ளது, ஒரு 30 வருடகாலத்தில் அவர்களது சனத்தொகை பெருக்கம் மிகவும் வருந்தத்தக்க அளவில் மிகவும் சிறிய அளவான 2.8 விகிதத்தாலேயே அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கையானது சகல வழிகளினாலும் போரினால் பாதிக்கப்பட்டு, குறிப்பாக சனப்பெருக்கத்துக்கு காரணமான வயதுள்ள, ஆண்களும் மற்றும் பெண்களும் மரணத்தையும் இடப்பெயர்வையும் (வெளி நாடுகளுக்கும்கூட) சந்தித்த ஸ்ரீலங்கா தமிழர்களைக் காட்டிலும் 10 மடங்கு சிறியது.

இதன்படி மலையகத் தமிழர்களின் சனத தொகை 812,700 இலிருந்து 842,300 ஆக கடந்த முப்பது வருடங்களில் உயர்ந்துள்ளது. உண்மையில், இந்த சமூகம் அநேக எண்ணிக்கையிலானவர்களை, 1964ஆம் ஆண்டு இருநாட்டு பிரதமர்களினதும் பெயர்களினால் மேற்கொள்ளப்பட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தப்படி மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ குடிப்பெயர்வு காரணமாக இந்தியாவுக்கு அனுப்பியதன்மூலம் இழந்திருக்கிறது. இன்னும் அநேகமானவாகள் இலங்கை சுதந்திரம் அடைந்த நாற்பதுகளின் பிற்பகுதியில் உருவான சட்டத்தின் பிரகாரம் அன்று முதல் பல தசாப்தங்களாக பிரஜா உரிமையற்றவர்களாகவே இருந்துவந்தார்கள். இருந்தாலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஸ ஆகியோரின் அரசாங்கங்கள் அந்த நாதியற்றவர்களுக்கு பிரஜா உரிமைகள் வழங்கி மேலும் அனைததையும் உள்ளடக்கிய சமூகமாக அவர்களை உள்வாங்கும் முயற்சிகளை ஆரம்பித்து வைத்தன.

ஆனால் எழுப்பப்படும் கேள்வி என்னவென்றால், இந்திய தமிழர்களின்( சனத்தொகை படிவத்தில் குறிப்பிட்டுள்ளபடி) சனத்தொகையின் எண்ணிக்கை, இன்னமும் யதார்த்த களநிலைமையில் உள்ளதைத் தான் பிரதிபலிக்கிறதா? என்பதுதான். அது அப்படியானால்? அது ஏன்? கேள்விகள் இலகுவாக இருந்தாலும் அவற்றுக்கான பதில்கள் சிக்கலானவை. இங்கு புள்ளி விபரங்கள் இதற்கான பதிலை வழங்கக்கூடிய நிலையில் இல்லை. இங்கு கல்வி, மற்றும் வேலைவாய்ப்பு போன்றவற்றுக்காக குறிப்பிடத்தக்க அளவிலானவர்கள் குடிபெயர்ந்துள்ளார்கள்,அந்த எண்ணிக்கை நியாயமாகவும் மற்றும் சரியாகவும் பரிசீலிக்கப்பட வேண்டும். இங்கு குடிசன மதிப்புப் புள்ளி விபரங்கள் தயாராக உள்ள விடைகளை வழங்க முடியாது, இதற்கு சமூகவியல் கற்கைகள் மட்டுமே உதவமுடியும். அவைகள் பின்பற்றப்பட வேண்டும்.

இல்லையேல் ஐம்பதுகளில் நாடற்ற நிலையிலிருந்த இந்தியத் தமிழர்கள் தற்பொழுது தங்களை இலங்கைத் தமிழர்கள் என்று பதிவு செய்திருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது, ஏனென்றால் தாங்கள், தங்கள் முன்னோர்களின் தாய்நாடானதும், ஆனால் தற்போது இங்கு இருக்கும் அந்த நாளைய இளைய தலைமுறையினருக்கு இன்னமும் ஒரு அன்னிய தேசமாக உள்ள இந்தியாவுக்கு நாடுகடத்தப்படுவதை தவிர்ப்பதற்காகவும் அவர்கள் அவ்வாறு செய்திருக்கலாம்.

மலையகத் தமிழர்களின் அடையாளமாக பிரதானமாக, சாதி மற்றும் கல்வித் தரங்கள் என்பன இங்கு செல்வாக்கு செலுத்தி, குறிப்பாக அநேகரை தங்களை வெளிப்படுத்த வைத்து அவர்களை சமூக உணர்வுகளுடன இணைக்கின்றன. கொழும்பு மற்றும் தமிழ் பகுதிகளில் வழக்கமாக ஸ்ரீலங்காத் தமிழரின் அடையாளங்களை கடன் வாங்க வைக்கின்றன.

இதன்படி இது சிறிய எண்ணிக்கையாக இருந்தாலும் ஒரு சிங்கள பௌத்த அடையாளம் கூட மாறி இருப்பதற்கான சாத்தியம் உள்ளதாக நம்பப்படுகிறது. திருமணங்கள் மற்றும் குடியேற்றங்கள்கூட குறிப்பாக இறுதியில் கூறப்பட்ட விடயத்துக்கு உதவியாக அல்லது வசதியாக இருந்துள்ளது.

இருந்தாலும் அது இத்துடன் முடிந்துவிடவில்லை. இந்திய தமிழர்களை ஆரம்பத்திலிருந்தே நாடற்றவர்கள் மற்றும் வாக்குரிமையற்றவர்கள் என்ற நிலைக்குத்தள்ள, சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே அரசாங்கங்கள் திட்டமிட்டு செயற்பட்டதால், சிலர் தாங்கள் பிரதானமாக வாழ்ந்த மலைப் பிரதேசமான மத்திய மாகாணத்தை விட்டு, ஒரு காலத்தில் சன அடர்த்தி குறைவாக இருந்த வட மாகாணத்தின் வன்னிப் பகுதியில் குடியேறினார்கள். தமிழர் எதிர்ப்பு கலவரங்கள், மலையகத் தமிழர்களையும் விட்டு வைக்காதபடியால், வன்னிப்பகுதியை நோக்கி இடைப்பட்ட தசாப்தங்களில் அவர்கள் பெருமளவில் குடிபெயர அதுவே முக்கிய காரணமாயிற்று.

இன்னமும் தெளிவற்ற ஒரு விடயமாக இருப்பது, வன்னிப் பகுதியில் நடந்து முடிந்த நான்காம் ஈழப் போரில், வன்னியில் மீள்குடியேறிய எத்தனை மலையகத் தமிழர்கள் தங்கள் இன்னுயிர்களை இழந்தார்கள் என்பதுதான். அவர்கள் தங்கள் உண்மையான அடையாளங்களை அல்லது இழப்புகளின் எண்ணிக்கையை ஏற்க வெட்கப்பட்டு விலகிச் செல்வதாக தெரிகிறது. ஸ்ரீலங்காத் தமிழர்கள்கூட இதை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை என்றுதான் தோன்றுகிறது. அரசாங்கம் தெரிவிக்கும் எண்ணிக்கையின்படி ஒருவர் செல்வதாக இருந்தால் போரில் இழப்பு பூஜ்ஜியம். தொண்டு நிறுவனங்களின் ஆதாரமற்ற எண்ணிக்கைகளின்படிதான் செல்லவேண்டும், ஆனால் மொத்த இழப்பை வெளியிடுவதில் அவர்கள் தமக்குள்ளேயே ஒரு கட்டுப்பாட்டை கடைப்பிடிக்கிறார்கள். இனப்பிரிவுகளை வெளிப்படுத்தும் புள்ளிவிபரங்கள் எதுவும் இல்லை.

இலங்கைத் தமிழர்கள் தங்கள் உரிமைகளுக்காக மேலும் மேலும் போராட்டம் நடத்தினார்கள், அதன் பெயரால் போராடிய அவர்களில் பலருக்கு அதன் அர்த்தம், வழிகள், அல்லது முதற்கட்டமாக அந்த உரிமைகளை பயிற்சி செய்து பார்ப்பதற்கான சாத்தியமான தேவைகள், பற்றி எதுவுமே தெரிந்திருக்கவில்லை. ஆனால் இந்தியத் தமிழர்களோ தாங்கள் உயிர் வாழ்வதற்காக போராடினார்கள். முதலில் ஒரு மனிதப் பிறவியாகவும், பின்னர் ஒரு இலங்கை பிரஜையாகவும் மதிக்கப்பட வேண்டி அவர்கள் போராடினார்கள். இன்னும் சொல்வதானால் அவர்கள் இன்னமும் அதை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதை இன்னமும் கைவிட்டுவிடவில்லை, ஆனால் அவர்கள் தங்கள் கல்வி விடயங்களிலோ மற்றும் சமயப்பணி வகையான ஞான மார்க்கங்களிலோ தவறிவிட்டார்கள் என்று அதன் அர்த்தமாகாது. நாடுகளில் மற்றும் சமூகங்களில் ஒரு சிறிய குடும்ப நெறிமுறைகளை பின்பற்றுவதற்கு கல்வி மற்றும் அதன் விளைவாக பெறப்படும் அறிவு என்பவைதான் சக்திமிக்க காரணிகளாக இருப்பின் பின்னர் இலங்கை வாழும் இந்தியத் தமிழரிடம் அவை அனைத்தும் உள்ளன. அல்லது அந்த நெறிமுறைகள்தான் அரசாங்கங்களை நம்ப வைக்க பயன்படுகின்றனவா. அதனால்தான் அரசாங்கங்கள் தங்கள் மக்கள் அவற்றை நம்பும்படி செய்ய முயல்கின்றனவா. மற்றும் அதைத்தான் 2012 சனத்தொகை கணக்கீடும் நம்மிடம் சொல்கிறது.

நன்றி : இணையம்

(தொடரும்...)



தொகுப்பு- வேணுகிருஷ்ணா

# அமெரிக்கப் பாதுகாப்பில் சவுதியில் கொடுங்கோல் ஆட்சி

**சவுதி** அரேபியா அல்லது சவூதிஅரேபிய இராச்சியம் அரேபியக் குடாநாட்டின் மிகப்பெரிய நாடாகும். வடமேற்கு எல்லையில் ஜோர்தானும் வடக்கு, வடகிழக்கு எல்லைகளில் ஈராக்கும் கிழக்கு எல்லையில் குவைத், கட்டார், பக்ரைன், ஐக்கிய அரபு அமீரகம் என்பனவும், தென்கிழக்கு எல்லையில் ஓமானும் தெற்கு எல்லையில் ஜேமனும் அமர்ந்துள்ளது. மீதமுள்ள எல்லைகளாக பாரசீகக் குடா வடகிழக்கிலும் செங்கடல் மேற்கிலும் அமைந்துள்ளது.

சவூதி அரேபியாவில் உள்ள இஸ்லாமியர்களின் யாத்திரைத் தலங்களான மக்காவில் உள்ள மஸ்ஜித் அல்-ஹராம், மதீனாவில் உள்ள மஸ்ஜித் அந்-நபவி ஆகிய இரு பள்ளிவாசல்கள் காரணமாக இது சிலவேளைகளில் இரண்டு பள்ளிவாசல்களின் இராச்சியம் எனவும் அழைக்கப்படுவதுண்டு. 1902ஆம்ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை அடுத்து 1932ஆம் ஆண்டு அப்துல் அஸீஸ் பின் சத் தனது மூதாதையரது நகரமான ரியாத்தை கைப்பற்றிய பின்னர் சவூதி அரேபிய இராச்சியத்தைப் பிரகடனப்படுத்தி அங்கீகாரத்தையும் பெற்றுக்கொண்டார்.

சவ்'தி அரேபியா உலகில் அதிகளவு மசகு எண்ணெயை ஏற்றுமதிச் செய்யும் நாடாகும். மசகு எண்ணெய் ஏற்றுமதி அந்நாட்டின் 90% பங்கை வகிப்பதோடு அரசின் வருவாயில் 75% இதன்மூலம் பெறப்படுகிறது. இவ்வருவாய் நாட்டின் நலன்புரி பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. மசகு எண்ணெயின் விலை குறையும் சந்தர்ப்பங்களில் அரசு இவற்றுக்கு நிதியை வழங்குவதற்கு சிரமப்படுகிறது.

மக்கா, மதீனா, ரியாத், தமாம், அல்-கோபர், ஜித்தா, தாயிப், யான்பு, அபஹா, அல்-கசீம், அல்-ஹஸா, அல்-ஹவுவ், அர்அர், ஜிஜான், தபூக் ஆகியவை சவ்'தி அரேபியாவின் முக்கிய நகரங்களாகும்.

சவூதி அரேபிய மன்னர்கள்

- மன்னர் அப்துல் அசீசு பின் சவ்'த்
- மன்னர் சவூத் -- மன்னர் அப்துல் அசீசு பின் சவூத்தின் மகன்
- மன்னர் பைசல் -- மன்னர் அப்துல் அசீசு பின் சவூத்தின் மகன்
- மன்னர் காலித் -- மன்னர் அப்துல் அசீசு பின் சவூத்தின் மகன்
- மன்னர் பைஹத் -- மன்னர் அப்துல் அசீசு பின் சவூத்தின் மகன்
- மன்னர் அப்துல்லா -- மன்னர் அப்துல் அசீசு பின் சவூத்தின் மகன்

றியாத் மாநகரில் ஒரு பயங்கர இரவு 12ஆம் திகதி, மே மாதம், 2003ஆம் ஆண்டு, சவுதி நேரம் இரவு 11.20 மணி யாகிவிட்டது.

றியாத் மாநகரில் வசதி படைத்தவர்கள் மட்டும் வாழும் குடியிருப்பு அது. சகல வசதிகளையும் கொண்ட அடுக்கு மாடிக் கட்டடங்களைச் சுற்றி நாற்புறமும் ஆளுயர மதில்கள். அங்கே வசிப்பவர்கள் அனைவரும் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற மேற்குலக நாடுகளைச் சேர்ந்தவர்கள். அதிக சம்பளம் வாங்கும் பெரிய பதவிகளில் இருப்பவர்கள். சாதாரண மனிதர்கள் எவரும் அந்தக் குடியிருப்புப் பக்கம் செல்லமுடியாது.

வரப்போகும் ஆபத்தை உணராத குடியிருப்பைப் பாதுகாக்கும் வாயிற் காவலர்கள், தம்மை நெருங்கிய அமெரிக்கத் தயாரிப்புக் காரைக் கண்டு அசட்டையாக இருந்தார்கள். திடீரெனக் காருக்குள் இருந்தவர்கள் இயந்திரத் துப்பாக்கியால் சுட்டனர். ஒரு நிமிடத்திற்குள் காவலரண், தாக்குதல் செய்பவர்களின் வசமானது. தொடர்ந்து நுழைவாயில் கதவு திறக்கப்பட்டது. இந்தத் தருணத்திற்காகக் காத்திருந்த ட்ரக் வண்டியொன்று விசையுடன் ஓடிச்சென்று அடுக்குமாடிக் கட்டடமொன்றுடன் மோதியது. காதைச் செவிடாக்கும் பயங்கர வெடிச்சத்தம் மாநகரின் உறக்கத்தைக் கலைத்தது. இவ்வளவும் 15 நிமிடத்திற்குள் நடந்தேறின.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது இந்தத் தாக்குதல் மேற்குலக நாட்டு பிரஜைகளை நோக்கிக் குறிவைத்ததாகத் தோன்றும். இருப்பினும் சர்வதேசச் செய்தி ஊடகங்களால் ஒரு முக்கிய உண்மை மறைக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட அமெரிக்கக் கம்பனிக்குக் குறிவைக்கப்பட்ட விடயம் பலருக்குத் தெரியாது. 'வினெல் கோப்ரேஷன்' என்ற சவூதி அரேபிய இராணுவத்தைப் பலப்படுத்த வந்துள்ள தனியார் வர்த்தகப் பாதுகாப்பு நிறுவனம்தான் தாக்குதல்காரரின் இலக்கு.

**மன்னர் குடும்பத்திற்குப் பாதுகாப்பு வழங்கும் அமெரிக்க கூலிப்படை**

'வினெல் கோப்ரேஷன்' தொடக்கத்தில் அமெரிக்க லொஸ் ஏஞ்ஜலஸ் பகுதியில் அணைகட்டும் பணிகளில் ஈடுபட்டது. பின்னர் தனது வியாபாரத்தைப் பெருக்கும் நோக்கோடு இராணுவ வர்த்தகத்தில் இறங்கிவிட்டது. சீனாவின் உள்நாட்டுப் போரில் சியாங்கை சேக்கின் பாசிச இராணுவத்திற்கு ஆயுதத் தளபாட உதவி வழங்கியது. வியட்னாம் போரின்போது இராணுவ நோக்கத்திற்கான அமெரிக்க இராணுவத்திற்கு விமான நிலை யங்களைக் கட்டிக்கொடுத்தது. கிரெனெடாவில் சி.ஐ.ஏ உடன் சேர்ந்து கொண்டு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட இடதுசாரிப் பிரதமரின் ஆட்சியை கவிழ்க்க முயற்சித்தது. தொண்ணூறுகளில் மிகப்பெரிய பாதுகாப்பு வர்த்தக நிறுவனமான 'கார்லைல் குறூப்', ஷவினெல் கோப்ரேஷன் ஐ வாங்கியது. தாய் நிறுவனமான கார்லைல் குறூப்பின் தலைவர் பிராங் கார்லூச்சி அன்றைய அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் ரீகனின் செயலாளராகப் பதவி வகித்தவர். முன்னாள் ஜனாதிபதி புஷ்ஷின் குடும்பத்திற்கும் இந்த நிறுவனத்துடன் நெருங்கிய தொடர்புகள் உள்ளன.

'வினெல் கோப்ரேஷன்' சவுதி அரேபியாவில் என்ன செய்கிறது? இந்த நிறுவனம் சவ்'தி அரேபிய அரசுடன் 800 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஒப்பந்தம் போட்டுள்ளது. வேலை? எண்ணெய்க் கிணறுகளை பாதுகாப்பது, சவூதி அரேபிய இராணுவத்திற்குப் பயிற்சி ஆலோசனைகளை வழங்குவது, மன்னர் குடும்பத்திற்குப் பாதுகாப்பு வழங்குவது முதலிய பணிகள்.

நேரடியாகச் சொன்னால், இக்கம்பனி ஒரு கூலிப்படையாக சவ்'தி அரேபியாவில் தொழிற்படுகிறது. தனது சொந்தப் பிரஜைகளை நம்பாத சவ்'தி மன்னர் கடந்த இருபத்தைந்து வருடங்களாக வினெலை தனது நம்பிக்கைக்குரிய பாதுகாப்புப் படையாக வைத்துக்கொண்டுள்ளார். 1979ஆம் ஆண்டு (ஈரானால் தூண்டப்பட்ட) கிளர்ச்சியாளர்கள், மெக்காவில் வருடாந்தம் இடம்பெறும் புனித யாத்திரையைப் பயன்படுத்தி, மெக்கா பெரிய பள்ளிவாசலை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். மன்னரின் உத்தரவின்பேரில் கலகத்தை அடக்க வினெல் கூலிப்படை மெக்கா சென்றது. ஆயிரக்கணக்கான கலகக்காரரை கொன்று குவித்தது. இந்தச் சம்பவம் அன்று உலக நாடுகளின் கண்களை, காதுகளை எட்டாவண்ணம் மறைக்கப்பட்டது. 'இன்னொரு ஈரான்' உருவாவதைத் தடுப்பது முக்கியம் என்று அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ரீகன் படுகொலைகளை நியாயப்படுத்தினார்.

**மத அடிப்படைவாத ஆட்சியும் சர்வாதிகாரமும்**

ஈரான் என்னதான் மத அடிப்படைவாத அரசாக இருந்தபோதும், சவூதி அரேபியா வின் 100 ஆண்டுகால மத அடிப்படைவாத ஆட்சியின் தீவிரத் தன்மையளவிற்கு இல்லை. விமான நிலையச் சுங்கப் பரிசோதனையின் போது, சாதாரண சினிமாச் சஞ்சிகையின், கவர்ச்சி நடிகைகளின் படங்கள்மீது கறுப்பு வண்ணம் பூசப்படும், பிற மதத்தவர்கள் தமது வீட்டில் கூட தெய்வ உருவப்படங்களை வைத்திருப்பதற்குத் தடை, பெண்கள் வாகனம் ஓடத்தடை, பேருந்து வண்டிகளில் பெண்களுக்கெனப் பின்புறத்தில் ஒதுக்கப்பட்ட தனியான இடங்கள், பூங்காக்களில் ஆண்களுக்கு மட்டும் அல்லது குடும்பங்களுக்கு மட்டும் என வேறுபாடுகள் கொண்ட இடஒதுக்கீடு, பெண்களுக்கென வரையறுக்கப்பட்ட உயர்கல்வியும், வேலைவாய்ப்பும், நாடு முழுவதிலும் எந்த இடத்திலும் சினிமா இல்லை, மதுபானத் தடை, சட்டவிரோதமாக மதுத் தயாரிப்பவர்களுக்கு சிறையடைப்பு, களவுக்குக் கைவெட்டுதல், கள்ள உறவு வைத்த பெண்களைச் சந்தியில் வைத்துக் கல்லால் எறிந்து கொல்லுதல் போன்றவை எல்லாம் சவ்'தி அரேபியாவின் சாதாரண விடயங்கள். இந்நாடு எத்தனை தூரம் மத அடிப்படைவாதத்தில் ஊறியுள்ளது தென்படுவதற்கான சில சான்றுகள் இவை.

சவூதி அரேபியாவில் 'ஜனநாயகம்', 'சுதந்திரம்' போன்ற சொற்களைப் பாவிப்பதே குற்றம் என்று சொல்லுமளவிற்குச் சர்வாதிகார ஆட்சி நிலவுகிறது. மன்னர் குடும்பம்தான் ஜனாதிபதி, மந்திரிகள், பாராளுமன்றம், அரசாங்க அதிகாரிகள் எல்லாம். (மன்னர்களின் நூற்றுக்கணக்கான மனைவிமாருக்குப் பிறந்த ஆயிரக்கணக்கான பிள்ளைகள் போதும் முழு நாட்டையும் நிர்வகிக்க). சாதாரண குடிமக்கள் உழைத்துச் சாப்பிடும்வேளை, மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சும்மாவிருக்க அரசாங்கம் பணம் கொடுக்கிறது. ஈராக்கில் சதாம் கட்டிய ஒரு டசின் மாளிகைகளைப் பற்றி உலக நாட்டுப் பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதித்தள்ளின. ஆனால், சவூதி மன்னர் குடும்பத்திற்குச் சொந்தமான இருபதிற்கும் குறையாத ஆடம்பர மாளிகைகள் பற்றி யாரும் கதைப்பதில்லை. முன்னாள் மன்னர் பஹத் ஒரு முறை ஸ்பெயினுக்கு உல்லாசப் பிரயாணம் போனபோது தன்னோடு 50 பென்ஸ் கார்களையும் 350 சேவகர்களையும் எடுத்துச்சென்றார்.

இவ்வளவிருந்தும் சவூதி அரேபியாவை யாரும் கண்டுகொள்வதில்லை. இதுவரை ஏன் எந்தவொரு செய்தி ஊடகமும் 100 ஆண்டுகால மத அடிப்படைவாத, சர்வாதிகார ஆட்சியாளர்களைப் பற்றி அறிவிப்பதில்லை? எல்லாம் சவூதி அரேபியா மத்திய கிழக்கில் அமெரிக்காவின் மிக நெருங்கிய கூட்டாளியென்ற காரணத்தால்தான்.

**வீழ்ச்சியடையும் சவுதியின் பொருளாதார வளர்ச்சி**

பெரும்பாலான சவூதி அரேபியாவின் இறக்குமதிப் பொருட்கள் அமெரிக்காவில் இருந்து வருகின்றன. அதேபோல பெருமளவு எண்ணை ஏற்றுமதியாகுவதும் அமெரிக்காவிற்குத்தான். (சவூதி அரேபியா உலகிலேயே முதலாவது எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடு). மத்திய கிழக்கில் பெருமளவு அமெரிக்க ஆயுதங்களை, யுத்த விமானங்களை சவூதி அரேபியா வாங்கிக் குவித்து வருகின்றது. மலிவு விலையில் எண்ணெய் வாங்கும் அமெரிக்கா, பின்னர் ஆயுத விற்பனை மூலம் 'பெற்றோலிய டொலர்களை' திரும்பப் பெற்றுக்கொள்கிறது.

1991 ஆம் ஆண்டு வளைகுடாப் போர் எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றி விட்டது. யுத்தத்திற்கான செலவில் கணிசமான பகுதியை சவூதி அரேபியா பொறுப்பெடுக்கவேண்டுமெனக் கூறியது அமெரிக்கா. மில்லியன் டொலர்களை விழுங்கிய போர்ச்செலவுகள் சவ்'திப் பொருளாதாரத்தைக் கடுமையாகப் பாதித்தது. ஏற்கெனவே எழுபதுகளின் மத்தியில் உருவான உலக பொருளாதாரப் பின்னடைவு வேறு சேர்ந்துகொண்டது. இதுவும் போதாதென்று (மேற்குலக நாடுகளால் வற்புறுத்தப்பட்ட) எண்ணெய் விலையிறக்கம் ஏற்றுமதி வருமானத்தைக் குறைத்தது. விளைவு? வேலைவாய்ப்புகள் குறைந்தன, மாதாந்த வருமானம் குறைந்தது. சலுகைகள் நிறுத்தப்பட்டன. 1980 இல் ஒரு தனிநபரின் சராசரி வருட வருமானம் 28000 டொலர்களாக இருந்தது. இது அன்றைய அமெரிக்கரின் வருமானத்திற்குச் சமமானது. இன்று சவூதி அரேபிய தனிநபர் வருமானம் 7000 டொலர்களாகக் குறைந்துவிட்டது. இதேநேரம் அமெரிக்காவில் இவ்வருமானம் 34100 டொலர்களாக உயர்ந்துவிட்டது. விரைவான சனத்தொகைப் பெருக்கமும் பெருநகரங்களை நோக்கிய இடப்பெயர்வும் நிலைமையை மோசமடைய வைத்தது. இன்று சவ்'தி அரேபிய அரசாங்கம் 55 பில்லியன் டொலர்களுக்குக் கடனாளி என்றால் நம்புவது கடினமாகத்தானிருக்கும்.

**வேலையில்லா பிரச்சினையும் வறுமையும்**

சவூதி அரேபியாவில் வறுமை என்பது சில வருடங்களுக்கு முன்பு கற்பனை பண்ணிக்கூடப் பார்க்கமுடியாத விடயம். அங்கே வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் தொகை 20வீதமாக இருக்கலாம் எனப் புகலிடத்தில் அரசியல் நடாத்தும் எதிர்க்கட்சி ஒன்று தெரிவித்தது. தலைநகரம் றியாத்திலும், ஜித்தாவிலும் சில பகுதிகள் ஏழைகள் வாழும் சேரிகளாகக் காட்சியளிக்கின்றன. திருட்டு, போதைப் பொருட்பாவனை என இன்னபிற குற்றச் செயல்கள் அதிகரிக்கின்றன. தெருவோரங்களில் பிச்சையெடுக்கும் பெண்களைக் காண்பது சாதாரணமாகிவிட்டது. இருப்பினும் குறிப்பிட்ட சேரிப்பகுதிகளினுள் வெளியிடத்து ஆட்கள் போவது இலகுவானதல்ல. நிலைமையைப் பார்க்கப்போன பத்திரிகையாளர்களைத் தடுத்து பொலிஸ் திருப்பி அனுப்பியுள்ளது. உதவி நிறுவனத்தின் சார்பிலும் யாரும் அங்குசெல்லமுடியாது.

பல வருடங்களுக்கு முன்பு பிற அரபு நாடுகளிலிருந்து வந்து குடியேறியதால் பிரஜாஉரிமை பெற்றவர்களின் பிள்ளைகள், விவாகரத்துப் பெற்ற அல்லது கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், தொழிற்தேர்ச்சி பெறாத சவூதிப் பிரஜைகள் ஆகியோரே அதிகமாக வறுமையில் வாழ்கின்றனர்.

வேலையில்லாப் பிரச்சினைக்கும் வறுமைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்ட வேலையில்லாதோர் தொகை 8 வீதம். ஆனால், உண்மைத் தொகை 25 வீதமாக இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. வருடந்தோறும் உருவாக்கப்படும் புதிய வேலைவாய்ப்புகளுக்கு, இரண்டு மடங்கு பேர் விண்ணப்பிக்கின்றர்.



(22 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் குழப்பத்திற்கு வித்திடுகிறதா எல்லை நிர்ணயக்குழு!

-பிரகஸ்பதி-

நிலப்பரப்பு ஆதிக்கம், அபகரிப்பு போன்றவைகளே ஆரம்பத்தில் இன முரண்பாட்டுக்குப் பிரதான சிக்கலாக அமைந்திருந்தது. பலவாறான பொருளாதார இழப்புக்கள் அழிவுகளுக்கு மத்தியிலேயே வடக்கு – கிழக்கின் நிலப்பரப்புக்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு பிரதேச செயலகப்பிரிவுகளின் எல்லைகள் மாற்றப்படுதல் தொடர்பான அறிவித்தல் ஒன்று வந்திருக்கிறது.

இந்த அறிவிப்பையடுத்து பல முரண்பாடான கருத்துக்கள் வெளிவருவதுடன், தமது நிலங்கள் பறிக்கப்படுவதாகவும் எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் தெரிவித்து வருகின்றனர்.

காணிப்பிரச்சினைகள் தொடர்பில் பல தடவைகளில் நாம் எழுதியிருந்தோம். எல்லை நிர்ணயம் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதன் அடிப்படையிலேயே மட்டக்க்ளப்பின் நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளின் எல்லைகள் மீள நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

அதன்படி, வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புணானை கிழக்கு எனும் 211பி கிராம சேவையாளர் பிரிவின் ரிதிதென்ன, ஜயந்தியாய, ஓமடியாமடு, பாலம்பக்கேணி, ஆலங்குளம், புவனேசுபுரம், மேலாண்டகுளம் ஆகியன கோரளைப்பற்று மத்தியுடன் இணைக்கப்படுகிறது. இதில் சுமார் 12ஆயிரத்து 500க்கும் அதிகமான ஏக்கர் நிலப்பரப்பு உள்வாங்கப்படுகிறது.

அதேபோன்று, கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் வாகனேரி எனும் 610 குடும்பங்களைக் கொண்ட 210ஆம் இலக்க கிராமசேவையாளர் பிரிவின் குளத்துமடு, குடாமுனைக்கல், குளவால்சேனை, பெட்டைக்குளம், புணானை மேற்கு 240 குடும்பங்களைக் கொண்ட 210 ஈ கிராமசேவையாளர் பிரிவின் புணானை, மயிலந்தனை, சாளம்பைச்சேனை, முள்ளிவட்டவான், புணானை அணைக்கட்டு ஆகிய கிராமங்கள் கோரளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுடனும் இணைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதிலும் சுமார் 11ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு உள்வாங்கப்படுகிறது.

இந்த நடவடிக்கையினை தமிழ் மக்களது பிரதேசங்கள். முஸ்லிம் மக்களது பிரிவுகளுடன் இணைந்திருப்பதற்கு தமிழ் மக்கள் விரும்ப மாட்டார்கள். மட்டக்களப்பில் தமிழ், முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்துவதற்காக மத்திய அரசின் திட்டமிட்ட செயற்பாடாக இது அமைந்திருக்கிறது. அந்தவகையில் இத்திட்டத்திற்கு யாரும் விலை போய் விடக்கூடாது எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருக்கிறது.

கோரளைப்பற்று தெற்கு–கிரான், மற்றும் கோரளைப்பற்று வடக்கு (வாகரை) ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து குறிப்பிட்ட கிராமசேவகர் பிரிவுகள் கோரளைப்பற்று மத்தி மற்றும் கோரளைப்பற்று மேற்கு ஆகிய பிரதேச செயலகங்களுடன் இணைப்பது தொடர்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற எல்லை நிர்ணயக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை, கிரான் பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள பல கிராமங்கள் கோரளைப்பற்று மத்தி மற்றும் கோரளைப்பற்று மேற்கு ஆகிய

> **மட்டக்களப்பில் முக்கியம் மிக்கதாக தமிழ், முஸ்லிம் களுக்கிடையிலான காணிப் பிரச்சினையே இருந்து வருகிறது. அந்தப் பிரச்சினைக்குத் தூபமிடும் வகையில் எல்லை நிர்ணயப் பிரச்சினையும் அமைந்து விடுமாயின் பெரியளவான தொரு முரண்பாடு மட்டக் களப்பில் தமிழ் – முஸ்லிம் உறவில் மோசமானதொரு நிலைமையைத் தோற்று விக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.**

பிரதேச செயலாளர் பிரிவுகளுடன் இணைப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் முழுஎதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றனர்.

இதற்கிடையில் இந்த மாத ஆரம்பத்தில், தேசிய எல்லை நிர்ணயம் தொடர்பிலான மாற்றுக் கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் முஸ்லிம் மக்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியிலுள்ள முஸ்லிம் மக்கள் உடனடியாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு அல்லது கட்சியின் தலைமைக்குத் தெரியப்படுத்துமாறு அந்தக் கட்சியின் பிரதித் தலைவரும், கிழக்கு மாகாண அமைச்சருமான ஹாபிஸ் நஸீர் அஹமட் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

தேசிய எல்லை நிர்ணயக் குழுவானது எல்லை நிர்ணயம் தொடர்பிலான தனது அறிக்கையினை மே மாதம் 31 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளதால், முஸ்லிம் மக்கள் தமது பிதேசங்கள் பற்றிய எல்லை நிர்ணயம் தொடர்பில் மாற்றுக் கருத்துக்கள் இருக்குமாயின் அவை குறித்து உடனடியாக அறிவிக்குமாறு அவர் கேட்டிருந்தார்.

எல்லை நிர்ணயச் செயற்பாடானது, நாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படும் எல்லை நிர்ணயம் என்பது பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவிப்பதாக அமைந்திருக்கிறது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலானது புதிய முறைமையின் பிரகாரம், 70 வீதம் வட்டார அடிப்படையிலும், 30 வீதம் வீதாசார அடிப்படையிலும் இடம்பெறவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. ஆனாலும் புதிய சட்டத்தின் அடிப்படையில் தேர்தலை உடனடியாக நடத்தி வைக்க முடியாது. எனவே உள்ளூராட்சித் தேர்தல் இன்னமும் ஒருவருடத்துக்குத் தள்ளிச் செல்லும் என்றும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

எல்லை நிர்ணயம் என்பது எவ்வளவு முக்கியமானது என்பது குறித்து ஏனைய தரப்பினர் கொண்டிருக்கும் அக்கறைத் தன்மையிலுள்ள குறைபாடு கடந்த காலங்களை விடவும் எதிர்காலத்திலும் நிகழ்காலத்திலும் பல பிரச்சினைகளை ஏற்படுத்திவிடுகிறது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அரசியல்வாதிகளைத் தெரிவு செய்துவிட்டால் அவர்களுக்கு எம் சார்ந்த எல்லாவிதமான பிரச்சினைகளையும் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்பது எண்ணமாகும்.

தற்போது எழுந்திருக்கும் மட்டக்களப்பின் எல்லை நிர்ணய விவகாரத்தில் சிவில் மற்றும் சமூகசேவை அமைப்புக்களும் கூடிய கவனம் செலுத்தவேண்டிய் தேவையுள்ளது. ஆனால் சமூக அமைப்புக்கள் அக்கறையின்றி இருப்பதற்குரிய காரணம் என்னவென்று இன்னமும் சரியாக அடையாளம் காணமுடியாதிருக்கிறது.

உள்ளூராட்சித் தேர்தலை மையப்படுத்தி புதிதாக எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறித்த பிரதேசத்தின் எல்லை நிர்ணயம் முறையாக இடம்பெறவில்லையாயின், அப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்களின் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதித்துவங்களில் பாதிப்புகள் அல்லது இழப்புகள் ஏற்படும் நிலை உருவாகும். என்ற கவலை அரசியல் தரப்புகள் மட்டத்தில் இருந்துவருகிறது.

எல்லை மீள்நிர்ணயம் தொடர்பான சிபார்சுகளின் போது மலையகம் மற்றும் வடக்கு –கிழக்கின் கஷ்டப் பிரதேசங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

எல்லை மீள்நிர்ணயம் தொடர்பாக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டு அக்குழு தமக்கான செயற்பாடுகளைத் துரிதமாக முன்னெடுத்து வருகிறது.

ஏற்கனவே இக்குழுவானது மாவட்டச் செயலாளர்கள், பிரதேசச் செயலாளர்கள் மற்றும் கிராமசேவகர்களுடன் கலந்துரையாடியுள்ள துடன் அவர்களது ஆலோசனைகளையும் பெற்றுவருகிறது. அத்துடன் முக்கிய அமைப்புக்கள் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றிடமிருந்தும் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டே எல்லை மீள்நிர்ணயம் இடம்பெறவுள்ளது.

எவ்வாறாயினும் எல்லை மீள் நிர்ணயக் குழு விரைவில் சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று அங்குள்ள நிலைமைகளை அவதானிக்கவுள்ளதுடன் மீள் நிர்ணயம் தொடர்பான சிபார்சுகளை பொது நிர்வாக அமைச்சுக்குச் சமர்ப்பிக்கவுள்ளது.

பிரதேச சூழல், சனத்தொகை, மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு அதன் அடிப்படையில் மீள் நிர்ணய நடவடிக்கைகள் இடம்பெறும் என்றே அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் ஏற்கனவே இருந்த முரண்பாடுகளை அதிகப்படுத்துவதாக இந்த எல்லை நிர்ணயம் அமைந்திருக்குமானால் வீணான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

முக்கியமான பிரச்சினையாக காணிப்பிரச்சினை ஆரம்பித்த போது, காணி விவகாரத்தினை விரைவாகத் தீர்த்து வைக்கும் வகையில் புதிய சுற்றுநிருபம் ஒன்று வெளியிடப்பட்டு குழு நியமிக்கப்பட்டு ஆராயப்பட்டது. இந்தக் குழு தீர்மானங்களை நிறைவேற்றி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள், பிரதேச செயலக ஒருங்கிணைப்பு, அபிவிருத்திக் கூட்டங்களில் முடிவுகளை மேற்கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதில் சரியான முறையில் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் காணப்பட்டனவா என்ற கேள்வி இருக்கையில், எல்லை நிர்ணயப் பிரச்சினை வந்திருக்கிறது.

மட்டக்களப்பில் முக்கியம் மிக்கதாக தமிழ், முஸ்லிம்களுக்கிடையிலான காணிப்பிரச்சினையே இருந்து வருகிறது. அந்தப் பிரச்சினைக்குத் தூபமிடும் வகையில் எல்லை நிர்ணயப் பிரச்சினையும் அமைந்துவிடுமாயின் பெரியளவானதொரு முரண்பாடு மட்டக்களப்பில் தமிழ் – முஸ்லிம் உறவில் மோசமானதொரு நிலைமையைத் தோற்றுவிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

காணிப்பிரச்சினை காரணமாக மிகக் கடுமையாகவும் யுத்தத்தினால் மிக மோசமாகவும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மீண்டும் மீண்டும் பாதிக்கப்படுவதற்கான சந்தர்ப்பத்தினை இல்லாமல் செய்வதே இப்போதைய தேவையாகப் பார்க்கப்படுகிறது. காணிப்பிரச்சினைக்கு மனச்சாட்சி அடிப்படையில் தீர்வுகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் எனக் கருத்து உலவ விடப்பட்டிருந்தது. தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக எந்த வகையான தில்லுமுல்லுகளையும் செய்யத் துணிகின்றவர்களுடன் பேரம் பேசுவதும் போட்டி போடுவதும் தேவையற்ற விடயமாகவே அமைந்திருக்கும்.

கிழக்கினைப் பொறுத்தவகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கிரான் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்கு உள்ளூராட்சி சபையை உருவாக்குதல் தொடர்பாகவும், அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை தமிழ் பிரிவு உப பிரதேச செயலகத்தை முழு அதிகாரமுள்ள பிரதேச செயலகமாகவும் அதற்கான உள்ளூராட்சி சபையையும் உருவாக்குதல் என்பன முக்கியமான பிரச்சினைகளாக இருந்துவந்தன.

1989 ஆம் ஆண்டு கல்முனை தமிழ் உப பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டு 23 வருடங்களாக காணி, நிதி மற்றும் ஏனைய அதிகாரங்கள் வழங்கப்படாமல் உள்ளமை. 2005ஆம் ஆண்டு இறுதியில் உருவாக்கப்பட்ட கிரான் பிரதேச் செயலகப்பிரிவிற்கு (கோரளைப் பற்று தெற்கு) தனியான பிரதேச சபை உருவாக்குவதற்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு பிரதேச செயலாள் தலைமையில் குழு நியமிக்கப்பட்டும் இன்றுவரையும் அது உருவாக்கப்படவில்லை.

30 வருடங்களுக்கு மேலாக தமிழ் பிரதேசங்களில் இயங்கிய மத்திய அரசு, மாகாண சபைகளினது நிர்வாகம், அபிவிருத்தி, உள்ளூராட்சி போன்ற செயற்பாடுகளில் தமிழ் மக்களுக்கு அவசியமானதாக உணரப்பட்ட புதிய பிரதேச செயலகங்களையும், உள்ளூராட்சி சபைகளையும் உருவாக்கக் கூடிய அரசியல் பலம் அற்றவர்களாகவும் தமிழ் அரசியல் தலைவர்கள் காணப்படுகின்றமை போன்றன முன்வைக்கப்படுகின்றன.

இந்த இடத்தில் இடப்பெயர்வு, யுத்த காலத்தில் நடைபெற்றவைகள் தேவையற்றவையாகப் பார்க்கப்படுகின்றன. எது எவ்வாறிருந்தாலும் அரசியல் பலம் யாருக்கு இருக்கிறதோ, அதை யாருக்குப் பயன்படுத்திக் கொள்ள முடிகிறதோ அவர்தான் அதிகாரம் மிக்கவராகும். தற்போது நடைபெற்றுவரும் அதிகாரப் போட்டியானது யாருக்கு வெற்றியைப் பெற்றுத் தரும் என்பது கேள்வி ஆனதே.

---

# மொட்டை சீமானின் வெட்டிப் பேச்சுகள்



-மதியூகி-

இலட்சக் கணக்கான இலங்கை தமிழர்களை கொன்று குவித்த இலங்கை தலைவருக்கு எதிராக போராடுவதற்குக்கூட தமிழ்நாட்டில் சுதந்திரம் இல்லை. தமிழர்கள் வாழும் இந்த நாடு சுடுகாடாகவே திகழ்கிறது என்று சீமான் கடந்தவாரம் பேசியதுதான் நகைப்புக்கிடமானது.

இலங்கைத் தமிழருக்கு சுதந்திரம் பெற்றுத் தருவதற்காக போராடி வருவதாக தமிழ் நாட்டில் சீறும் சீமானுக்கு, இப்போதுதான் யதார்த்தம் புரிய ஆரம்பித்திருக்கின்றதோ? விவேகமற்ற ஆவேசப் பேச்சுக்களும், வன்முறைத் தூண்டல்களும் எவருக்கும் சுதந்திரத்தையோ, நியாயத்தையோ பெற்றுத்தராது.

தமிழ் நாட்டில் அகதிகளாக தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்கள், தமது சுதந்திரமான நடமாட்டத்திற்காகவும், தொழில் வாய்ப்புக்களுக்காகவும் தமிழ் நாட்டில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

சுமார் 26000 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் தமிழ் நாட்டில் இருக்கின்றார்கள். சுமார் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அவர்கள் தமிழ் நாட்டில் அகதிகளாகவே வாழ்ந்துவருகின்றார்கள்.

இந்தியாவின் மத்திய அரசும், மாநில அரசும் இலங்கை அகதிகளுக்கென்று விஷேட கவனம் எதையும் செலுத்தவில்லை. எத்தனை தசாப்தங்கள் கடந்தாலும் இலங்கைத் தமிழர்கள் அகதிகள்தான். அவர்கள் இந்தியப் பிரஜைகளுக்கு சமமாக நடத்தப்படமாட்டார்கள். தஞ்சம் தேடி வந்தவர்கள் என்றவகையிலேயே இலங்கை மக்கள் வாழ்கின்றார்கள்.

இந்த நிலையில் இலங்கை தமிழ் மக்கள் தொடர்பாகவும், இலங்கைத் தமிழர்களின் சுதந்திரம் அரசியல் உரிமை தொடர்பாகவும் பேசுகின்றவர்கள். உண்மையில் இலங்கை தமிழர்கள் மீது பிரியமுள்ளவர்களாக இருக்கவில்லை.

அவர்கள் தமிழ் நாட்டு அரசியல் கள நிலைமைகளுக்கும், தமது பொருளாதாரத் தேவைகளுக்கும் ஏற்றவகையிலேயே இலங்கைத் தமிழர்களின் உரிமைப் பிரச்சினையை கையில் எடுத்துக் கொள்கின்றார்கள். சீமான் இன்று தமிழ் நாட்டு அரசியலில் அறியப்படுபவராக இருப்பதற்கு, அவர் தமிழ் நாட்டு மக்களுக்காக எதையும் செய்யவில்லை.

சினிமா இயக்கியதைத் தவிர சீமான் இதுவரை தமிழ் நாட்டுத் தமிழர்களுடன் வேறு எந்தவகையிலும் தொடர்புபட்டவரல்ல. இலங்கைத் தமிழர்களைப் பற்றி உணர்ச்சிப்பெருக்கோடு சீமான் பேசுவதை தமிழ் நாட்டு மக்கள் பொழுது போக்காகவே பார்க்கின்றார்கள். தமிழ் நாட்டு மக்களுக்கு கதை சொல்வதற்காகவே சீமான் உலக விடுதலை தொடர்பான புத்தகங்களை தேடிப்படித்துவிட்டு அதை புலிகளின் பயங்கரவாதத்துடன் தொடர்புபடுத்தி கதைவிடுவதில் இப்போது கை தேர்ந்திருக்கின்றார்.

மேடைகளில் சீமான் பேசுவதைக் கேட்டு பார்வையாளர்கள் புல்லரித்துப் போனாலும், தமிழக அரசும், இந்திய மத்திய அரசும் எரிச்சலுடனேயே பார்க்கின்றனர். சீமானின் பேச்சுக்கள் வன்முறையைப் பற்றியும், இறைமைக்கு எதிராகவுமே அதிகம் பேசுகின்றது என்று அரசுகள் கருதுகின்றன.

கலைஞர் ஆட்சியில் இருக்கும்போது சீமானின் கூட்டங்களை நடத்தத் தடை விதித்தார். இப்போது ஜெயலலிதாவின் ஆட்சியில் சீமானை பேசவே விடாமல் தடை விதிக்கின்றார். அப்படியென்றால் வெவ்வேறு நிலைப்பாடுகளைக் கொண்ட தலைவர்களுக்கே சீமான் தீண்டத்தகாத ஒருவராகவே தெரிகின்றார்.

எத்தனை புத்தகங்களைப் படித்தாலும், எத்தனை மேடைகளில் பேசினாலும் உள்ளத்தளவில் சீமானால் எந்த மக்களுக்காகவும் நியாயம் கேட்டு போராட முடியாது. சீமானுக்கு பணம் கொடுப்பவர்களுக்கே சீமான் விசுவாசம் காட்ட முடியும். சீமானுக்கு தமிழ் நாட்டிலிருந்து வருமானம் இல்லை. இன்னும் புலம் பெயர்ந்து வாழும் புலி ஆதரவாளர்களிடமிருந்தே பணம் வந்து சேர்கின்றது.

(22 ஆம் பக்கம் பார்க்க..)

# பேச்சுவார்த்தையே சிறந்த வழி

**உலகிலேயே** எல்லையை காக்க அதிக பணம் செலவழிக்கும் நாடுகள் என்று பார்த்தால் அது இந்தியா, பாகிஸ்தான் நாடுகளாகத்தான் இருக்கும். இருநாடுகளும் உலகில் வளர்ந்துவரும் நாடுகளாகும். பொருளாதார ரீதியாக இன்னும் பலமடங்கு வளரவேண்டிய நாடுகளாகும். ஆனால் தேவையில்லாமல் கோடிக் கணக்கான ரூபாயை எல்லைப்பாதுகாப்புக்காக செலவழித்து வருகின்றன. காரணம் 1947 இல் ஏற்பட்ட பிரிவினைக்குப் பின்னர் இரு நாடுகளும் பகைமை நாடுகளாக மாற்றப்பட்டன. இருப்பினும் 2008 ஆம் ஆண்டு முதல் இரு தரப்பிலும் மேற்கொள்ளப் பட்ட நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளால் எல்.ஓ.சி எனப்படும் எல்லைக் கட்டுப் பாட்டுக் கோட்டுப்பகுதியில் சண்டை நிறுத்தம் ஏற்பட்டது. இதனால் இருநாடுகளுக்கு இடையிலானஉறவுகள் வலுவடைந்து எல்லைப்புறச் சாலைகள் திறக்கப்பட்டன.

இந்தியாவில் விளையும் காய்கறிகளும் பழங்களும் பாகிஸ்தானுக்கு சென்றன. இதனால் ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், உள்ளிட்ட மாநில விவசாயிகள் பயனடைந்தனர். பாகிஸ்தானிலிருந்து உலர் பழங்களும் இதர பொருட்களும் இந்தியாவுக்கு வந்தன. வெறும் பழங்கள் மட்டும் வரவில்லை.

இருநாட்டு மக்களின் அன்பும் அதில் கலந்திருந்தது. இதன் தொடர்ச்சியாக இரு நாடுகளில் இருந்தும் வர்த்தகக் குழுக்கள் பரஸ்பரம் சந்தித்துப் பேசுவதும் வர்த்தகத்தின் அளவை அதிகரிப்பதும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. மேலும் சண்டை நிறுத்தத்திற்கு பிறகு எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் ஊடுருவல் குறைந்ததோடு, மோதல்களும் குறைந்து வந்தன. மும்பைத் தாக்குதல் சம்பவத்திற்குப் பிறகு ரத்து செய்யப்பட்டிருந்த இரு நாடுகளின் கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான போட்டிகளும் கடந்த மாதம் நடந்தது. பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு மூத்த குடிமக்கள் விசா இல்லாமல் சென்றுவர ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

இப்படி இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சுமூகமாக சென்று கொண்டிருந்த போது, கடந்த சில நாட்களுக்கு முன்னர் எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுப்பகுதியில் இந்திய இராணுவ வீரர்கள் இருவர் கொடூரமான முறையில் கழுத்தறுக்கப்பட்டு கொல்லப்பட்டது உறவில் சிக்கலை ஏற்படுத்தியது. இதனால் பதிலுக்கு பத்து பாகிஸ்தான் இராணுவ வீரர்களின் தலையை அறுக்க வேண்டும் என்றும் எல்லை தாண்டிச் சென்று இந்தியா தாக்குதல் தொடுக்க வேண்டும் என்றும் இனியும் பொறுமையாக இருக்க முடியாது என்றும் சிலர் பேசுவது நிலையை மேலும் சிக்கலாக்கி விடும்.

சமீபத்திய பதற்றத்திற்கு பிறகு பாகிஸ்தான் தரப்பில் இருந்து பேச்சுவார்த்தைக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதை இந்தியா ஏற்று பேச்சு வார்த்தை நடத்தவேண்டும். விசா விதிமுறைகளை தளர்த்துவதில் இருந்து பின் வாங்கக்கூடாது. பாகிஸ்தான் மகளிர் கிரிக்கெட் அணியினர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க இந்தியா வர அனுமதிக்கப்பட வேண்டும். திருப்பி அனுப்பப்பட்ட பாகிஸ்தான் ஹொக்கி வீரர்களை மீண்டும் அழைக்கவேண்டும். விளையாட்டு, கலாசாரம், வர்த்தகம் ஆகிய துறைகள் மூலமாக இருநாடுகளின் மக்களிடையே நம்பிக்கையை வளர்க்கமுடியும். இது ஒன்றே இரு நாடுகளுக்கு இடையே அமைதி ஏற்படவும் சுமூகமான உறவு தழைக்கவும் வழிவகுக்கும். அதைவிட்டு சில சுயநல சக்திகளின் நிர்ப்பந்தத்திற்கு அடிபணிந்து மத்திய அரசு தனது நீண்டகால கொள்கைகளில் இருந்து பின்வாங்கினால் யாருக்கும் பயனில்லை.

நன்றி: இணையம்





# புலிகளின் வதை முகாமில் மணியம்

வதை 46

அப்படி அந்தக் குண்டை அண்ணன் மூலம் வெடிக்க வைத்தால், சௌந்தரராஜன் சிறையிலிருந்து விடுதலை செய்யப் படுவான் என்பது புலிகள் அவனுடன் மேற்கொண்ட பேரப்பேச்சின் சாராம்சம். அதற்கு சௌந்தரராஜன் உண்மையில் புலிகளுக்கு என்ன பதில் சொன்னான் என்பது எனக்குத் தெரிய வரவில்லை. ஆனால் அந்த விவகாரம் முழுக்க முழுக்க அண்ணன் சம்பந்தப் பட்டதால், தான் அதில் செய்வதற்கு ஒன்றும் இல்லை எனப் புலிகளிடம் சொல்லிவிட்டதாக அவன் என்னிடம் மிகவும் இரகசியமாகச் சொன்னான். அவன் என்னைத் தவிர வேறு எவரிடமும் இந்த விவகாரம் பற்றிப் பிரஸ்தாபிக்க வில்லை என நினைக்கிறேன். நான் கூட அவனுடன் மிகவும் அவதான மாகவே நடந்துகொண்டேன். ஏனெனில் புலிகளின் சிறைகளில்கூட, எந்தப் புற்றுக்குள் எந்தப் பாம்பு இருக்கும் என்று சொல்ல முடியாது.

ஆனால் அந்த சௌந்தரராஜன் உடனும் விடுவிக்கப்படவில்லை என்பதை, நான் ஒன்றரை வருடங்கள் கழித்து விடுதலையாகி வந்தபின்னர் அறிந்துகொண்டேன். நான் விடுதலை யான பின்னர்தான் விடுதலையான அவன், எப்படியோ எமது புத்தகக் கடையை விசாரித்துப் பிடித்து தான் விடுதலையானதை என்னிடம் வந்து சொல்லிவிட்டுப் போனான். அந்த வேளையில் அவனது முஸ்லீம் மனைவியும் அவனை அழைத்துப்போக வந்திருந்தாள். அப்பொழுது யாழ்ப்பாணம் புலிகளின் இறுக்கமான கட்டுப்பாட்டில் இருந்ததால்,,பயத்தின் காரணமாக நான் அவர்களை எனது வீட்டுக்கு அழைத்து உபசரிக்கக்கூட இயலவில்லை.

சௌந்தரராஜனின் கதையை இங்கே எழுதவேண்டி வந்ததிற்கான காரணம், இந்த மாதிரியான பல சம்பவங்கள் புலிகளின் சிறைகளில் நடந்து வந்திருக் கின்றன என்பதைத் தெரிவிக்கவே.

எனக்கு அடி காயங்களினால் ஏற்பட்ட நோவு மாறுவதற்கு முன்னரே விசாரணைகள் மீண்டும் ஆரம்பமாகி விட்டன. இப்பொழுது விசாரணைகள் முழுக்க முழுக்க அரசியல் சம்பந்தப் பட்டதாகவே இருந்தன. மீண்டும் விசாரணையை ஆரம்பிப்பதற்கு முன்னர் தயாபரன் என்மீது நடாத் தப்பட்ட தாக்குதலுக்கு பிராயச்சித்தம் செய்ய விரும்பினான் போலும்? தங்களது தினசரி விசாரணை அறிக்கைகளில் முக்கியமானவற்றை காந்தி இரவு வேளைகளில் படித்துப் பார்ப்பதாகவும், அதன் அடிப்படையில் சில முடிவுகளை அவர் எடுப்பது வழக்கம் எனவும் என்னிடம் அவன் கதையோடு கதையாகக் கூறினான். இதன்மூலம் அவன் என்மீதான தாக்குதலுக்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்றும், அது முழுக்கமுழுக்க காந்தி சம்பந்தப்பட்ட விவகாரம் என்று சொல்ல வந்தான் என்பது புரிந்தது.

அரசியலைப் பொறுத்தவரை எனது கடந்தகால நடவடிக்கைகள் பற்றி துருவித் துருவிக் கேட்டான். குறிப்பாக புலிகள் இயக்கம் உட்பட பல்வேறு இயக்கங் களுடனும் எனக்கு இருந்த தொடர்புகள் குறித்து விபரமாகக் கேட்டான். புலிகள் இயக்கத்திலும் யார் யாருடன் கூடுதலான தொடர்புகள் உண்டு என்பதை நுணுக்கமாக அறிய விரும்பினான். புலிகள் தங்கள் ஆட்களைப் பற்றியே ஒருவரை ஒருவர் உளவு பார்ப்பவர்கள் என்பதால், நான் அதில் எச்சரிக்கையுடன் நடந்துகொண்டேன்.

அவர்கள் அறிய முற்பட்ட இன்னொரு முக்கியமான விடயம், மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (UTHR) என்ற அமைப்புடன் எனக்கு இருந்த தொடர்புகள் பற்றியதாகும். அதற்கொரு காரணம், அந்த அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவரான கலாநிதி கே.சிறீதரன் எனது நீண்ட நாள் நண்பராக இருந்தமையும், மற்றைய முக்கியஸ்தர்களான கலாநிதி ராஜன் ஹூல், டாகடர் ராஜினி திராணகம ஆகியோர் எனக்கு நன்கு அறிமுகமானவர்களாக இருந்தமையும் ஆகும்.

UTHR அமைப்பால் வெளியிடப்பட்ட 'முறிந்த பனை' என்ற பிரசித்தி பெற்ற நூலை நான் அதுவரை கண்ணால் ஒரு தடவை தன்னும் பார்த்திருக்காத போதும் (அந்த நூல் 1995இல் யாழ்ப்பாணம் புலிகளிடமிருந்து இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட பின்னரே நண்பர் மனோரஞ்சன் மூலம் எனக்குக் கிடைத்தது!, அதில் வெளியிடப்பட்டிருந்த விபரங்களில் சிலவற்றை நானே திரட்டிக் கொடுத்ததாக புலிகள் சந்தேகப்பட்டிருந்ததை பின்னர் அவர்களது விசாரணைகளின்போது அறியக்கூடியதாக இருந்தது.

நான் 'முறிந்த பனை' நூலை அதுவரை பார்க்கவில்லை என எனது விசாரணையின் ஒரு கட்டத்தில் குறிப்பிட்ட போது, அங்கிருந்த புலிகள் ஒருவரை ஒருவர் பார்த்து உரக்கச் சிரித்ததின் மூலம், என்னை ஒரு பொய்யனாக எண்ணுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. இன்னொரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறு அவர்கள் உரத்துச் சிரித்த சம்பவம் நிகழ்ந்தது.

அந்தக் காலகட்டத்தில் இராணுவத்தின் பலாலி படைத்தளத்திலிருந்து 'மக்கள் குரல்' என்றொரு வானொலி ஒலிபரப்பாகி வந்தது. அந்த ஒலிபரப்பை ஈ.பி.டி.பி. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராகவும், 'தினமுரசு' பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்து பின்னர் சுட்டுக் கொல்லப்பட்ட அற்புதன் என்பவரே நடாத்தி வந்த தாகப் பரவலாக ஒரு கதை இருந்தது. அந்த வானொலியில் புலிகளை மிகவும் மோச மாகவும் நையாண்டித் தனமாகவும் விமர்சித்து செய்திகளும் கட்டுரைகளும் ஒலிபரப்பப்பட்டு வந்ததாகக் கேள்விப்பட்டி ருந்தேன். அப்பொழுது யாழ்ப்பாணம் புலிகளின் இறுக்கமான கட்டுப்பாட்டில் இருந்ததால், புலிகளின் ஆதரவாளர்கள் உட்படப் பலரும் இரகசியமான முறையில் அந்த வானொலியைக் கேட்டு வந்தனர். ஆனால் நான் அதையும்கூட ஒருபோதும் கேட்டதில்லை.

ஆனால் புலிகளோ அந்த வானொலிக் கும் நானே சில விடயங்களை வழங்கி வருவதாகச் சந்தேகித்து என்னிடம் விசாரித்தனர். நான் அதை ஒருபோதும் கேட்டதுகூட இல்லை என்று சொன்ன போது, அவர்கள் தங்களை அடக்க முடியாது வாய்விட்டுச் சிரித்துக் கொண்டனர். இருப்பினும் அவர்கள் நான் சொன்ன (அவர்களது பார்வையில்) 'பொய்க்காக' என்னைத் தாக்காது 'பெருந்தன்மையுடன்' நடந்து கொண்டனர்.

ஆனாலும் ஒரு விடயத்தை என்னிடம் கேட்டனர். அந்த வானொலியில் பல்வேறு பட்டவர்கள் பங்குபற்றி கருத்துகள் கூறி வந்த விடயம் அது. அவ்வாறு கருத்துக் கூறியவர்களின் ஒலிப்பதிவைப் போட்டுக் காட்டினால் அந்தக் குரல்களை வைத்து, அது யார் யாருடைய குரல்கள் என்று இனங்காண முடியுமா என்று என்னிடம் கேட்டனர். அவ்வாறு குரல்களை அடையாளம் காட்டக்கோரி புலிகள் கேட்ட பெயர்களில் கவிஞர்கள் வ.ஐ.ச.ஜெயபாலன், சேரன், புலிகளின் 'ஈழநாதம்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஜெயராஜின் மைத்துனர் தருமலிங்கம் மாஸ்டர் ஆகியோரின் பெயர்கள் இருந்தன.

புலிகள் என்னிடம் விசாரித்த நபர்களான சேரன், ஜெயபாலன், தர்மலிங்கம் மாஸ்டர் ஆகிய மூவரும் என்னுடன் நன்கு பழகியவர் கள்தான். இவர்களில் உ.சேரனும், வ.ஐ.ச. ஜெயபாலனும் யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றவர்கள் என்ற வகையிலும், கலை இலக்கிய மற்றும் அரசியல் ஈடுபாடுகள் உள்ளவர்கள் என்ற வகையிலும் என்னுடன் பல சந்தர்ப்பங்களில் கதைத்து பழகியிருக்கின்றனர்.

அதிலும் ஜெயபாலன் தன்னை ஒரு இடதுசாரியாகவும் இனம் காட்டிக் கொண்டவர். அவரது பெற்றோர் நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள் என்ற வகையிலும் (நெடுந்தீவில் அந்தக் காலகட்டத்தில் எமக்கு நிறையத் தோழர்கள் இருந்தனர்) அந்த வழியிலும் அவருடன் பரிச்சயம் இருந்தது. அவர் முதலில் தோழர் விசுவானந்ததேவனின் தங்கையான சாரதாதேவியைத் (சாரதாதேவி 2008 ஆண்டில் திடீரென்று இலண்டனில் காலமானார்) திருமணம் செய்திருந்தவர் என்ற வகையிலும் இன்னொரு வழித் தொடர்பும் இருந்தது. இரண்டொரு தடவை ஜெயபாலன் எனது அறையில் வந்து தங்கி இரவிராகக் கதைத்ததும் உண்டு.

ஆனால் பிற்காலத்தில் சேரனும் ஜெயபாலனும் நாட்டைவிட்டு வெளியேறி விட்டதனாலும், தமிழ் தேசியவாத அரசியல் சேற்றில் அவர்கள் தம்மை அமிழ்த்திக் கொண்டதனாலும், அவர்களுடனான எனது தொடர்பு அற்றுப்போய்விட்டது. 2004ஆம் ஆண்டளவில் ஜெயபாலனை மட்டும் ஒருமுறை கொழும்பில் சந்தித்தேன்.

**(துன்பியல்கள் தொடரும்...)**



# பாப்பா முரசு

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## வாரம் ஒரு திருக்குறள்



### நாடு

பெரும் பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு.

மிக்க பொருள்வளம் உடையதாய், எல்லாரும் விரும்பத்தக்கதாய், கோடு இல்லாததாய், மிகுதியாக விளை பொருள் தருவதே நாடாகும்.

குறள்:732

# முட்டையா...? கோழியா...?



முட்டையில் இருந்து கோழி வந்ததா? கோழியில் இருந்து முட்டை வந்ததா? என்ற கேள்விக்கு பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் விடை கண்டுபிடித்திருக்கிறார்கள். கோழி தான் முதலில் வந்ததாம். இந்த கண்டுபிடிப்பு கணினியின் உதவியோடு நிகழ்த்தப்பட்டிருக்கிறது. ஷெப்பீல்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகளின் முடிவின்படி முட்டையின் ஓட்டில்தான் இரகசியம் பொதிந்திருக்கிறது. முட்டை ஓடு உருவாவதில் கோழிக்குஞ்சின் புரதம் பெரும் பங்கு வகிக்கிறது. vocledidin-17 (OC-17) எனும் புரதம் முட்டை ஓட்டினை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிப்பது ஏற்கனவே அறிவுலகம் அறிந்த ஒன்று.

கணினியின் துணைகொண்டு ஒரு செயற்கையான வேதிவினை நிகழ்த்தப்பட்டது. இந்த வேதிவினையில் கல்சியம் கார்பனேட் துகள் களின் மீது vocledidin-17 (OC-17) புரதம் ஒட்டிக்கொண்டு படிகங்களை உருவாக்கின. காலப்போக்கில் படிகத்தின் உட்கரு தன்னைத்தானே வளர்த்துக்கொள்ளும் அளவிற்கு பெரிதானதும் vocledidin-17 (OC-17) துகள்கள் உதிர்ந்துவிட்டன. அதாவது vocledidin-17 (OC-17) ன் பங்கு ஒரு கிரியா ஊக்கி என்பதோடு சரி. இவ்வாறு உதிர்ந்த vocledidin-17 (OC-17) புரோட்டின் துகள்கள் மீண்டும் கால்சியம் கார்பனேட் படிகங்களை உருவாக்கும் பணியில் ஈடுபடுகிறது. இந்த வினையின் விளைவாக குறைந்த காலத்தில் முட்டை ஓடு உருவாகிறது.

# பேராசை பெரும் நஷ்டம்



டில்லி நகரில் ஓர் உலோபி இருந்தான். அவன் மிகவும் கஷ்ரப்பட்டு உழைத்துக் கிடைக்கும் வருமானத்திலிருந்து தனது செலவு போக மிஞ்சியதை சேமித்து வந்துள்ளான். இவனிடம் பெரும்தொகையான தங்க ஆபரணங் கள் இருக்கக் கூடும் என்று நம்பாத வகையில் அவனுடைய வாழ்க்கை வாழ்ந்துவந்தான்.

அவனுடைய வீடோவைக் கோலால் வேயப்பட்டதாகவும், பழைய நொருங்கிய பெட்டியுடன் காணப்பட்டான்.

தூதிர்ஷ்டவசமாக அவனுடைய வைக்கோல் குடிசை தீப்பற்றிக் கொண்டன. உலோபி சத்தமிட்ட தினால் அயலவர்கள்வந்து தீயை அணைக்க முயற்சி செய்தனர். ஆனால் தீ அணையவில்லை. நகைப்பெட்டிக்கு அருகில் தீ நெருங்குவதைப் பார்த்த உலோபி அலறினான். அவன் அருகில்நின்ற தட்டான் வெண்கலச் பெட்டிக்காக ஏன் இப்படி அழுகிறாய்எனக்கேட்டான். எனது நகைகள் எல்லாம் அப் பெட்டியில் உள்ளன என்றான்.

விடயமறிந்த தட்டான் நான் நகைகளை வெளியே எடுத்து வந்தால் எனக்கு விருப்பமானதை உனக்குத் தந்துவிட்டு... என அவன் சொன்னான். கருமியும் தட்டான் நகைப்பெட்டியை எடுத்துவர அனுமதி கொடுத்தான். பேராசை பிடித்த தட்டான் உயிரைப் பணயம் வைத்து கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த தீயிலே குதித்து பெட்டியுடன் வெளியே வந்தான்.

வெளியேறிய தட்டான் வெறும் பெட்டியை கருமியிடம் கொடுத்து விட்டு நகைகளைத் தான் எடுத்துக் கொண்டான். கருமி நீ உயிருடன் போராடி பெட்டியை எடுத்து வந்தாய் அதற்காக அரைவாசி நகையை எடுத்து விட்டு மீதியை எனக்கு தந்துவிடுஎன்றான்.

நான் விரும்புவதை உனக்குத் தருவேன் என்பது எமது ஒப்பந்தம் அதன்படி நடந்துள்ளேன். வேறு எதுவும் பேசவேண்டாம் என தட்டான் கூறிவிட்டான். உடனே கருமி அக்பர் பாதுஷாவிடம் முறையிட்டான். அரசர் பீர்பாலிடம் இவ் வழக்கை விசாரிக்கும் பொறுப்பை ஒப்படைத்தார்.

பீர்பால் நீங்கள் இருவரும் மேற்கொண்ட ஒப்பந்தம் என்ன? எனக் கேட்டார். "எரியும் நெருப்பினுள் புகுந்து நகைப்பெட்டியை எடுத்து வருபவர் தனக்கு விருப்பமானதை மற்றவருக்குக் கொடுப்பதாகவும் மிகுதியைத் தான் எடுத்துக்கொள்வதாகவும் இருவரும் நிபந்தனை இட்டுக் கொண்டோம்" எனக்கூறினர்.

அப்படியானால் நிபந்தனைப்படி நடக்கலாமே எனப் பீர்பால் கேட்டபோது கருமி பெட்டியை மட்டும் எனக்கு தந்துவிட்டு ஆபரணங்கள் எல்லாவற்றையும் இவர் எடுக்க பார்க்கிறார் எனக் கருமி கூறினான்.

பின்னர் தட்டானிடம், "நீ விரும்புகின்ற பொருள் எது" எனக் கேட்டார். ஆபரணங்கள் எனப் பதிலளித்தான்.அப்படியானால் ஆபரணங்களை கருமியிடம் கொடுத்துவிட்டு பெட்டியை நீ வைத்துக்கொள் எனப் பீர்பால் கட்டளையிட்டார். தட்டான் மலைத்துப் போனான். பீர்பால் மீண்டும் சொன்னார். நான் எதை விரும்புவேனோ அதை இவருக்கு கொடுப்பேன் என்று நீர் உமது நிபந்தனையில் கூறியிருக்கின்றீர். எனவே ஆபரணங்களை இவருக்கு கொடுத்துவிடு. பெட்டியை நீ எடுத்துக்கொள்.

பீர்பாலின் நியாயத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் சிறை செல்லவேண்டிவரும் என்பதை உணர்ந்த தட்டான் கருமியிடம் ஆபரணங்களை கொடுத்துவிட்டு வெறும் பெட்டியை மட்டும் அவன் எடுத்துக் கொண்டுவீடு திரும்பினான். பேராசை பெரும் நஷ்டம் என்பதை உணர்ந்துகொண்டான்.

## நாளை மலரும் பூக்கள்

நாளை மலரும் பூக்களே
நல்ல பிள்ளைச் சிறுவரே
நாளை பூமி உம்மிடம்
நல்லாய்ப் படித்து வாருங்கள்

உண்மை என்றும் பேசிடு
உலகைக் காக்கத்
துணிந்திடு
அழிவைவிட்டு வந்திடு
ஆக்கத்தோடு உழைத்திடு

அறிவை நீயும் வளர்த்திடு
ஆசானை நீயும் மதித்திடு
அன்பை நீயும் பெருக்கிடு
அடைவாய் உயர்ச்சி நீயுமே.

கு.கிருஷிகா
யாழ்.மெமோறியல்
ஆங்கிலப் பாடசாலை.

## வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!



இரண்டு படங்களுக்கு இடையே 5 வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 07.02.2013

வர்ணம் தீட்டும் போட்டி இல. 976
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 974

பரிசுக்குரியவர்:
வ.சாரங்கன், தெல்லிப்பளை தெற்கு, தெல்லிப்பளை.

பாராட்டுக்குரியவர்கள்

01. யோ.சுதர்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
02. ரா.உஷாந்தினி, புத்தூர்.
03. மு.சங்கவி, கந்தரோடை. யாழ்ப்பாணம்.
04. வ.மதனரூபன், பூநகரி, கிளிநொச்சி.
05. எஸ்.பாதுஷா, பிரதான வீதி, கல்முனை.
06. எம்.திலுக்ஷி, கோணவல, களினி.
07. பி.வேணுகாந்தன், வவுனிக்குளம்.
08. இ.லொசியா, உடப்பு, புத்தளம்.

# மனிதர்களில் ஏன் வெவ்வேறு நிறங்கள்!



மனிதர்களின் மேல் தோல் கீழ் மல்பீஜியன் அடுக்குகள் உள்ளன. இவ்வடுக்குகளில் நிறமித் துனுக்குகள் காணப்படுகின்றன. இவை மனிதனின் தோலின் நிறத்தை நிர்ணயிக்கின்றன. இந்நிறமித் துனுக்குகளில் உள்ள இரசாயனப் பொருள்களின் தன்மை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமாக அமைவதால், நிறமும் வெவ்வேறு விதத்தில் அமைகிறது.

# முதலில் பயன்படுத்தியவர் யார்?



ஜோர்ஜ் வாஷிங்டனின் பல் மருத்துவர் ஜோன் கிரீன்வுட் என்பவரால் பற்களில் துளையிடும் இயக்கு விசைக்கருவி முதன் முதலில் செய்யப்பட்டது. அவருடைய கருவியைச் சுழலச் செய்ய அவருடைய தாயின் நூற்கும் சக்கரமும் மிதிப்பொறியும் கொண்ட இயந்திரத்தை மாற்றி அதற்குத்தக அமைத்துக் கொண்டார்.

முந்தைய பல் மருத்துவர்கள் வில்நாண்களால் துளையிடு கருவியை இயக்கினர். அதற்கு உடல்தெம்பு, மனஉறுதி, நுட்பத்திறன் வாய்ந்த மருத்துவராய் இருப்பதுடன் நோயாளியின் மிகு மன உரமும் வேண்டும். அதன்பின் பக்கவாட்டிலுள்ள கைப்பிடியைத் திருப்புவதன் மூலம் துளையிடு கருவியை இயங்கச் செய்தனர்.

திறத்தை மிகுதிப்படுத்துவதற்காக 1829இல் ஆவிச்சுத்தியைக் கண்டுபிடித்த ஸ்கொட் நாட்டினர் ஜேம்ஸ் நாஸ்மித் என்பவர் சுழல்முறைப் பொறிக்கான சக்தியைப் பயன்படுத்தினார். 1958இல் நெகிழ்வுடைய கம்பி கொண்ட வடத்தைக் கொண்ட கையால் இயக்கப்படும் தனிக்காப்புரிமை பெற்ற துளைக் கருவியைச் சார்லஸ் மெர்ரி என்ற அமெரிக்கப் பல்மருத்துவர் கண்டுபிடித்தார். 1964இல் ஆங்கிலேயர் ஜோர்ஜ் ஹேரிங்டன் என்பவர் தானாகவே ஒழுங்குபட இயங்குகின்ற விசைப்பொறியால் பல்துளையிடும் கருவியை முதலாவதாக உருவமைத்தார்.

# கொள்ளை ராணி பூலான்தேவி

## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு



எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

141

குசுமாவின் வெற்று முதுகில் குஜாலின் கரங்கள் மேலும் கீழுமாய் அசைந்தபடி இருந்தன.

ஸ்ரீராமின் நண்பன் குஜால், இன்னொரு கொள்ளைக் கோஷ்டித் தலைவன். பொலிசாருடன் ஸ்ரீராம் போலவே இரகசியமாகத் தொடர்பு வைத்திருப்பவன்.

பூலானை ஒழிக்க குஜாலின் உதவியை நாடினான் ஸ்ரீராம். பூலானை உயிருடன் விட்டு வைத்தால், தன் உயிர் அரைக் காசும் பெறாது என்று தினமும் பயந்து செத்துக் கொண்டிருந்தான் ஸ்ரீராம்.

ஸ்ரீராமுக்கு உதவச் சம்மதித்த குஜாலின் பார்வை குசுமாமீது சென்றது. குறிப் பறிந்து விட்டுக் கொடுத்தான் ஸ்ரீராம்.

குஜால் திடகாத்திரமானவன். குசுமாவும் அவனுடன் சில நாட்கள் தங்க மனப்பூர்வமாகச் சம்மதித்தாள்.

குசுமாவின் கழுத்துக்குள் குஜால் முகம் புதைத்தான். குசுமாவின் கரம் அவன் தலையை அழுத்தி கழுத்துக்குக் கீழேயும் இழுத்தது.

குஜால் தன் முகத்தை அணைகளில் வைத்துக் கொண்டே, "பூலானை நீ பார்த்திருக்கிறாயா?" என்று கேட்டான்.

குசுமாவுக்கு அந்த நேரத்தில் அவன் பூலானைப் பற்றிக் கேட்டது பிடிக்கவில்லை. மௌனமாக இருந்தாள். அவன் கவனத்தைத் தன்மேல் திருப்ப, தன் கழுத்துக்குக் கீழே குனிந்திருந்த அவன் தலையை இருபுறமும் அசைத்தாள்.

குஜால் அதன்பின்னர் பேசக் கூடிய நிலையில் இல்லை. எல்லாம் ஆனதன் பின்னர் பூலானைத்தான் பிடிக்க போட்டுள்ள திட்டத்தைப் பற்றி விபரித்தாள் குஜால்.

குசுமா பிரமித்தாள். பூலான் தப்பவே முடியாது என்று தீர்மானித்தாள்.

குசுமாவின் மூக்கு நுனியில் மெதுவாகக் கடித்தான் குஜால். பின்னர் தன் மூக்கை அவள் மூக்குடன் உரசிக் கொண்டே "என் திட்டம் எப்படி?" என்று கேட்டான்.

குசுமாவுக்கு அவனது திட்டம் வியப்பாகத்தான் இருந்தது. ஸ்ரீராமும், லாலா ராமும் பேசிக்கொண்டு இருக்கத்தான் லாயக்கு. உருப்படியாகத் திட்டம் போடத் தெரியாதவர்கள் என்பதைக் குசுமா நன்கு அறிந்து கொண்டுவிட்டாள்.

ஸ்ரீராம் இல்லாத நேரங்களில் லாலாராம் குசுமாவிடம் ஒரு மாதிரியா இழிப்பான். இதுவரை குசுமா இடம் கொடுத்ததில்லை. ஸ்ரீராமுடன் ஏதாவது பிரச்சினை வந்தால் லாலாராமைப் பயன் படுத்திக் கொள்ளலாம் என நினைத்தாள்.

குஜாலைக் கண்டபின்னர் அவனில் குசுமாவுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. குசுமா இதுவரை சந்தித்த ஆண்களில் குஜால்தான் அவளுக்குப் பிடித்தமானவனாகவும் நடந்துகொண்டான்.

ஸ்ரீராமும் லாலா ராமும் கிராமம் ஒன்றுக்கு வருவதாக பூலானை நம்ப வைக்க வேண்டும். பூலான் பழிவாங்கும் வெறியோடு தன் குழுவுடன் வருவாள். கிராம எல்லையில் பதுங்கி இருந்து பூலான் கோஷ்டியைக் கூண்டோடு அழித்துவிடலாம் என்றுதான் திட்டம் தீட்டினான் குஜால்.



குஜாலைக் கண்டபின்னர் அவனில் குசுமாவுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. குசுமா இதுவரை சந்தித்த ஆண்களில் குஜால்தான் அவளுக்குப் பிடித்தமானவனாகவும் நடந்துகொண்டான்.

ஸ்ரீராமும் லாலா ராமும் கிராமம் ஒன்று வருவதாக பூலானை நம்ப வைக்க வேண்டும். பூலானுக்குப் பழி வாங்கும் வெறியோடு தன் குழுவுடன் வருவாள். கிராம எல்லையில் பதுங்கி இருந்து பூலான் கோஷ்டியைக் கூண்டோடு அழித்துவிடலாம் என்றுதான் திட்டம் தீட்டினான் குஜால்.

அவன் திட்டம் குசுமாவுக்கும் பிடித்திருந்தது. அதனால், அவன் "திட்டம் எப்படி?" என்று கேட்டதும், அவனது கழுத்தை வளைத்து உதட்டை கௌவினாள் குசுமா.

வெறி வந்தவள்போல அவனது கன்னங்களிலும், நெற்றியிலும் முத்தமிட்டாள்.

குசுமாவின் ஒவ்வோர் செயலும் குஜாலை பைத்திய மாக்கின. ஸ்ரீராமிடம் இருந்தும் தடை ஏதும் இல்லாமையால், அவன் முன்பாகவும் குஜாலை கொஞ்சத் தொடங்கினாள் குசுமா.

குஜாலை கைக்குள் போட்ட பின்னர் ஸ்ரீராம், லாலாராம் இருவரையும் அதிகாரம் பண்ணுமளவுக்கு குசுமா சென்றதுதான் உச்சக்கட்டம்.

சம்பல் பள்ளத்தாக்கில் அதிகம் பிரசித்தம் இல்லாத கிராமம் பெஹ்மாய். பல கணவாய்கள் மத்தியில் தனியாக உள்ள கிராமம். இங்கு பண்ணையார் ஜாதியினர் வாழ்ந்தனர். நானூறு பண்ணையார்கள் வரை இருந்தனர்.

அக்கிராமத்தில் நடைபெற இருந்த திருமணம் ஒன்றுக்காக ஸ்ரீராம், லாலாராம் சகோதரர்களை அழைக்க சில பண்ணையார்கள் வந்திருந்தனர்.

பூலான்தேவியால் எந்த நேரத்திலும் ஆபத்து நேரிடலாம் என்று பயந்து கொண்டிருந்தான் ஸ்ரீராம்.

அதனால் திருமண வீட்டுக்குச் செல்லாமல் இருந்துவிடத்தான் நினைத்தான். குஜால்தான் வற்புறுத்திச் சம்மதிக்க வைத்தான்.

பூலானை ஒழித்துக்கட்ட அக்கிராமம்தான் மிக ஏற்ற இடம் என்று தீர்மானித்தான் குஜால்.

அதன்பின்னர் இரகசியத் திட்டங்கள் தீட்டப்பட்டன. ஸ்ரீராம், லாலாராம் ஆகியோர் திருமண வீட்டுக்கு வரப்போகிறார்கள் என்று கிராமம் முழுக்கக் கதை பரவியது.

"உனக்கென்ன பைத்தியமா? நாங்கள் செல்லப்போவதை பூலான் அறிந்தால் என்னாகும் தெரியுமா?" என்றான் குஜாலிடம் ஸ்ரீராம்.

குஜால் சிரித்தான். "பூலானுக்குத் தெரிய வேண்டும். அவள் காதுக்கு எட்ட வேண்டும் என்பதற்காகத்தான் நான் கதையைப் பரப்பச் செய்தேன்."

"அதுதான் ஏன் என்கிறேன்" ஸ்ரீராமின் குரல் பதற்றப்பட்டது.

குஜாலுக்கு பயந்தாங்கொள்ளியான ஸ்ரீராமைப் பார்க்க கோபம் வந்தது.

"உனக்கு பூலான் சாக வேண்டுமா வேண்டாமா?"

"சாகவேண்டும்!"

"அதற்கு என்னால் முடியுமா?"

"முடிந்தால் ஏன் உன் உதவியைக் கேட்கிறேன்" என்று ஸ்ரீராம் கூற, 'களுக்' என்று சிரித்தாள் குசுமா.

ஸ்ரீராம் குசுமாவை முறைத்தான். "அவளை ஏன் முறைக்கிறாய். உன்னால் முடியாது என்றால் நான் சொல்லுவதுபோல செய். கேள்விகள் கேட்காதே. அது எனக்குப் பிடிக்காது" என்றான் குஜால்.

ஸ்ரீராம் "சரி ஏதோ பண்ணித் தொலை" என்றுவிட்டு எழுந்து போய்விட்டான்.

குஜால் போட்ட திட்டத்தில் முதற்கட்டம் பலித்தது.

பெஹ்மாய் கிராமத்தில் இருந்துவந்த மான்சிங்கின் கூட்டாளி ஒருத்தன்தான் அறிந்த கதையை பூலானிடமும், மான்சிங்கிடமும் தெரிவித்தான்.

"எப்போது கல்யாணம்?" என்று கேட்டாள் பூலான்.

"பெப்ரவரி14 இல்" என்றான் தகவல் சொன்ன ஆள்.

பூலானுக்கு கண்கள் சிவந்தன. "இரை வலையில் சிக்கப் போகிறது" என்று பல்லைக் கடித்தபடியே கூறினாள்.

ஸ்ரீராம், லாலாராம் இருவரைப் பற்றிப் பேச்செடுத்தாலே பூலானின் முகம் விகாரமாகிவிடும் விந்தையை மான்சிங் கவனிக்கத்

திருப்பங்கள் தொடரும்...

## மருத்துவம்



### பற்களின் கறை நீங்க...

நாயுருவி வேரைச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு பல் துலக்கி வரப் பல் துப்புரவாகும். பற்களின் கறை நீங்கும். 1/2 முதல் 1 கிராம் வரை உண்டுவர உடல் வலுவாகும்.

### உடல் சூட்டைத் தணிக்க...

எள் எண்ணெயைப் (நல்லெண்ணெய்) 15 நாட்களுக்கு ஒருமுறை தலையில் தேய்த்து வெந்நீரில் குளித்துவரக் கண்கள் குளிர்ச்சியடையும் தலைப்பாரம், உடற்சூடு ஆகியனகுறையும். நல்லெண்ணெய் 15 நாட்களுக்கு ஒருமுறை தலையில் தேய்த்து வெந்நீரில் குளித்துவரக் கண்கள் குளிர்ச்சியடையும் தலைப்பாரம், உடற்சூடு ஆகியன குறையும்.

## பாக்கு மெல்லும் பழக்கத்தால் வாய்ப்புற்று

**வெற்றிலை** பாக்கு, பான் பராக் உள்ளிட்ட புகையிலையுடன் கூடிய பாக்கு கலப்புகளை சதா மென்றுகொண்டிருப்பவர்களுக்கு வாய்ப் புற்று நோய் ஏற்படும் வாய்ப்பு மிக அதிகமாகும்.

சுயிங்கத்தில் ஆரம்பித்து நாள் முழுவதும் மெல்லும் இப்பழக்கம் உள்ளவர்கள், பின்னாளில் பான் பிராக் போன்ற புகையிலை கலந்த பாக்கை மெல்ல தொடங்குகின்றனர். இவைகளை மெல்லும்போது சுரக்கும் உமிழ்நீருடன் கலக்கும் பாக்குச்சாறு, வாய்க்குள் உள்ள கன்ன உள் சுவர்களை பாதிக்கிறது. வாய் உள் சுவர்களில் உள்ள தசை நார்கள் நாளடைவில் இறுகத் தொடங்குகின்றன. ஒரு கட்டத்தில் அவை மிக இறுக்கமாக ஆகிவிடும்போது, வாயை அசைக்க முற்படும்போது சதை நார்கள் ஒத்துழைக்காது. மாறாக, அவை கடினப்பட்டு, வாயில் இருந்து எச்சில் சுரந்து வெளியே வழியும்போது கூட ஒன்றும் செய்ய முடியாத நிலை உருவாகிறது.

இப்படிப்பட்ட கடினப்பட்ட வாய் உள் தசை நார்களில் புற்றுநோய் உருவாகிறது. அது மிகக் குறுகிய காலத்தில் வாய் புற்றுநோயாக ஆகி, பேச்சுக்கும் பிறகு உயிருக்கும் உலை வைத்துவிடுகிறது. இந்த வாய்புற்றுநோயை ஆங்கிலத்தில் ஓரல் சப்மியூக்கஸ் ஃபைரோசி (Oral Sub mucous fibrosis - OSF) என்று கூறுகின்றனர்.

வெற்றிலை - பாக்கு போடுவோரில் நாள் முழுவதும் அதனை குதப்பிக் கொண்டிருப்பவர்களைத் தவிர, அது பெரிதாக யாரையும் பாதிப்பதில்லை. ஆனால், பான் பாரக் போன்ற புகையிலையுடன் கலந்த பாக்கை குதப்புபவர்களுக்கு நிச்சயம் கடும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த ஒன்றரை இலட்சம் பேர் ஒவ்வொரு ஆண்டும் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர். இவர்களில் 50 வீதத்தினருக்கு வாய்ப் புற்றுநோய் ஏற்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது 2004 ஆம் ஆண்டுக் கணக்கு. இப்போது இரண்டு மடங்காகியிருக்கலாம்.

2004 ஆம் ஆண்டில் இது தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வில், சில மரபணுக் கூறுகள் கொண்டவர்களை இந்த நோய் மிக வேகமாகப் பாதிக்கிறது என்று கண்டுபிடித்துள்ளார்கள். எச்.ஓ 1 என்ற அந்த மரபணுக் கூறு கொண்டவர்களில் 147 பேரை சோதித்துப் பார்த்ததில், 71 பேருக்கு வாய்ப் புற்றுநோய் ஏற்பட்டிருந்தது. எவ்வாறு இதயநோய் அல்லது நுரையீரல் நோய்கள் குறிப்பிட்ட சில மரபணுக் கூறுகளைக் கொண்டவர்களை அதிகமாகப் பாதிக்கிறதோ, அதேபோல், இதற்கும் மரபணுக் கூறுகள் உதவுகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.

மரபணுக் கூறு எதுவாக இருப்பினும், வாய்ப் புற்றுநோய்க்கு வித்திடும் பாக்கு போடும் பழக்கத்தை தவிர்ப்பது நல்லது. "பாக்கை மெல்வானேன், இப்படி நோய் பற்றிச் சாவானேன்". குழந்தைகளுக்கு சுயிகம் கொடுப்பது. அதனை பொழுதிற்கும் அவர்கள் குதப்பிக் கொண்டிருக்க அனுமதிப்பது போன்ற பழக்கங்களை பெற்றோர்கள் முற்றிலுமாக தவிர்த்திடல் வேண்டும்.

**தே**யிலை சுவையான தேநீர் தயாரித்து அருந்த மட்டும்தான் என்று நினைக்கின்றீர்களா? அதுதான் இல்லை. தேயிலை மருந்துப் பொருளாகவும் அழகு சாதனைப் பொருளாகவும் பல்வேறு நன்மை செய்கின்றது.

தேநீர் தயாரித்த பின்பு வடிகட்டிய சக்கையை எறிந்து விடாதீர்கள். வெயிலில் நன்றாக உலர்த்தி எடுத்துக்கொள்ளவும்.

## தேயிலை இருந்தால் தேவையில்லை பாமசி

தலை குளிக்கும் நாளில் இரண்டு தேக்கரண்டி காய்ந்த தூளை அரைக் கப் .தண்ணீரில் கொதிக்க வைத்து கறுத்த நீரை வடிகட்டி எடுத்துக்கொள்ளவும். தலை குளித்த பிறகு கடைசியாகத் தேநீரை தலையில் ஊற்றி அலசிய பின்னர் உலர்த்தவும். கூந்தல் வளரவும் கறுத்த நிறமாக மாறவும் இவ்வாறு வாரம் ஒருமுறை செய்து வரலாம்.

**முகச் சுருக்கம்?** வடிகட்டிய தேயிலைச் சக்கையை சிறிது சீனியைச் சேர்த்து முகம் முழுவதும் தடவி 15 நிமிடங்கள் உலரவிடவும். பின்னர் வெதுவெதுப்பான நீரில் சில துளிகளில் எலுமிச்சையும் பழச்சாறும் கலந்து முகத்தைக் கழுவினால் நாளடைவில் முகச் சுருக்கம் குறையும்.

**வாய்வுத் தொந்தரவாக இருக்கின்றதா?** காலைத் தேநீருடன் இஞ்சித் துண்டை தோல் நீக்கித் தட்டிப்போட்டு தேநீர் தயாரித்து அருந்த வாய்வு உபத்திரவம் இருக்காது. பசி மந்தமாக உள்ளவர்களுக்கும் இந்தத் தேநீர் ஏற்றது.

**உடல் பருமனா?** அதிகாலை வெறும் வயிற்றில் இரண்டு கப் தண்ணீர் குடித்துவிட்டு ஒரு மணி நேரம் கழித்து பால்,சீனி சேர்க்காமல் தேன் சேர்த்த தேநீர் அருந்தினால் உடற்பருமன் குறையும்.



## ஹாய் டா



## பழைய கூட்டணியில் புதிய படம்

தயாரிப்பாளர் ஒஸ்கார் ரவிசந்திரன், உலக நாயகன் கமல்ஹாசன் தயாரித்துள்ள விஸ்வரூபம் படத்தை வாங்கியிருக்கிறார். சினிமா ரசிகர்கள் ஆவலாக எதிர்பார்க்கும் கமல்ஹாசன் தயாரித்துள்ள விஸ்வரூபம் வரும் 25ஆம் திகதி திரைக்கு வருகிறது. இந்தப்படத்தின் NSC - வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு விநியோக உரிமையை பிரபல பட அதிபர் ஒஸ்கார் ரவி சந்திரன் பெற்றுள்ளார். உலகநாயகன் கமல்ஹாசனின் நடிப்பில் தசாவதாரம் படத்தை தயாரித்த ஒஸ்கார் பட நிறுவனம் விஸ்வரூபம் படத்துக்கு பின்பு கமல் நடிக்கும் மெகா பட்ஜெட் படத்தை தயாரிக்கிறது. கமல்ஹாசன்-ஒஸ்கார் ரவி சந்திரன் கூட்டணி விரைவில் புதுப்படத்தை தொடங்க திட்டமிட்டு வருகிறது.

தமிழில் உருவாகும் 'உ' படத்தில் சூப்பர் சிங்கர் ஆஜித் நடிகராகவும், பின்னணி பாடகராகவும் அறிமுகம் ஆகிறார். இதுகுறித்து தம்பி ராமையா கூறுகையில், எங்க படத்தில் ஒரு குட்டி டூயட் பாட்டு வருது. அதை யாரை பாட வைக்கலாம்னு இசையமைப்பாளர் அபிஜித் ராமசுவாமியும் நானும் பேசிட்டிருந்தோம். அப்போ தான் சூப்பர் சிங்கர் போட்டில ஆஜித் பாடிட்டிருந்தான். எப்படியும் இறுதிப்போட்டியில அவன் தான் ஜெயிப்பான்னு எல்லாரும் சொன்னாங்க. அப்டியே நடந்தது.

ஆனா அவன் ஜெயிக்கிறதுக்கு முன்னாடியே நாங்க அவனை பாட வைக்கிறதுன்னு முடிவு பண்ணி அவங்க பெரியப்பா கிட்ட பேசிட்டோம். போட்டியில ஜெயிச்ச உடனே முதன்முதலாக 'உ' படத்திற்காக பாட வச்சோம்.

"திக்கித் தெணறுது தேவதை, வெட்கப்படுதொரு பூமழை" ன்னு தொடங்குற அழகான டூயட் பாட்டு. ஆஜித் கூட பா.ஸ்ருதின்னு இன்னொரு குட்டிப்பொண்ணை பாட வச்சோம்.


ரெக்கார்டிங் தியேட்டர்ல இருந்து வழியனுப்பி வைக்கிறப்போ, கூட வந்திருந்த ஆஜீத் பெரியப்பா கிட்ட ஆஜீத் அழகா பாடிட்டான். அந்த பாட்டுல நடிக்க வைக்கிறதுக்கு ஒரு சுட்டிப்பையனை தேடிட்டிருக்கோம்னு சொன்னோம். ஆஜித்துக்கு நடிக்கிறதுக்கும் ஆசை இருக்குன்னு, அவன் அழகா நடிப்பான்னு சொன்னாரு. அப்டியே அடுத்த வாரத்துல அவனைக் கூட்டிட்டு அம்பாசமுத்திரம் கிளம்பிட்டோம். என மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.



பெரிய திரை







## கன்னடத்தில் பிரியாமணி

பருத்திவீரன் படத்தில் அபாரமான நடிப்பை வெளிப்படுத்தியும், பிரியாமணிக்கு தமிழில் வாய்ப்புகள் வரவில்லை. நான் தமிழில் நடிக்க ஆர்வமாக உள்ளேன் என்று பல்வேறு பேட்டிகள் கொடுத்த பின்னரும், எந்தவித வாய்ப்பும் எட்டிப் பார்க்கவில்லை. எனவே தற்போது கன்னட படங்களில் கவனம் செலுத்த தொடங்கிவிட்டார். அங்கு சிவராஜ் குமார் ஜோடியாக லக்ஷ்மி என்ற படத்தில் நடிக்கிறார். இந்நிலையில் பிரியாமணி போன்று ஓவியாவுக்கும் தமிழில் வாய்ப்புகள் வராததால், சாண்டில்வுட்டுக்கு செல்ல முடிவெடுத்துள்ளாராம்.




## பிலும் கலக்குகிறார் சூப்பர் சிங்கர்





## ஸ்ருதியும் கவிஞராகிறார்!

உன்னைப் போல் ஒருவன் படத்தில் இசையமைப்பாளராக அறிமுகமானவர் ஸ்ருதிஹாசன். அதன்பின் அவரது இசைப்பயணம் தொடரும் என்று பார்த்தால், அதைவிடுத்து முழுநேர நடிகையாக கவனத்தை திசை திரும்பிவிட்டார்.

தமிழ், தெலுங்கு, இந்தி என பிசியாக நடித்து வருகிறார். அதிலும் தெலுங்கில் நடித்த கப்பர் சிங் படம், ஆந்திராவில் பட்டி தொட்டி எங்கும் பட்டையை கிளப்பியதால் அங்கு முன்னணி நடிகைகளின் பட்டியலில் இடம் பிடித்துவிட்டார்.

ஸ்ருதிக்கு கவிதைகள் மீது ஆர்வம் அதிகமாம், எனவே நேரம் கிடைக்கும் போதெல்லாம் கவிதை எழுதுவதில் ஆர்வம் காட்டி வருகிறார். அப்படி இதுவரை அவர் எழுதி வைத்திருக்கும் கவிதைகள் பல தொகுப்புகளாக வெளியிடும் அளவுக்கு உள்ளதாம்.

காதல், சமூகம் எனப் பல கருத்துகளின் அடிப்படையில் தான் எழுதியுள்ள கவிதைகளை தமிழ், ஆங்கிலம் என இரண்டு மொழிகளிலும் வெளியிடத் திட்டமிட்டுள்ளார் ஸ்ருதிஹாசன்.




## மதுரையில் நடந்தது இசை வெளியீடு

பொம்மலாட்டம் படத்திற்கு பின்பு இயக்குனர் இமயம் பாரதிராஜா இயக்கும் படம் அன்னக்கொடியும் கொடிவீரனும். ஜி.வி.பிரகாஷ் இசையமைத்திருக்கும் இப்படத்தின் இசை வெளியீட்டு விழா மதுரையில் நடைபெற்றுள்ளது.

இவ்விழாவுக்கு இசைஞானி இளையராஜா தலைமை தாங்குகியனார். அறிமுக நடிகர் லட்சுமணன், கார்த்திகா, பாரதிராஜாவின் மகன் மனோஜ் கே.பாரதி ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

இந்தப் படத்தின் தொடக்கவிழாவை படத்தின் வெற்றி விழாவைப் போல் தேனி அல்லி நகரத்தில் விமர்சையாக பாரதிராஜா கொண்டாடியது நினைவிருக்கலாம். அதேபோல் பாடல்கள் வெளியீட்டு விழாவையும் மதுரையில் நடத்துகினார்.

இளையராஜா தலைமை தாங்கும் இந்த விழாவில் முதல் பாடல்கள் குறுந்தகடை மணிரத்னம் வெளியிட பாலுமகேந்திராவும், மகேந்திரனும் பெற்றுக் கொள்கின்றனர். ட்ரெய்லரை கே.பாக்யராஜ், கங்கை அமரன், விக்ரமன் வெளியிட நடிகர் வடிவேலு உள்ளிட்டவர்கள் பெற்றுக் கொண்டனர்.



## அவுஸ்திரேலியருடன் சுற்றுகிறார் இலியானா

அவுஸ்திரேலியாவை சேர்ந்த புகைப்பட நிபுணர் ஆண்ட்ரு என்பவருடன் சமீபத்தில் மும்பையில் இரண்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார் இலியானா. இதையடுத்து இலியானாவிற்கு குறித்த நபருக்கும் காதல் இருப்பதாக கிசுகிசு கிளம்பி உள்ளது.

அவுஸ்திரேலியா நாட்டு புகைப்பட நிபுணர் ஆண்ட்ருவும், இலியானாவும் கடந்த ஒரு வருடத்துக்கு முன் சந்தித்தனர். அப்போது முதல் இருவரும் பரஸ்பரம் நட்பு பாராட்டி வந்தனர். ஆண்ட்ருவை தனது வீட்டுக்கு அழைத்துச் விருந்து கொடுத்திருக்கிறார். இதுபற்றி இலியானா அம்மா சமிராவிடம் கேட்டபோது, இலியானா நடிப்பில் கவனம் செலுத்தி வருகிறார், 3 இந்தி படங்களில் நடிக்கிறார். அப்படியிருக்கும்போது காதலிப்பதற்கு நேரம் எங்கே இருக்கிறது.

ஆண்ட்ருவும் இலியானாவும் நல்ல நண்பர்களாக பழகிவருகின்றனர். அவர்களைப்பற்றி வேறு எந்தக் கதையும் கட்டி விட வேண்டாம் என திட்டவட்டமாக கூறியுள்ளதாக தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



## பிடித்தமானவர் கிடைத்தால் த்ரிஷாவிற்கு டும் டும் டும்



விஷால்- த்ரிஷா- சுனைனா நடிப்பில் பொங்கலுக்கு வெளியான சமர் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. இப்படத்தின் வெற்றிக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. இதில் நடிகர் விஷால், இயக்குனர் திரு, நடிகை திரிஷா ஆகியோர் கலந்து கொண்டனர்.

சமர் படத்தில் விஷாலுடன் மிகவும் நெருங்கி நடித்தது குறித்து த்ரிஷாவிடம் கேட்கப்பட்டது. இதற்குப் பதிலளித்த த்ரிஷா, எனக்கும் விஷாலுக்கும் நீண்ட நாள் நட்பு. ஆனால் நாங்கள் நடிப்பதற்கு தற்போதுதான் வாய்ப்பு வந்தது. நாங்கள் நண்பர்கள் என்பதால் சீரியஸான காட்சிகள் நடிக்கும் போது கூட சிரித்துக்கொண்டே இருந்தோம் என்றார்.

# தேன் கிண்ணம்

## உளியால் செதுக்கப்பட்ட நினைவலைகள்



அணுவணுவாய் வதைக்கிறதே
கடந்து வந்த காலங்களில்
தடம் பதித்த நினைவுகளின்
நிழல் படங்கள்.

மறக்க நினைக்கையிலும்
மாறாத வடுக்கள்
ஆறாத கண்ணீராய்
ஆர்ப்பரித்து ஓடுகிறதே.

நிஜங்கள் தொலைந்த இவ்வுலகில்
நிழலில் மறைந்து கொண்ட
நிதர்சனங்களை - நாம்
நித்தம் தேடிய பொழுதுகளிலும்....

நீங்காத நினைவலைகள்
நிம்மதியைக் கலைக்கின்றனவே
ஐயகோ! என் செய்வோம்
இறைவா என் செய்வோம்.

நிரந்தரமற்ற வாழ்க்கையிலே
நிர்க்கதியற்றுத் தவிக்கும்
ஏழைத் தமிழர் நிலை கண்டு
வாழ்வில் ஏற்றி விடுவீரோ - இல்லை

வார்த்தைகளால்
ஏளனம் செய்வீரோ?
பதில்கூறுங்கள்
அப்பாவித் தமிழர் நம்மவர்க்கு!

ந.ரமில்டன், ஊர்காவற்றுறை.

## ஈழத்துக் கவிஞர்கள்

### குலசிங்கம் றஜீவன்

(ஏழாலை மேற்கு)



ஈழத்தின் குறிப்பிடத்தக்க கவிஞர்களில் ஒருவர். ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

கிராமத்து குயில் ஓவியா என்ற புனைபெயரில் எழுதுபவர்.

மரபுக் கவிதை - புதுக் கவிதை இரண்டிலும் அழகிய கவிதைகளை தருகிற றஜீபன் கலாசார உத்தியோகத்தராக பணிபுரிகிறார்.

இவரது கவிதை நூல்கள்.
மௌனத்துயில்
ஒரு நதியின் தேடல்
வலிகளை தாங்கி
பேசற்க
நகுநயம் மறைத்தல் என்பனவாகும்.

இவரது கவிதையொன்று.


### எமக்கான இருள்

நீண்டுகொண்டே போகிறது
இரவின் கொடிய இருட்டு
ஏதுமறியாக் குழந்தை போல
இன்னும் விழிபிதுங்கியபடியே இருக்கிறோம்
எமக்கான ஒரு பகல்
இன்னும் விடியவே இல்லை
தெருநாய் குரைப்பும் வேலியோரச் சரசரப்புமாய்
எங்கள் இருள்
நீண்டுகொண்டே செல்கிறது
காற்று வாசனையில்கூட கந்தகநெடி
மாறவில்லை
இன்னும் மீதமிருப்பதாய் எம்மை
அச்சமூட்டுகிறது
வழிப்போக்கர்கள் யாருமில்லாது
தெருவிளக்குகள்
சிணுங்கிக்கொண்டிருக்கிறது
ஊழிப்பெருந்தாண்டவம் உக்கிரமடைந்து
ஓய்ந்தது
இருப்பினும் இன்னமும் உடுக்கொலிகள்
கேட்டவண்ணமுள்ளன.



வேலணையூர் தாஸ்

## முழுவதும் புரிந்தது



ஓடியது ஓடுங்கி
ஊளுளும் சுருஞ்கி
ஊலுகும் புரீந்து பேுடது.
குடலுக் குணுனுடட
முதுஜமுஜயுக் குடடுடியது!

ஆடியது ஆடுஞ்கி
ஆஜசுகுள் குஜறுந்து
ஆனுபுசு சூழுலுக்குள்
ஆதீலுமே ஆடுஞ்கீயுபேுடது
நுனுபுருகுள்
நுழுவீபு பேுடயீருந்துடருகுள்!

தேுடியது தீருந்து
தேகுமு நுலீந்து.
மூடியு குதுவுகுள்
முழுவுதும் தீறுந்துபேுடது
முனுனே பேுடயுந்துது
பீனுனுடல் புலீந்துது!

வுடலீபுசு சேுடஜலுயீல்
வுசுந்துமு கீஜடுந்துமு
வுந்தீடுடது ஞூடனுமு.
முதுஜமுக் குளுந்தில்
மூழ்கீ ஏழுந்துபேுடது
முழுவுதும் புரீந்துது!

நா.ஜெயபாலன், பிபிலை.

## விலைவாசி



வெளிச்சமில்லா
மனங்களில்
வெள்ளி நிலா
விளக்கேற்றுகின்றது
எரியும் தீபங்களில்
எண்ணெய்
தீர்ந்து போனதால்..

விலையேற்றமும்
மலையேற்றமும்
விகிதாசாரங்களில்
ஒன்றுக்கொன்று
விஞ்சியபடி...

போர்ச் சுமையும்
வரிச்சுமையும்
பொருட்சுமையும்
பொருந்திக் கொண்டது
அடுப்பங்கரைகளில்...

அரிசியோ
உச்சவில்லை
அன்றாடப்
பால்மாவோ...
மிச்சவிலை.

ஊர்வாசியும்
விலை வாசியும்
இருதுருவங்களானது
இடைவெளிகளில்...

பாவிகளின்
வயிறுகள் தான்
பற்றி எரிகின்றது
பானைகளில்...

இறங்கி வா..
விலைவாசியே..
வாசல்படிகளில்...

க.நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.

## பயன் தான் என்ன?



காதலிப்பதில் பயன்
என்ன?
நீ வரும் பாதை
எதுவென்று
தெரியாமல்
பாதை தெரிந்தும்
பயன் தான் என்ன?
நீ யாரென்று
தெரியாமல்.

- கோப்பாய் தாரணி -

## வட்டுவாகல் ஆலமரம்



அலைதழுவும் கடல் பார்த்து
இலை நிறைய நின்று
கலையழகாய்
காட்சி கொடுத்தது அக்காலம்.

இலையும் கிளையும்
என்னில் தொங்கிய வேரும்
எறிகணையில் எரிந்து போக
மரக்கட்டை எனும்
மகுடத்தோடு இக்காலம்.
இராப் பொழுதில்
இறால் பிடிக்கும்
மீனவ நண்பரும்...
எந்நாளும்
இவ்வழி நடக்கும்
ஏழைத் தொழிலாளரும்
என்னருகே வந்திருந்து
இளைப்பாறிய
காலமெங்கே?



வட்டுவாகல் பாலத்தின்
வரவேற்பு முனையோடு
நிறைகுடம் போல்
நின்றே காட்சியளித்த
என்னழகு எங்கே?

உறவுகளே...
உயிரைப் பிடித்தபடி நீங்கள்
ஓடிச் சென்ற
காட்சி கண்டு
உள்ளமெல்லாம் கண்ணீர்
வடித்தேன்.

ஆயிரமாய் நீங்கள்
அடியெடுத்து வைக்கையில்
அடியெடுத்து
வைக்கமுடியா நான்
அழுது செத்தேன்.

எறிகணைத் துண்டுகளும்
ஏராளம் ரவைகளும்
என் மேனியை
கன்னமிடுகையிலும்
என்வலி நினையாது
உம் வலி நினைத்தேன்.



இன்று
மரக்கட்டை எனும்
மகுடத்தோடு
மனம் கலங்கும்
எந்தனுக்கும்
வரலாறு ஆயிரம்
வதைகளும் ஆயிரம்.

ஒன்றை நினையுங்கள்
உங்களையும் என்னையும்
ஓர் நாளும் வேறாக்கி
உளம் தனில் எண்ணாதீர்.
இழந்ததும்...
ஏராளம் வலி ஏற்றதும்
நிலைமாறி இன்று
நெஞ்சில் அழுவதும்
நீங்கள் மட்டுமல்ல...
நானும் தான்.



யோ.புரட்சி, வள்ளுவர்புரம்.

கலாபூஷணம்
கே.எஸ்.ஆனந்தன்.

அத்தியாயம் 22

# சிங்கை மைந்தன் அமரசிம்மன்



**தனது** மாளிகை நோக்கி ஆனந்த நடை போட்ட அமரசிம்மன் உள்ளத்தில் சேர இளவரசி நர்த்தனமாடிக் கொண்டிருந்தாள். அவளுடைய எழிற்கோலத்தை மானசீகமாக அணைத்து மகிழ்ந்தபடியே சயனஅறை நோக்கிச் சென்றான். மஞ்சத்தில் வீழ்ந்து சொற்பன உலகில் சஞ்சரித்தான்.

"பிரபு சாப்பாடு தயார்." என்றான் பரிசாரகன்.

"இன்று எனக்குப் பசியில்லை பால்மட்டும் போதும். அதையும் இங்கே எடுத்து வா" என்றான்.

திங்கள் மூன்று கடந்துவிட்டிருந்தது. கனகசூரியன் மன்னனாக மகுடம் சூட்டிக்கொண்டான். மன்னனாக இளவரசன் சிம்மாசனத்தில் அமர்ந்தபோது சிங்கை நகர் விழாக் கோலம் பூண்டிருந்தது. முடிசூட்டு விழாவிற்கு சேர இளவரசன், விஜய நகரிலிருந்து இராசப் பிரதிநிதி என அரசியல் பிரமுகர்கள் வந்திருந்து சிறப்பித்தனர்.

சேர இளவரசனும், குணவீரரும் அடிக்கடி சந்தித்து இரகசியமாக கலந்துரையாடினர். சேர இளவரசன் நாடு திரும்பும் போது தனது சகோதரியையும் அழைத்துச் சென்றான். சேர இளவரசி நாடு திரும்பும் முன்னர் முதல்நாள் இரவு பௌர்ணமி நிலவு மலர்ந்த வேளையில் அமரசிம்மனுடைய மாளிகை நோக்கிச் சென்றான். அங்கே அவரில்லை. தோழி நீலவேணியைத் திரும்பிப் பார்த்தாள்.

"தேவி என்னைப் பார்த்து முறைப்பதில் பலன் இல்லை. அவர் இன்று கடற்கரைக்குச் சென்றிருப்பார்" என்றாள்.

"ஏன் கடற்கரையில் என்ன விசேடம்?"

"இன்று பௌர்ணமி. ஒவ்வொரு பௌர்ணமியும் அவர் அங்கே செல்வது வழக்கம் என்று அரண்மனையில் உள்ளவர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன்"

"நாங்கள் நாளைக்குப் புறப்படுவது அவருக்கு தெரிந்திருந்தும் அப்படி என்ன வேலை அங்கே?"

"அவரை கேட்க வேண்டிய கேள்வி. என்ன கேட்டுப் பிரயோசனம் இல்லை தேவி"

"சரி! சரி" என்று கூறியவாறு அரண்மனை நோக்கிச் சென்றாள் இளவரசி.

கடற்கரையில் பௌர்ணமி நிலவை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த அமரசிம்மனுக்கு பார்க்குமிடங்கும் இளவரசியின் வண்ணநிலா வதனமே காட்சியளித்தது. அவனால் நிம்மதியுடனிருக்க முடியவில்லை. எழுந்து சில வினாடி பொழுது உலாவினான். மனம் தெளிவின்றி அலை பாய்ந்தது. "காதல் மனிதனைப் பைத்தியமாக்கிவிடும் போலும்" என்று தனக்குத் தானே கூறிக் கொண்டு அரண்மனை நோக்கி நடக்க முயன்றான்.

சிறிது தொலைவுதான் நடந்திருப்பான். நிலவு ஒளியில் யாரோ புரவி மீது வருவது தெரிந்தது. சிலவேளை இளவரசியே தன்னைத் தேடி வருகின்றாளோ என நினைத்தவன் விழிகளைக் கூர்மையாக்கி நோக் கினான். புரவி மீது இருப்பது பெண்ணல்ல. ஆண். அப்படியானால்...? அரையில் செருகியிருந்த குறுவாளில் கரம்பதிய புரவி வீரனை எதிர் கொள்ள தயாராய் நின்றிருந்தான்.

***

நீலக் கடற்பரப்பில் நீந்தும் அன்னைப் பட்சிபோல புரண்டு வரும் அலைகளைக் கிழித்துக் கொண்டுசெல்லும் அந்தக் கலத்தின் மேற்குப் பகுதியில் நின்றிருந்தாள் சேர இளவரசி மதுருவல்லி. ஒன்றன் பின் ஒன்றாக துரத்திவரும் அலைகளை வேடிக்கை பார்த்து பரவசமுற்றாள். குணதிசை வானத்தில் சூரியன் தனது எழிற்கோலத்தின் ஆளுமையை பூமி மாதுமீது மட்டுமன்றி கடலன்னையின் மீதும் செலுத்தும் அழகியற்திறன் கண்டு வியந்தாள். மாளிகைக்குள் பெரும் பொழுதை கழித்தவளுக்கு கடல் மடியின் தாலாட்டு ஆனந்தக் கிறக்கத்தை ஏற்படுத்தியது. கலத்தின் முகப்பு அன்னப்பட்சியின் முகவடிவில் அமைக்கப்பட்டு பாய்மரங்களிலும் வண்ணப் பூச்சுக்கள் பூசப்பட்டிருந்தது. காற்றின் வேகத்துக்கேற்ப பாய்புத்துயிர் பெற்று அந்தக் கலத்தின் அமைப்பையே அசையும் மாளிகையாக்கியிருந்ததைப் பார்க்கப் பார்க்க அவள் மனதில் அமரசிம்மனின் புன்னகை தவழும் முகம் நிழற்படமாய் விரிந்து பரந்தது.

"இளவரசி இப்போதாவது கடற்கன்னியின் அற்புத லீலைகளைப் புரிந்துகொண்டீர்களா?" என்று ஏளனம் செய்வது போலிருந்தது. அவள் தன்னை மறந்தாள். தன் நாமம் மறந்தாள். தலைவனின் நினைவோடு. அந்த நினைவின் உணர்வுகளோடு சங்கமித்து நின்றாள்.

முதல்நாள் இரவு மன்னர் தூதுவன் ஒருவனை அனுப்பி கடற்கரையினின்றும் அமரசிம்மனை அழைப்பித்தும் தங்கள் பிரயாணம் பற்றி அவனிடம் கூறியதும் ஒன்றன்பின் ஒன்றாய் காட்சிகளாய் நினைவலைகளில் தோன்றிக் கொண்டிருந்தன.

அவளுக்கும் தனக்கும் தனக்கம் திருமணம் நிட்சயம் செய்யப்பட்டபின்னரும் தன்னோடு ஒட்டி உறவாடாது. கிட்ட நெருங்காது பண்புடன் பழகும் வைராக்கியம் பெற்ற அவன் மனதையும் நினைத்துப் பெருமிதப்பட்டாள்.

"காலையில் நான் அண்ணாவுடன் தாயகம் திரும்புகின்றேன் தெரியும் தானே?" என்றாள் மதுர வல்லி.

"தெரியும். இன்று மாலை தங்கள் மாளிகைக்குள் வந்தேன். தாங்கள் கடற்கரை சென்றுவிட்டதாக அறிந்து திரும்பினேன்."

"அப்படியா?" என்றான் சர்வசாதாரணமாக.

"அப்படி என்னதான் கடற்பரப்பில் காண்கின்றீர்கள்? நாளை உதயத்துக்கு நான் புறப்படுகின்றேன் என்பது தெரிந்தும் சில விநாடிப்பொழுதாவது தனிமையில் என்னுடன் கதைக்க வேண்டும் என்று தங்களுக்குத் தோன்றவில்லையா?"

"தேவி" என்று வாய்விட்டுச் சிரித்தான்.

"எதற்கும் சிரித்து மழுப்பிவிடுங்கள். ஒரு வாரம் தங்களைப் பிரியப் போகின்றேனே என்று ஏங்கும் என் நெஞ்சத்து உணர்வுகளைத் தாங்கள் புரிந்து கொள்ளவில்லையா?"

"தேவி" கடற்கரைக்குச் சென்றேன் ஏன்? அந்தக் கடலம், பௌர்ணமி நிலவும் அலைகளின் தாலாட்டும் இதுவரை நாள் பிரமையாக நான் அனுபவித்த கற்பனை சுகங்களும் என் மனதுக்குத் தான் தெரியும்.

ஆனால் இன்று நீலக் கடற்பரப்பின் மேல் வரும் பூரணை நிலவில் ஓர் அழகு முகத்தைக் கண்டேன். அதனைத் தாவிப் பிடிக்க எழுந்து விழும் அலைகளைப் பார்த்து மகிழ்ந்தேன். மனம் அமைதியின்றி தவித்தது. திரும்பலாமா என்று முடிவு செய்து எழுந்த போதுதான் தூதன் வந்தான்."

(தொடரும்...)

3 ஆவது ஆண்டில்...

தினமுரசு

தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

நாளிதழ்

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

ரூ.10/= மட்டுமே

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - 'பரமர் சங்கமம்", "மெய்தான் பாருங்கோ" "பதிவிறக்கப்பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் - விடைகளுடன் தினமும்

சனி, ஞாயிற்றுக்கிழமைகள் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள், மாதிரி வினாக்களும் விடைகளும் வெளியாகின்றன!

100 பக்கங்களைக் கொண்டு வெளிவர இருக்கின்ற முரசின் ஆயிரமாவது இதழில் பெண்கள் சம்பந்தப்பட்ட உங்களுக்குத் தெரிந்த தகவல்களையும் இடம்பெறச் செய்து நீங்களும் இடம்பிடிக்க விரும்பினால் உடனடியாக அவற்றை முரசின் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். தரமான தகவல்கள் நிச்சயம் இடம்பிடிக்கும்.



# லேடிஸ் ஸ்பெஷல்

**இன்றைய** காலத்தில் ஒவ்வொரு உறவுகளுக்குள்ளும் பெரும் பிரச்சினை இருந்து வருகிறது. இதற்கு காரணம் இருபாலாருக்கும் சரியான புரிந்துகொள்ளும் திறன் இல்லாததே ஆகும். அதிலும் தற்போது காதலர்களுக்கு வரும் பிரச்சினைகளில் முக்கியமானது, காதலிக்கு ஆண் இனத்திலோ, காதலனுக்கு பெண் இனத்திலோ நண்பர்கள் இருப்பதுதான்.

அதிலும் அந்த நட்பை பார்க்கும்போது வரும் பிரச்சினை காதலர்களுக்குள் மட்டும் வராமல், அதனை கேட்பவர்களுக்கு, பார்ப்பவர்களுக்கு தவறாகவே தோன்றும். இப்போது உதாரணமாக ஒரு பெண்ணுக்கு ஆண் தோழன் இருப்பது யாருக்காவது தெரிந்துவிட்டால், அதைக் கேட்கும் போது அனைவரது புருவமும் நிச்சயம் மேலே எழும்பும். ஒரு பெண்ணுக்கு ஆண் தோழன் இருந்தால் மட்டும் ஒவ்வொரு விதமான பேச்சு எழும். உண்மையில் ஒரு பெண்ணுக்கு ஆண்



## பெண்ணுக்கு ஆண் தோழன் இருக்கலாமா?

தோழன் இருந்தால், என்னவெல்லாம் நடக்கும் என்று பார்ப்போமா!

பெண் தோழிகளைவிட ஆண் தோழர்கள் இருந்தால், நிறைய சந்தோசம் இருக்கும். எப்படியெனில் அவர்கள் எப்போதும் கலகலப்பாக இருப்பார்கள். அனைவரையும் சிரிக்க வைத்துக் கொண்டே இருப்பார்கள். எந்நேரமும் ஒரே வேடிக்கையாக இருக்கும். ஏதேனும் அவசர உதவி என்றால் பெண் தோழிகள் கூட சில சமயங்களில் செய்யமாட்டார்கள். ஆனால் அதுவே ஒரு ஆண் தோழனிடம் சொன்னால், நிச்சயம் அந்த உதவி கிடைக்கும். ஆண்கள் ஒரு பெண்ணை உண்மையில் தோழியாக நினைத்துவிட்டால், அது எத்தகைய சூழ்நிலையிலும் மாறாமல் இருக்கும். மேலும் அந்த நட்பிற்கு ஏதேனும் களங்கம் ஏற்படும் வகை நேர்ந்தால், அவர்கள் அந்த நட்பிற்காக அவர்களை விட்டு விலகக் கூட முயல்வர்.

அதிலும் ஒரு பெண்ணுக்கு ஒரே ஒரு ஆண் தோழன் இருந்தால், இருவருக்கும் ஒரு நல்ல புரிதல் இருக்கும். மேலும் அந்த நிலையில் அந்த பெண்ணுக்கு வேறு ஏதாவது நண்பர்கள் கிடைத்தால் கூட, அந்த இடத்தில் எந்த ஒரு பொறாமை, கோபம் போன்றவை வராமல் இருக்கும். ஆண் உயிர் நண்பனாக இருப்பது கடினம்.

இந்த உலகில் உள்ள பெண்கள் அனைவரும் சரியான வாயாடிகள். அத்தகைய ஒரு பெண்ணுக்கு காதலனும் இருக்கிறான், நண்பனும் இருக்கிறான். அந்த சமயத்தில், அந்த பெண் நண்பனிடமும், காதலனிடமும் ஒரே மாதிரியான முறையில் பேசுகிறாள் என்றால், அந்த நேரத்தில் காதலனுக்கும், நண்பனுக்கும் என்ன வித்தியாசம். பொதுவாக அந்த விஷயத்தில் வாழ்க்கைத்துணைவர்கள் யாரும் புரிந்து கொள்ளமாட்டார்கள்.

அவர்களுக்கு கோபம்தான் வரும். அப்படியிருக்கையில் நண்பன் உங்களை நன்கு புரிந்து கொள்பவனாக இருந்தால், பின் எதற்கு இத்தனை நாள் அவனுடன் நட்புடன் இருக்க வேண்டும், பழக வேண்டும். அது வீண் அல்லவா?

இப்போது நீங்கள் வாழ்க்கைத் துணை மற்றும் உயிர் நண்பன்மீது ஒரே அளவில் பாசம் வைத்திருக்கிறீங்கள் என்று வைப்போம். இல்லை, உங்கள் துணையின் மீது கொஞ்சம் அதிகமாகவே தான் இருக்கும். ஆனால் ஒரு சமயம் உங்கள் உயிர் நண்பனால், உங்களுக்கும் உங்கள் வாழ்க்கைத் துணைக்கும் பிரச்சினை வந்தால், நீங்கள் இந்த நேரத்தில் யாருக்கு ஆதரவாக பேசுவீர்கள். இது தேவையா?

ஆண் மற்றும் பெண்ணின் எண்ணம் மற்றும் அலைநீளம் ஒரே மாதிரியாக இருக்காது. நீங்கள் என்னவேண்டுமென்றாலும் நினைக்கலாம். ஆனால் அதை ஆண்கள் எப்போதும் அவர்கள் மனதில் தோன்றுவதை வைத்து தான் பேசுவார்கள். பின் அது இறுதியில் வாழ்க்கையை முற்றுப் புள்ளியாக்கிவிடும். எனவே நீங்கள் உங்கள் வாழ்க்கையை நன்கு யோசித்து முடிவெடுங்கள்.

உங்கள் நண்பன் உங்களுக்கு வாழ்க்கை முழுவதும் ஒரே நிலையில் இருக்க முடியாது. அப்படி இருக்க வேண்டுமெனில் அவனே உங்கள் வாழ்க்கை துணையாக இருக்க வேண்டும். உங்கள் உயிர் நண்பனால், உங்களுக்கும் உங்கள் வாழ்க்கை துணைக்கும் பிரச்சினை வந்தால், நீங்கள் இந்த நேரத்தில் யாருக்கு ஆதரவாக பேசுவீர்கள். முதலில் இதற்கு பதிலளியுங்கள்.



## இந்தியாவில் பெண்களில் நிலை?

இந்தியா போன்ற வளரும் நாடுகளில் பெண்களின் பாதுகாப்பு பின்தங்கிய நிலையிலே காணப்படுக்கிறது. பெண்களை அடிமைப்படுத்தி வந்த இந்திய சமூகம் பின்னாளில் பெண்களுக்கான உரிமைகள், போராட்டங்கள் என்று பெண் விடுதலை வடிவம் பெற்றவுடன் பெண்களின் முன்னேற்றும் தற்காலத்தில் கணிசமான அளவு அதிகரித்து உள்ளது. பெண்கள் முன்னேறியுள்ள அதே நிலையில் அவர்களின் மீது நடக்கும் குற்றச்செயல்களும் அதிகரித்தே காணப்படுக்கிறது.


பெண்ணுரிமைகள் பற்றி மேடை போட்டு பேசினாலும் அது வெறும் வெற்றுப்பேச்சாகவே உள்ளது. நடைமுறையில் பெண்களின் உரிமைகள் சந்தர்ப்பம் கிடைக்கும் போதுதெல்லாம் பறிக்கப்படுகிறது. பெண்ணுரிமை பற்றி பேசும் ஆண்கள்கூட வீட்டில் உள்ள பெண்களுக்கு சமஉரிமை கொடுப்பது இல்லை என்பதே உண்மை.

சிறுமிகள் பலாத்காரம், இளவயது பெண்கள் கற்பழிப்பு, வரதட்சணை கொடுமை, பெண்களிடம் உரிமை மீறல் என்று ஒரு பெண் குழந்தை முதல் கிழவி ஆகும் வரை அனைத்து பருவங்களிலும் ஏதாவது வகையில் பெண்கள் அச்சுறுத்தலுக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்தியாவில் உள்ள பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறை பாரம்பரியம் மற்றும் பெண்கள் உரிமைகள் சட்டம் மற்றும் பாதுகாப்பு பற்றி அறிவின்மை காரணமாக பல பெண்களுக்கு தங்களின் அடிப்படை உரிமைகள் பற்றிக்கூட அதிகமாக தெரியவில்லை. இந்தியாவில் பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் கடந்த ஆண்டு அதிகமாக அதிகரித்து உள்ளது.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகமாக நடக்கும் நகரங்களில் இந்தியாவின் தலை நகரமான டெல்லி 13 .3 % சதவித குற்ற பதிவு பெற்று முதலிடத்தில் உள்ளது. பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்களுக்கு தண்டனை கடுமையாக்க வேண்டும். பெண்கள் அனைவரும் தற்காத்துக்கொள்ள வழிமுறைகள் பயிற்றுவிக்க படவேண்டும். பெண்களின் அமைப்புகள், சமூக ஆர்வலர்கள் இணைந்து பல்வேறு பெண் உரிமைகள், பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு முகாம்கள், பேரணிகள் போன்றவை இந்தியா முழுவதும் அதிகளவில் நடத்தப்பட வேண்டும். பெண்கள் அனைவருக்கும் கட்டாய கல்வி கொடுக்க வகை செய்ய வேண்டும்.

எந்த நேரத்திலும் எதுவும் நடக்கும் என்கிற ஒருவித பய உணர்வோடுதான் அநேக இந்தியப் பெண்கள் வாழ்ந்து வருகிறார்கள். பெண் நகரத்தில் வேலைக்கு செல்பவளாக இருந்தாலும் சரி இல்லையேல் கிராமப்புறத்தில் வயல் வேலைக்கு செல்பவளாக இருந்தாலும் சரி. அவளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகத் தான் உள்ளது.




தரையில் முதலில் மல்லாந்து படுத்துக் கொள்ள வேண்டும். இரண்டு கைகளையும் உடலின் பக்கத்தில் தளர்ந்த நிலையில் வைக்கவும். தலை, கைகள், கால்கள் மற்றும் உடல் முழுவதும் மிகவும் தளர்ச்சியான நிலையில் வைக்கவும். பிறகு மூச்சை இழுத்துக்கொண்டே தலையை தூக்காமல் கைகளைக் கொண்டு தரையை அழுத்தாமல் கால்

## தொந்தி குறைய உடற்பயிற்சி!

கட்டை விரல்களை சேர்த்து வைத்து மேலே தூக்கவும். ரொம்பவும் மேலே தூக்கி விடக் கூடாது. திருப்பி கால்களை கீழே இறக்கும்போது மூச்சை வெளியே விட்டுக்கொண்டே மெதுவாக இறக்கவும். குதிக்கால்களை எக்காரணத் தைக் கொண்டும் தரையை தொடக்கூடாது. அப்படி தொட்டுவிட்டால் பயிற்சி முடிந்துவிடும்.

இப்படி ஒரு நாளைக்கு 25 முறை செய்யவேண்டும். புதியவர்கள் 10 முறை செய்தால்போதும். நன்கு பயிற்சி கைகூடியபிறகு 50 முறைகூட செய்யலாம். ஆரம்ப நாட்களில் வயிறு, முதுகெலும்பு, தொடை போன்ற இடங்களில் வலி எடுக்கும் வலியை பொருட்படுத்தாமல் தொடர்ந்து பயிற்சியைப் பழகிவந்தால், படிப்படியாக வலி குறையும், பயிற்சியும் கைகூடும்.

### பலன்கள்

இந்த பயிற்சி முழுக்க முழுக்க வயிற்றுக்காகவே உள்ள பயிற்சி இப்பயிற்சியை தொடர்ச்சியாக செய்துவந்தால் தொந்தி குறைவது உறுதி. பெருங்குடல், சிறுகுடல் அனைத்தும் தூண்டப்பட்டு நன்கு வேலை செய்வதால் வயிறு மந்தமான நிலையில் பசியெடுக்காதவர்களுக்கும் பசி எடுக்கும். இடுப்பில் தேவையில்லாத சுற்று சதை குறைந்து வலிமை பெறும் வலிமை பெறும் தொடை பகுதியும் வலிமை பெறும்.


பரிசு 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-352

கேள்வி : பெண்களுக்கு ஏற்பட்டுவருகின்ற அச்சுறுத்தல்கள் எவை?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-07.02.2013

விடையைப் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 352
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 349 இற்கான விடை :- உளரீதியாக தன்னம்பிக்கை அதிகரித்தால் பெண்களின் அழகு கூடும்.

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- இ.ஹேமலதா 36, சிவன் அம்மன் வீதி, திருநெல்வேலி.

352

பெயர் : ..........

முகவரி : ..........

தே.அ. அட்டை இல : ..........

விடை : ..........

கையொப்பம் : ..........


## செட்டிநாடு மீன் வறுவல்



மீன் - 1/2 கிலோ
மிளகாய்த்தூள் - 4 தேக்கரண்டி
மல்லித்தூள் - 5 தேக்கரண்டி
மஞ்சள்தூள் - 1 தேக்கரண்டி
எலுமிச்சம்பழம் - 1
மிளகு - 2 தேக்கரண்டி
காய்ந்த மிளகாய் - 4
கடுகு - 1 தேக்கரண்டி
கடலைப்பருப்பு - 3 தேக்கரண்டி
உளுத்தம்பருப்பு - 3 தேக்கரண்டி
கறிவேப்பிலை - 2 கொத்து
எண்ணெய் - 11∴2 குழிக்கரண்டி
உப்பு - தேவையான அளவு


**செய்முறை:**

மீனை நன்கு சுத்தம் செய்து கழுவி வைத்துக் கொள்ளவும். மிளகாய்த்தூள், மல்லித்தூள், மஞ்சள் தூள், உப்பு, எலுமிச்சம்பழச்சாறைப் பிழிந்து பேஸ்ட் போல செய்து கொண்டு, அதில் மீனை நன்கு ஊற வைத்துக் கொள்ளவும். குறைந்தது 1மணி நேரமாவது ஊற வைக்கவும். இரவு முழுவதும் ஊற வைத்தால் நன்றாக இருக்கும். மிளகு, காய்ந்த மிளகாய், கடுகு, கடலைப்பருப்பு, உளுத்தம்பருப்பு, கருவேப்பிலை ஆகியவற்றை வாணலியில் தீயாமல் வறுத்து, ஆற வைத்து பொடி செய்து கொள்ளவும்.

ஊற வைத்துள்ள மீனை இந்த அரைத்து வைத்துள்ள மசாலாவில் இரண்டுபுறமும் பிரட்டி எடுத்து அடுப்பில் உள்ள தோசைக்கல்லில் எண்ணெய் விட்டு பொரித்தெடுக்கவும். அடுப்பின் தணலைக் குறைவாகப் பயன்படுத்தினால் மசாலா நன்கு சேர்ந்து, மொறுமொறு, மீன் வறுவல் கிடைக்கும்.

## பெண்களுக்கான மருத்துவக் குறிப்புகள்

- இளவயதில் தினமும் ஒரு கப் பால் குடிப்பது. எலும்புகளை வலுவாக்கி கல்சியம் சத்தை அதிகரிக்கும்.
- முட்டைக்கோஸில் ஈஸ்ட்ரோஜன் அதிகமென்பதால் மார்பகப் புற்று வரமல் தடுக்க கோதுமை உணவுடன் கோஸ் சேர்த்து உண்ணலாம்.
- மார்பகப் புற்று உள்ளிட்ட பல்வேறு புற்று நோய்கள் வராமல் தடுக்க அப்பிள் உதவுகிறது. மாதவிடாய்க் கால மனஅழுத்தம், பயம், பதற்றம் ஆகியவற்றால் தொந்தரவா? அந்த நாட்களில் கோர்ன் ப்ளேக்ஸை காலை உணவாக்குங்கள்.
- கர்ப்பிணிகள், நாவல்பழம் சாப்பிட்டால் வயிற்றில் உள்ள குழந்தை கறுப்பாகப் பிறக்கும் என்பதும், குங்குமப்பூ சாப்பிட்டால் சிவப்பாகப் பிறக்கும் என்பதும் மூட நம்பிக்கையே. தோலின் நிறத்தை நிர்ணயிப்பவை மெலனின் எனப்படும் நிறமிகளே!


2007-01-30
N. RISANA

# ரிசானாவின் மரணம் ஆழமான ஆய்வு

**ரிசானா சிறையில வாடிய நாள் தொடக்கம் அவள் கொல்லப்படும் வரை அவளை நேரில் பார்த்துப் பேசி வீட்டா ரோட தொலைபேசியில் உரையாட வைத்து அவளுக்கு ஆறுதலாக இருந்தவரும் இந்த டொக்டர்தான். கடை சி யாக அவளை உயிரோடு கண்ட நம்மவரும் இந்த டொக்டர் கிபாயாதான்.**

**பறிபோன** ரிசானாவின் வாழ்வும் மரணமும் 2005 மே மாதம் 22 ஆம் திகதி தான் ரிசானாவுக்குக் கரிநாளாய் அமைந்து விட்டிருந்தது. அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. அதுதான் ரிசானா பணிப்பெண்ணாக வேலை புரிந்த வீட்டில் அவள் கடைசியாக இருந்த நாள். அன்று அவள் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப் பட்டாள்.

அதன்பின்னர் ரிசானாவோடு உள்ள வெளியுலகத் தொடர்பு துண்டிக்கப்பட்டு அவளது உலக வாழ்க்கையிலும் இருள் சூழ்ந்துவிட்டது. பின்னர் கொல்லப்படும் வரை சவூதி அல் தவாத்மி சிறைச்சாலையில் தான் அவள் காலத்தைக் கழித்தாள்.

இந்த சிறைச்சாலையில் இருந்து ரிசானா எழுதிய கடிதம் மூலமாகத்தான் அவள் ஏன் சிறையில் வாடுகின்றாள் என்ற செய்தி வெளியுலகுக்குத் தெரிந்தது.

இது ஊருலகத்துக்கு உண்மையைச் சொல்லும் சரித்திரப் புகழ் பெற்ற உருக்கமான கடிதம்.

2007.01.30
அல் தவாத்மி சிறைச்சாலை
அல் தவாத்மி.

தற்போது அல் தவாத்மி சிறைச்சாலையில் கொலைக் குற்றச்சாட்டின் பேரில் சிறைவைக் கப்பட்டுள்ள ரிசானா நபீக் ஆகிய நான் இன்று தெளிவான மன நிலையுடன் பின்வருவன வற்றைக் கூறுகின்றேன். இலங்கையில் எனது முகவரி எம்எஸ் நபீக் சாலி நகர் மூதூர் என்பதாகும். எனது தற்போதைய (2007 இல்) உண்மையான வயது 19. எனது பிறந்த திகதி 02.02.1988. எனது சப் ஏஜண்ட் பஜூர்தீன் என்பவர் எனது பிறந்த திகதியை 02.02.1982 எனக் குறிப்பிட்டு பாஸ்போர்ட் வழங்கினார். நான் 2005.04.01 இல் சவூதி வந்தேன். இந்த வீட்டில் ஒன்றரை மாதம் வேலை செய்தேன். இந்த வீட்டில் சமைத்தல், கழுவுதல் உட்பட 4 மாதக் குழந்தையையும் பராமரிக்கும் பொறுப்பும் எனக்குத் தரப்பட்டிருந்தது. குறிப்பிடத்தக்க பிரச்சினைகள் ஏதும் இருந்திருக்கவில்லை, வீட்டாருடன் நன்றாகவே இருந்தேன்.

குறித்த சம்பவ தினம் ஞாபகமில்லை. அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. பகல் 12.30 மணி இருக்கும், அப்போது வீட்டு எஜமானி வீட்டில் இருக்கவில்லை. முறையே 3 மற்றும் 4 வயதையுடைய மற்றக் குழந்தைகள் இருந்தார் கள். வழமையாக நான் குறித்த அந்த 4 மாதக் குழந்தைக்குப் பால் கொடுப்பதுண்டு. வழமைபோல் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்த போது குழந்தையின் வாய் மூக்கு வழியாக பால் வெளியே கொட்ட ஆரம்பித்தபோது குழந்தையின் தொண்டையை மெதுவாகத் தடவினேன். அப்போது குழந்தை கண்மூடி இருந்தபடியால் அக்குழந்தை தூங்கி விட்டிருக்கின்றது என நினைத்தேன்.

பின்னர் எஜமானி பி.ப 1.30 மணியளவில் வந்து சாப்பிட்டுவிட்டு பிள்ளையைப் பார்த்து விட்டு எனக்கு செருப்பாலும் கையாலும் அடித்தார். எஜமானி அடித்ததில் என் வாயிலிருந் தும் மூக்கிலிருந்தும் இரத்தம் வந்தது. பின்னர் எஜமானி குழந்தையைத் தூக்கிக் கொண்டு போனார். பின்னர் நான் பணி புரிந்த வீட்டுக்கு பொலிசார் வந்து என்னைக் கைதுசெய்து கொண்டு போயினர். பொலிசில் வைத்து எனக்கு ஒரு பட்டியால் அடித்தனர். வற்புறுத்தினர். குழந்தையின் கழுத்தை நசித்ததாக கூறுமாறு வற்புறுத்தி அடித்தனர். அவ்வாறு கூறாவிடில் கொல்லப் போவதாகவும் மின்சாரம் பாய்ச்சப் போவதாகவும் கூறினர். எனவே பயத்தின் காரணமாக அவர்கள் எழுதித் தந்த பேப்பரில் கையொப்பமிட்டுக் கொடுத்தேன்.

பின்னர் என்னை வேறொரு இடத்திற்குக் அழைத்துச் சென்று கேட்டபொழுது சித்திர வதைப் பயத்தின் காரணமாகவும் பதட் டத்தின் காரணமாகவும் ஏற்பட்ட ஞாபக மறதி யினால் நான் அவ்வாறு வேறு வழியின்றி அவர்கள் எழுதிக் கொடுத்த பத்திரத்தில் கையொப்பமிட்ட தாகக் கூறினேன். என்னைப் படைத்த இறைவன் மீது சத் தியமாக (அல்லாஹ் மீது ஆணையாக) நான் குழந்தையைக் கொல்வதற்கென்று கழுத்தை நசிக்க வில்லை. இவ்வாறு ரிசானா, அல் தவாத்மி சிறையிலடைக்கப் பட்டிருந்த போது செயற்பாட்டாளர்களிடம் கொடுத்த வாக்குமூலக் கடிதத்தில் குறிப்பிட்டிருந் தார்: இந்தக் கடிதம் உலக ஊடகங்களில் வெளியாகியிருந்தது. உள்ளத்தை உருக்கும் இந்தக் கடிதம் ஒன்றுதான் ரிசானாவின் பரிதாபத்தை உலகறியச் செய்திருந்தது.

சிறையில் அடைக்கப்பட்ட இரும்புக் கூட்டுக் குள்ளே மூடுமந்திரமாக இருந்த ரிசானாவின் துயரக் கதை வெளிவரத் துவங்கியதும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் விழித்துக் கொண்டு அக்கறை எடுத்துச் செயற்பட ஆரம்பித் தனர். எனினும் அவர்களது விடாமுயற்சிகள் எல்லாம் அந்தக் கல் நெஞ்சக்காரர்களின் கொடூரமான உள்ளங்களை இம்மியளவும் அசைக்க உதவவில்லை. 'காட்டரபிகள்' எனும் ஈவிரக்கமற்ற கூட்டத்தாரிடம் இலங்கைச் சிறுமி ரிசானாவின் ஈனக்குரல் எதுவுமே எடுபடவில்லை.

இறுதியில் 2007 ஜூன் மாதம் 07 ஆம் திகதி ரிசானாவுக்கு பகிரங்க மரண தண்டனை என்று சவூதி நீதிமன்றம் தீர்ப்பளித்தது. நீதிமன்றத் தீர்ப்பு வெளியானதுமே துயரத்தால் துவண்டு போனார்கள். ரிசானாவுக்காக பிரார்த்தித்தவர்களும் அவரின் விடுதலைக்காகப் பாடுபட்ட மனித உரிமை ஆர்வலர்களும். நான்கு சுவர்களுக்குள் ரிசானா ஒருத்தி யாகத் தன்னந்தனியாக இருந்து சிந்திய கண்ணீரையும் கவலையையும்விட வெளியே இருந்து முகங்காணாமல் அந்தப் பிஞ்சு உள்ளத்திற்காகப் பாடுபட்ட இளகிய உள்ளங் களின் ஏக்கப் பெருமூச்சுக்கள் எத்தனையோ ஆயிரம். என்றாலும் எவரும் சோர்ந்து விட வில்லை. இருக்கும் ஒரு சில துளி நம் பிக்கைகளையும் வைத்து தம்மால் இயலுமான அளவு முயற்சி மேற் கொண்டார்கள். ஆசிய மனித உரிமை கள் அமைப்பு பகிரங்கமாக ரிசானாவின் விடுதலைக்காகப் பாடுபட்டது.

பி.பி.சி தமிழோசை உட்பட இன்னும் பல உலக ஊடகங்கள் ரிசானாவின் துயரத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியிருந்தன.

இது தவிர தனிப்பட்ட ஒரு நபராக சவூதி நாட்டில் வைத்தியராகப் பணியாற்றிய கிபாயா இப்திகார் ரிசானா விடயத்தில் அதீத அக்கறை எடுத்து ரிசானாவின் உற்றார், உறவினர் போல அலைந்து திரிந்தார்.

ரிசானா சிறையில் வாடிய நாள் தொடக்கம் அவள் கொல்லப்படும்வரை அவளை நேரில் பார்த்துப் பேசி வீட்டாரோடு தொலைபேசியில்

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

உரையாட வைத்து அவளுக்கு ஆறுதலாக இருந்தவரும் இந்த டொக்டர்தான். கடைசியாக அவளை உயிரோடு கண்ட நம்மவரும் இந்த டொக்டர் கிபாயாதான்.

சம்பவ தினத்தன்றும் டொக்டர் கிபாயா அவர்கள் அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் ரிசானாவைப் பார்த்துவிட்டு வருவதற்காகப் புறப்படுமுன் அவளுக்கு மிகவும் விருப்பமான சொக்லேட்டும் சில புதிய உடுதுணிகளும் எடுத்துக் கொண்டு சுமார் நான்கு மணித்தி யாலப் பயணத்தை மேற்கொண்டு அவள் வாடிக்கொண்டிருக்கும் அல் தவாத்மி சிறைச் சாலைக்குச் சென்றார்.

ஆனால், தான் வழமையாக எந்தச் சிறுமியை எட்டாண்டுகளாக சிறையில் சந்தித்து ஆறுதல் கூறி அன்பையும் அரவணைப்பையும் அள்ளி வழங்கி அவளுக்காகப் பிரார்த் தித்து வந்தாரோ அந்த சிறுமி அன்றைய தினம் டொக்டர் கிபாயாவைக் கண்டு மகிழ்வுடன் வரவேற்க அங்கிருக்கவில்லை. அவள் சிறையில் இருப்பதுகூட பெரும் சுமை எனக்கருதி அவளை இந்த உலகத்தில் இருந்தே வழியனுப்பிவிட்டார்கள் அந்த ஈவிரக்கமற்றவர்கள். *(தொடரும்...)*

# ஹலால் ஒரு பார்வை

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**ஆயினும்,** வர்த்தகரீதியான மேம்பாட்டிற்கே நிறுவனங்கள் (இஸ்லாமியர்களின் நிறுவனங் கள் உட்பட) ஹலால் சான்றி தழைப் பெற வருகின்றன எனும் அடிப்படையில் கட்டணம் அறவிடுவதன் நியாயம் ஏற்றுக் கொள்ளப்படத்தான் வேண்டும். எனினும், நாட்டின் எல்லாப் பாகத்திலும் ஒரே நேரத்தில் இயங்கும் ஆட்பலம் எம்மிடம் இல்லாததனால் எமது செலவு களும் அதிகம் என்கிற அ.இ.ஜ.உ சபையின் விளக்கமும் இங்கு கவனிக்கத்தக்கது.

அப்படியானால், ஹலால் சான்றிதழ் வழங்கும் பணியை தேசிய வலைப்பின்னலுக்குள் தனியான ஒரு செயற்பாடாக மாற்றி, அதன் பொறுப்பையேற் றுச் செயற்படக்கூடிய சுதந்திர மான அமைப்பொன்றை இலங்கை வாழ் இஸ்லாமிய சமூகம் ஏற்படுத்த முடியாதா எனும் கேள்வி இங்கு எழுகிறது.

அவ்வாறான ஒரு அமைப்பும் அதன் வேலைத்திட்டங்களும் அ.இ.ஜ.உ சபையினால் வாரத் தில் அல்ல ஒரேநாளில் எத்தனை தடவைகள் பரீட்சிக்கப்பட்டாலும் அதில் தவறுகாண யாரும் வரப்போவதில்லை. அறவிடப் படும் கட்டணத்தில் இருந்து ஒரு பகுதியினை அ.இ.ஜ.உ பெற்றுக்கொண்டு இதற்கான செலவுகளை ஈடுகட்டிக்கொள்ள முடியாதா அல்லது இது நடை முறை சாத்தியமில்லாத விடயமா என்பது குறித்து பொறுப்புள்ள அ.இ.ஜ.உ சபை தான் பதிலளிக்க வேண்டும்.

அவ்வாறான ஒரு பரந்த செயற்பாட்டினை நிறுவுவதற்கு இலங்கையில் எவ்வாறான சிக்கல்கள் இருக்கின்றன என்பதை நன்கறிந்துள்ள இஸ்லாமிய சமூகம், அதற்கான பொறுப்புகளை யாரிடம் வழங் கலாம் எவ்வாறான அமைப்பு மூலம் ( உதாரணம்: பிராந்திய பள்ளிவாசல் நிர்வாகம்) அல்லது கல்விமான்கள், மார்க்க அறிவு கொண்ட , சமூக அக்கறையும் கொண்ட ஒரு சிலர் அடங்கிய குழு என்று எப்படியான முறை மூலம் ஒரு நாட்டின் சமூகத்தின் மார்க்க அறிஞர்களின் சபையை வார்த்தக, அரசியல் உலகோடு நேரடியாக மோதிக்கொள்வதில் இருந்து விடுவிக்கவேண்டும் என்பது குறித்தும் முடிவெடுக்க வேண்டும், தம் ஆலோசனை களையும் வழங்கவேண்டும்.

இஸ்லாமிய சமூகத்தின் தொடர்பாடல் நிலை குறிப்பிட்ட 'வளர்ந்த' நிலையை இன்னும் அடையவில்லை என்று நமக்கு நாமே கருதிக்கொள்வதால் ஆகக்குறைந்தது, இஸ்லாமியர் கள் சார்ந்த ஊடகங்களும் தம் பொறுப்புகளை உணர்ந்து, அ.இ.ஜ.உ சபையின் தகவல் களை மக்களுக்குக் கொண்டு சேர்க்கலாம் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே, வாராந்தமோ ஒவ்வொரு நாளுமோ, மாதாந்தமோ பிரசுரிக்கப்படும் (பிரசுரிக்கப்பட்டால்?) ஹலால் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள், தயாரிப்புகளின் பட்டியலை தம் சமூகத்திற்கு எடுத்துச் செல்லும் பொறுப்பை ஒவ்வொரு இஸ் லாமிய ஊடகமும் ஏற்றுக் கொள்ளலாம். அதற்கு ஏதுவாக அ.இ.ஜ.உ சபை இஸ்லாமிய ஊடகங்களுடன் தம் தொடர்பு களையும் மேம்படுத்த வேண்டும், அறிக்கைகளை அனைவருடனும் பகிர்ந்துகொள்ளும் ஊடகச் செயற்பாட்டின் அடிப்படைகளை . உருவாக்கிக் கொள்ளவும் வேண்டும்.

அதற்கும் மேலாக, ஹலால் சான்றிதழ் வழங்கும் பொறுப்பை யேற்று செயற்படும் அமைப்பு அல்லது பிரிவு, வாராந்தமோ நாளாந்தமோ அவர்கள் செயற் பாட்டின் அடிப்படையில் அங்கீ கரிக்கப்பட்ட பட்டியலை ஒவ்வொரு ஊரின் ஒவ்வொரு பள்ளிவாசலுக் கும் அனுப்பி வைக்கலாம். இன்றைய தினத்தில் ஊரில் ஒருவருக்காவது ஒரு மின்னஞ்சல் இல்லாமலா போகப்போகிறது எனும் நியாயம் இங்கு கவனிக்கப்படலாம் அல்லது ஆகக்குறைந்தது தபால் மூலமாகவாவது அனுப்பலாம்.

அத்துடன் அ.இ.ஜ.உ சபையோ அல்லது ஹலால் சான்றிதழ் வழங்கும் பொறுப்பிலிருக்கும் அமைப்போ தம் இணையத் தளத்தில் வழக்கம் போல இதனைப் பகிரங்கப்படுத்தலாம், அதன்மூலம் மக்களை விழிப் புணர்வூட்டலாம், அத்துடன் பிற சமூகங்களுடன் நேரடி விளக்கக் கூட்டங்கள், எதிர்ப் பிரச்சாரங்கள் போன்ற விடயங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இஸ்லாமிய வாடிக்கையாளர் கள் தேவையென்பதற்காக ஹலால் சான்றிதழ்களை நிறுவனங்கள் பெற்றுக்கொள் கின்றன எனும் அடிப்படையை மிகத் தெளிவாக முன் வைத்து விட்டால், அதன்பின் இஸ்லாமிய கட்டளைகள், மார்க்க முறைகள் தம் மீது நிர்ப்பந்திக்கப்படுகிறது எனும் வீண் தர்க்கங்களுக்கான வழிமுறைகளும் எதிர்ப் பிரச் சாரங்களின் தேவைகளும் இஸ்லாமிய சமூகத்திற்கு இல்லாமல் போகின்றன.


ஆக மொத்தத்தில் இது முழு சமூகமும் பொறுப் புணர்வுடன் சிந்தித்துச் செயற் பட வேண்டிய ஒரு விடயம் என்பது ஒவ்வொருவராலும் உணரப்படவேண்டும்.

இன்றைய நிலையில் இந்த விவகாரம் அரசியல் அரங்கில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்திவருகின்றது, அதன் மூலம் பெரும்பாண்மைத் தீவிரவாதத்திற்கு எவ்வாறு இது துணை போகின்றது என்று பல்வேறு வழிகளில் இதன் தாக்கங்கள் உணரப்பட வேண்டும்.

முஸ்லிம்கள் போன்றே, யூதர்களும் ஹலால் முறையை மிகக் கவனமாகப் பின்பற்று கிறார்கள். அதனை kosher என்று அழைக்கிறார்கள். பொதுவாகவே தாம் வாழும் அனைத்து நாடுகளிலும் இஸ்ரேல் சமூகம் இந்த விடயத்தில் கவனமாக இருக் கின்றது. எனினும், ஹலால் உணவு எனும் சிக்கல் பிரச் சாரப்படுத்தப்படும் அளவிற்கு kosher பற்றிய வாதங்கள் வெளிவராமைக்குக் காரணம், சமய, சமூக விடயங்களை அவர்கள் கையாளும் நுணுக்க மாக இருக்குமா? சிந்தித்துப் பார்க்கவேண்டும்!

*(முற்றும்)*

# முக்கியத்துவம் பொருந்துமா?



**இந்திய** - இங்கிலாந்து முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து 325 ஓட்டங்கள் பெற்றிருக்கலாம். ஆனால் இந்திய அணி 316 ஓட்டங்களால் மட்டுமே தோல்வி கண்டது. அடுத்த போட்டியில் இந்திய அணியின் டோனியும், ரவீந்திர ஜடேஜாவும் இங்கிலாந்துப் பந்துவீச்சாளர்களை போட்டுத்தாக்கி, அந்த இணைப்பாட்டமே இங்கிலாந்தைத் தோல்வியைத் தழுவச் செய்தது. இந்த நிலையில்தான் இங்கிலாந்தின் வேகப் பந்து வீச்சாளர் ஸ்ருவட் புரோட் அணியில் இல்லையே என்ற ஆதங்கம் இங்கிலாந்து அணியினரிடையே வெளிப்படுகின்றது. இந்திய சுற்றுப் பயணத்தின்போது புரோட் எதிர்கொண்ட குதிக்கால் பிரச்சினையால் இரண்டாவது டெஸ்ட் போட்டியுடன் விளையாமுடியாது போய் இங்கிலாந்து திரும்ப வேண்டியதாயிற்று.

இதன்காரணமாக இருபதுக்கு இருபது அணித்தலைவரான ஸ்ருவட் புரோட்டுக்குப் பதிலாக இயன் மோர்கன் அணித்தலைமையை தற்காலிகமாக ஏற்க வேண்டியும் ஏற்பட்டது. எனவே, முதன்மைப் பந்துவீச்சாளரான இவர் இல்லாமலேயே இந்திய சுற்றுப் பயணத்தின் இறுதி ஒரு நாள் போட்டிகளை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இங்கிலாந்து அணிக்கு.

அடுத்த பிரச்சினை இந்தியத் தொடருக்குப் பின் இங்கிலாந்து நியூசிலாந்து செல்லவுள்ளது. இங்கு இருபதுக்கு இருபது போட்டிகளுக்கு இவரே தலைவராக இருப்பார். மற்றைய வகைப் போட்டிகளுக்கும் இவரே முதன்மைப் பந்துவீச்சாளர். இப்பொழுது குதிக்கால் உபாதையில் இருந்து மீண்டுள்ள புரோட் நியூசிலாந்து சொல்வார் என்றே அநேகமாக எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனாலும் இந்த உபாதை யில் இருந்து முற்றாக சுகம் பெறாதநிலையில் இன்னொரு முறை இதே பிரச்சினை ஏற்பட்டால் நீண்ட காலம் கிரிக்கெட் விளையாட முடியாமல் போகும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. கடந்த வருடம் திடீ-ரென இவரது வேகம் குறைந்தமைக்கு இதே உபாதைதான் காரணமா என்று ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். அப்படியாயின் அது இன்னும் கவலைக்கிடமான விடயமாகும். அப்படி இருந்தால் மிகத் திறமையான இவரை ஏதோ ஒரு வகைக் கிரிக்கெட்டிலாவது தக்கவைத்துக் கொள்ளவே முயல்வோம், என்று அதிகாரிகள் கூறுகின்றார்கள். சம்பியன் கிண்ணப் போட்டிகள், மற்றும் இரண்டு தடவையில் ஒன்பது ஆஷஸ் டெஸ்ட் போட்டிகள் உட்பட நிறையவே கிரிக்கெட் ஆட்டங்கள் கொண்டதாக 2013 அமைந்திருக்கும் நிலையில் ஸ்ருவட் புரோட் போன்ற வேகப் பந்துவீச்சில் தலைமை வகிக்கும் வீரரை இழப்பதென்பது இங்கிலாந்து அணிக்கு இலகுவான விடயமாக இருக்காது.

(பிந்திய செய்தி:- ஸ்ருவட் புரோட் இருந்திருந்தாலும் கூட டோனியின் அணி இங்கிலாந்தைச் சின்னாபின்னமாக்கி இருக்கும் போலத்தான் தெரிகிறது)



ஜோசப் கிருஸ்ணா

# அச்சம் உண்டு





**அடுத்த** மாதம் மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்கா செல்ல இருக்கிறது. இதற்கான அணித்தெரிவு பற்றிக் கருத்துக் கூறியுள்ள இருபதுக்கு இருபது அணி யின் தலைவர் மொகமட் ஹபீஸ் வேகப்பந்து வீச்சாளர்கள் தெரிவு பொறுத்துக் கருத்துக் கூறுகையில், தேர்வு செய்யப்பட்டுள்ள நான்கு பேருக்கு மேலதிகமாக இன்னொருவரும் தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று கூறியுள்ளார். தற்போது உமர்குல், ஜுனைய்ட்கான், மொகமட் இர்பான், மற்றும் இஷான் அடில் ஆகிய நான்கு பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். உமர் குல், ஜுனைய்ட்கான் இருவரையும்விட்டால் மற்ற இரண்டு பேரும் புதியவர்கள். எனவே நியூசிலாந்து அணியைப் படாதபடுத்திய தென்னாபிரிக்க அணி பாகிஸ்தானையும், கவிழ்த்துவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது போலத் தெரிகின்றது. மொகமட் இர்பான் இந்தியாவில் நடைபெற்ற இருபதுக்கு இருபது போட்டிகளில் விளையாடியவர். தற்போது டெஸ்ட் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அடீல் பற்றி இனித்தான் அறிந்துகொள்ள வேண்டும். மேலும் இலங்கைக்கு எதிராகவும், இங்கிலாந்துக்கு எதிராகவும் தலா மூன்று டெஸ்ட் போட்டிகளில் மட்டும் விளையாடியுள்ள பாகிஸ்தான் அணி கடந்த ஆறு மாதங்களாக டெஸ்ட் போட்டி எதிலும் விளையாடவில்லை என்பது இன்னொரு பலவீனம். ஆகவே மொகட் ஹாபீஸ் அச்சப்படுவதில் நிறையவே நியாயம் உண்டு. துடுப்பாட்டம், பந்துவீச்சு இரண்டிலும் மிக அபாரமான திறமைசாலிகளைக் கொண்டுள்ள தென்னாபிரிக்க அணியைச் சமாளிப்பது மிகவும் கடினம். ஆனால் நியூசிலாந்து அணி இவ்வளவு மோசமான தோல்விகளைக் கண்டதுபோல பாகிஸ்தான் பணியாது. பாகிஸ்தானின் பலமே எப்போதும் போராடுவதுதான். ஆகவே அந்தப் போராட்ட குணம் தென்னாபிரிக்க அணிக்கு பெருத்தசவாலாக அமைவது நிச்சயம்.

# ஆண்களே கவனம்

**இங்கிலாந்தின்** கிரிக்கெட் கவுன்ரி சசெக்ஸ், தனது இரண்டாம் நிலை அணியில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாற்றம் செய்ய இருக்கிறது. அதாவது இந்த அணியின் தயார்நிலை விக்கெட் காப்பாளராக இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளர் சாரா ரெய்லரை ஒப்பந்தம் செய்ய முடிவு செய்துள்ளது. அடுத்த சீசனில் சாரா ரெய்லரை விடுவிக்க முடியுமா என்று இங்கிலாந்து மகளிர் அணியின் பயிற்றுநர் மார்க்லேனிடம் கேட்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. இதுபற்றி அறிந்த சாரா, என்னைத்தான் அழைத்தார்களா என்று என்னால் நம்ப முடியாமல் இருக்கிறது. ஆனால் அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தால் மிகவும் பெருமையாக ஏற்றுக்கொள்வேன் என்று கூறியுள்ளார். இதேவேளை நேரடியாக சசெக்ஸ் விக்கெட் காப்பாளர் கடமை யைச் செய்யச் சந்தர்ப்பம்




கிடைத்தாலும் (தற்காலிகமாக) மிகுந்த மகிழ்ச்சியே என்று கூறியுள்ளார். ஆண்கள் கிரிக்கெட் அணியொன்றில் - அதுவும் முதன்மையான முதல்தர ஆடவர் கிரிக்கெட் அணியொன்றில் முதன் முதலாகப் பெண் அங்கத்துவம் பெறும் சந்தர்ப்பமாக இதுவே அமையும். இது கிரிக்கெட் வரலாற்றில் ஒரு சாதனையாகப் பொறிக்கப்படும். 23 வயதான சாரா யார் என்று இப்பொழுது ஆண்கள் கிரிக்கெட் உலகம் தேடத் தொடங்கியிருக்கும்.

இம்மாத இறுதியில் மகளிர் உலகக் கிண்ண ஒரு நாள் போட்டித் தொடர் இந்தியாவில் ஆரம்பமாகவுள்ளது. அந்தத் தொடரில் எதிர்பார்த்ததைவிட கூடிய ரசிகர்கள் ஆர்வம் கொள்வார்கள். காரணம் ஆண்கள் அணியில் இடம்பெறப்போகும் தீரமிக்க இந்தப் பெண்மணி யார் என்று பார்க்கத்தான்.

# நியாயமான வலிகள்







**உலகின்** மிகச் சிறந்த சுழல் பந்து வீச்சாளராகத் தரப்படுத்தப்பட்டுள்ளவர் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சுழல் பந்துவீச்சாளர் முப்பத்தைந்து வயதான சயீட் அஜ்மல். ஆனால் ஆச்சரியமான முறையில் ஐ.சி.சி. விருதுக்கான பந்துவீச்சாளர் இறுதிப் பட்டியலில் அவர் பெயர் இல்லை. இந்த விடயம் சகல மட்டங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. அதிலும் பாகிஸ்தானில் பெரும் கோபத்தையே ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையில் கிரிக்கெட் வீரர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வில் நான்கு துறைகளில் அஜ்மல் சிறந்தவராகத் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். இதில் முக்கியமானவை இரண்டு. ஒன்று மூவகைக் கிரிக்கெட் போட்டிகளிலும் சிறந்த பந்துவீச்சாளர் என்பது. அடுத்தது இவ்வருடத்தின் சிறந்த பந்துவீச்சாளர் என்ற விருது, ஆனால் டெஸ்ட் போட்டியில் சிறந்த பந்துவீச்சாளர் என்பதே மிகச் சிறந்த பரிசாகும். டெஸ்ட் போட்டிகளில் பந்துவீச மிகச் சிறந்த நுட்பம், பொறுமை, துடுப்பாட்ட வீரரை ஆட்டமிழக்கச் செய்வது என்ற இலக்கு என்பன அவசியம். இது இலகுவானதல்ல. என்றாலும் இந்தப் பரிசும் எனக்குக் கிடைத்தது மிகப் பெரிய மகிழ்ச்சி. மேலும் ஐ.சி. சியால் ஒதுக்கப்பட்ட எனக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தந்த இந்த விருதுகள், அந்தக் கவலையில் இருந்து விடுவித்து சிறிது ஆறுதலைத் தந்திருக்கிறது என்று கூறியுள்ளார். அஜ்மல் இதுவரை 23 டெஸ்ட் போட்டிகள், 74 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார். இன்னும் ஒரு சில வருடங்கள் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இவரைக் கைவிடப்போவதில்லை. ○

**மாணவர்களைக்** காணும் போதெல்லாம் 'கனவு காணுங்கள்' என்று டாக்டர் அப்துல்கலாம் சொல்வதைக் கேட்டிருப்பீர்கள். கனவு கண்டால் வாழ்க்கையில் வெற்றி பெற முடியுமா என்ற சந்தேகம் சிலருக்குத் தோன்றலாம். இதோ ஹெலன் கெல்லரின் வாழ்க்கையை கொஞ்சம் புரட்டிப் பார்த்தாலே போதும், அதற்கான விடை கிடைக்கும்.

# கனவு காணுங்கள் வெற்றி உங்களுக்கே!



1880ஆம் ஆண்டு அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் உள்ள துஸ்கும்பியாவில் பிறந்த ஹெலன் அடம்ஸ் கெல்லர், பிறக்கும்போது நல்ல ஆரோக்கியத்துடனே இருந்தார்.

ஒன்றரை வயதில் திடீரென ஏற்பட்ட கடுமையான காய்ச்சல் காரணமாக, கண்பார்வை, கேட்கும் தன்மை, பேசும் சக்தி ஆகியவற்றை இழந்துவிட்டார். அதனால் தன்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்தத் தெரியாத ஹெலன், மிகவும் முரட்டுத்தனமான குழந்தையாக வளரத் தொடங்கினார்.

1887ஆம் வருடம் ஹெலனின் பெற்றோர் அன்று பிரபலமாக இருந்த அலெக்ஸாண்டர் கிரஹம்பெல்லைச் சந்தித்து என்ன செய்வது என்று ஆலோசனை நடத்தினார். அவர் கொடுத்த அறிவுரையின்படி ஹெலனை பார்வை இழந்தோருக்கான 'பெர்கின்ஸ்' பள்ளிக்கு அனுப்பி 'சல்லிவன்' என்ற பெண்ணை அவரது ஆசிரியையாக நியமித்தனர்.

வாழ்க்கையே போய்விட்டது என்று கவலையில் இருந்த ஹெலன் கெல்லருக்கு ஏழு வயதில் புதிய வசந்தம் தொடங்கியது. பிறர் பேசும்போது அவர் உதடுகளில் கைவைத்து அதிர்வுகள் மூலம் பேசுவதைப் புரிந்துகொள்ளும் கலையை கற்றுக்கொடுத்தார் சல்லிவன்.

மேலும் ஹெலனின் உள்ளங்கைகளில் எழுத்துக்களை எழுதி புரிய வைத்தார். அதையடுத்து பார்வையற்றோருக்கான 'பிரெயில்' முறையில் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், கிரேக்கம், இலத்தீன் போன்ற மொழிகளையும் கற்றுக்கொண்டார்.

தொடர்ந்து மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்ட காரணத்தால் பேச்சு மட்டும் வரத் தொடங்கியது. பேச்சுத்திறமையை வளர்த்துக் கொண்டு மிகச்சிறந்த பேச்சாளராக மாறத் தொடங்கினார்.

ஹெலன் நியூயோர்க் சென்று அங்கிருந்த காது கேளாதோருக்கான 'ரைட்-ஹூமாஸன்' பள்ளி மற்றும் ராட்கிளிஃப் கல்லூரியில் சேர்ந்து பட்டம் பெற்றார். கல்லூரியில் பட்டம் பெற்ற முதல் காது கேளாத, கண் பார்வையற்ற மனிதர் இவரே என்பது குறிப்பிடத்தக்கது.

பட்டப்படிப்பை முடித்த காலத்திலேயே மிகச்சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் உயர்ந்துவிட்டார். உழைப்பாளர் உரிமைகளையும், சோஷலிஸத் தத்துவங்களையும் ஆதரித்து பல கட்டுரைகள், புத்தகங்கள் எழுதினார்.

சமுதாயத்தில் இருக்கும் குற்றம் குறைகளை கண்டுபிடித்து அதனைத் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டார். பெரும் சமுதாய விமர்சகராகவும் போற்றப்பட்டார். தன்னுடைய குறைகளை ஒரு பொருட்டாக நினைக்காமல் ஏழைகள், வீடு இல்லாதவர்கள், வறுமையில் வாடியவர்கள், நோயாளிகள், குறிப்பாக உடல் ஊனமுற்றவர்களுக்காகவே வாழத் தொடங்கினார்.

பார்வையற்றோர் நலனுக்காகத் தன்னுடைய பெயரில் ஒரு அமைப்பை ஏற்படுத்தி ஏராளமான நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து, ஊனமுற்றோர் நலனுக்காக தன் வாழ்நாள் முழுவதும் செலவிட்டார்.

பல்வேறு நோய் தாக்குதலுக்கு இடையிலேயும், நொடிப்பொழுதும் ஓய்ந்து இருக்காமல் பிறருக்கு ஒரு வழிகாட்டியாகவே வாழ்ந்து மறைந்தார்.

அவரது வெற்றியின் இரகசியத்தைக் கேட்டபோது, "இந்த உலகத்தை என்னால் பார்க்க முடியவில்லை என்பது பெரும் ஏமாற்றம். அந்த ஏமாற்றம் தீர வேண்டுமானால், இந்த உலகமே என்னைப் பார்க்க வேண்டும் என்று விரும்பினேன். என்னுடைய இலட்சியம் ஒரு மாபெரும் கனவு என்பது தெரியும். ஆனாலும் அந்தக் கனவை தினம் தினம் கண்டுகொண்டே இருந்தேன். ஒரு கணம் கூட நான்

அவர் எழுதிய புத்தகங்களும், பேச்சுக்களும் அகில உலகளவில் அவருக்கு பெரும் புகழைப் பெற்றுத் தந்தது. சார்லி சாப்ளின் தொடங்கி, பிரிட்டிஸ் அரசி வரையிலான மாபெரும் பிரபலங்கள் அனைவரும் அவரைத் தேடி வந்து அன்பு செலுத்தினர்.

உலகப் புகழ்பெற்ற ஹார்வர்டு பல்கலைக்கழகம் ஹெலனின் 75வது வயதில் 'கௌரவ டாக்டர் பட்டம்' வழங்கியது.

1968ஆம் வருடம் அதாவது தனது 87வது வயதில் மரணமடையும் வரை, கனவு காண்பதை நிறுத்தியதே இல்லை. அதனாலேயே வெற்றியும் பெற்றேன்" என்றாள்.

ஒரு நோயாளிப் பெண், பார்வை அற்றவர், காது கேளாதவர் என்று எத்தனையோ குறைபாடுகளுடன் இருந்த ஒருவரால் இந்த உலகத்தையே திரும்பிப் பார்க்க வைக்க முடியும் போது நம்மால் முடியாதா? கனவு காணுங்கள். அந்த கனவு நனவாகும் வரை தீவிரமாக முயற்சி செய்யுங்கள். வெற்றி உங்களுக்கே உங்களுக்குத் தான்!

# உணர்வுகளின் வெளிப்பாடு!



**என்னால்** எனது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எனது சிந்தனைகளுக்குக் கடிவாளம் போட முடியவில்லை இது பலரது புலம்பலாக உள்ளது. ஆனால் மனதைக் கட்டுப்படுத்தினால் இதையும் சமாளிக்கலாமாம், சொல்கிறார்கள் உளவியலாளர்கள்.

ஒவ்வொரு மனிதனுமே ஏதாவது ஒரு உணர்வுக்கு அடிமையானவன்தான்.

அது ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி. இந்த உணர்வுகளில் ஒன்றுக்கு, அவன் அல்லது அவள் ஆட்பட்டவராகவே இருக்க முடியும். கோபம், சந்தோஷம், துக்கம், ஏமாற்றம் என இந்த உணர்வுகளில் ஏதாவது ஒன்றுக்கு உட்பட்டுத்தான் வாழ முடியும்.

ஒவ்வொருவரையும் இந்த உணர்வுதான் உந்தித் தள்ளி வழி நடத்துகிறது. ஆனால் இந்த உணர்வுகளை சமாளித்து, நாம் தடுமாறாமல் இருக்கும்படி பார்த்துக் கொண்டால் நாம் கீழே விழ மாட்டோம். மாறாக, உணர்வுகளுக்கு முற்றிலும் அடிமையாகிவிட்டால், நாம் தடுமாறிப் போகும் நிலை ஏற்படுகிறது. சிலருக்கு கோபம் பெரும் பிரச்சினையாக இருக்கும். சிலருக்கு சநதோஷம் சில வகை சங்கடங்களைத் தரலாம்.

பலருக்கு ஏமாற்றம் பெரும் கவலையை ஏற்படுத்தலாம். ஏமாற்றம் எப்போது வருகிறது.. எதிர்பார்ப்பதால்தான். எதிர்பார்ப்புகள் எங்கு அதிகம் இருக்கிறதோ அப்போது கூடவே ஏமாற்றமும் வந்து நிற்கும்.

எதிர்பார்ப்புகள் அதிகரிக்கும்போது ஏமாற்றத்தின் தாக்கமும் அதிகமாகவே இருக்கும். எதிர்பார்ப்பே இல்லாமல் இருக்கப் பழகும்போது ஏமாற்றத்தின் வலியும் குறையும் வாய்ப்புள்ளது.

சரி இப்படி ஒவ்வொரு உணர்வும் நம்மைத் தாக்கும்போது அதிலிருந்து மீளுவது எப்படி? இதை எப்படி சமாளிக்கலாம்?.. கீழே விழாமல் ஸ்டெடியாக நிற்பது எப்படி? என்ன சொல்கிறார்கள் உளவியலாளர்கள்?

உணர்வுகள் உங்களை தாண்டி போக விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உணர்வுகளை நீங்கள் அடிமையாக்க வேண்டும். உந்தித் தள்ளும் உணர்வுகளுக்குப் பலியாகிவிடாமல் எதிர்த்துப் போராடவேண்டும்.

இதற்கு சில எளிமையான பயிற்சிகள் இருக்கிறது. அதைச் செய்தாலே போதும் நிச்சயம் பெரும் பலனைப் பெறலாம்.

மனஅழுத்தம் வருகிறதா.. கவலையே படாமல் சத்தம் போட்டு பாட்டுப் பாடுங்கள். மனசெல்லாம் வலிக்கிறதா? வாய் விட்டு நன்றாக சிரியுங்கள்.

சோர்ந்து போவது போல உணர்கிறீர்களா? எங்காவது போய் ஜாலியாக சுற்றி விட்டு வாருங்கள். மனதைப் போட்டு ஏதாவது நினைவு உலுக்குகிறதா? சந்தோஷமாக ஒரு படம் பாருங்கள்.

எதையாவது நினைத்து ஏமாற்றமாக உணர்கிறீர்களா? அதை சுத்தமாக மறந்துவிட்டு அடுத்த வேலையைப் பார்க்க முயலுங்கள். மனிதனின் மூளை மற்றும் மனதை விட மிகப் பெரிய மாஸ்டர் இல்லை என்பது உளவியலாளர்களின் கருத்து.

மூளை சொல்வதை கேட்பதா, மனசு சொல்வதை கேட்பதா என்ற கேள்வி வரும்போது, கேட்கப்பட்ட கேள்விக்கு நாம் என்ன பதிலளிப்பது என்பது குறித்துத்தான் நாம் முதலில் கவலைப்பட வேண்டும் என்றும் இவர்கள் சொல்கிறார்கள்.

நம்மைப் போலவே மற்றவர்களும் சிந்திக்க வேண்டும், நம்மைப் போலவே அவர்களும் நினைக்க வேண்டும், நம்மைப் போலவே அவர்களும் இருக்க வேண்டும் என்று நினைப்பது முட்டாள் தனம்.

அந்த எதிர்பார்ப்பே முதலில் பெரும் தவறு என்று கூறும் உளவியாளர்கள், உங்களைத் தாண்டி உணர்வுகளைப் போகவிடாதீர்கள். கடிவாளம் போட வேண்டிய இடத்தில் அதைச் செய்தால் மட்டுமே அதிலிருந்து நீங்கள் தப்ப முடியும் என்றும் அறிவுரை கூறுகிறார்கள்.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும்
வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 506

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 6 |
| 7 | | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | |
| 19 | 20 | 21 | | 23 | 24 |
| | | 27 | 28 | | 30 |
| 31 | 32 | | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 07.02.2013 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 506
தினமுரசு வாரமலர்.
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை
மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு.
அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 504- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 சோ | 3 க | 4 ர் | | 6 கே |
| 7 ர | 8 கு | | 10 கி | 11 ளை | 12 ள் |
| 13 சா | | | 16 வ | 17 ரு | 18 வி |
| 19 ங் | 20 பா | 21 கு | | 23 உ | |
| 25 க | 26 ட | 27 வு | 28 ள் | | 30 நா |
| 31 ம | 32 ம் | 33 வி | 34 க | 35 ப | |

**இடமிருந்து வலம்**

01. எண்ணம் அல்லது நியமம்.
09. விளம்பல் அல்லது கூறுதல். (குழம்பியுள்ளது)
13. ஆறு கடலுடன் கூடும் இடம்.
19. வீட்டில் இருக்கக் கூடிய ஆயுதம் ஒன்று. (குழம்பியுள்ளது)
23. அரசி.
27. மகள் அல்லது குமாரத்தி.
31. இராச சின்னத்தில் ஒன்று.
34. அடுப்பு அல்லது நட்சத்திரம். (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. சரித்திரம் அல்லது தொடர்பு.
03. யானைத் தந்தத்தில் இருந்து எடுப்பது.
04. கதிர்த் தொகுதி(குழம்பியுள்ளது)
05. அழுகை அல்லது இளைத்தல். (குழம்பியுள்ளது)
06. ஓர் அசைச்சொல் அல்லது அழகு.(திரும்பியுள்ளது)
14. உப்பளம் அல்லது மிகுதி. (திரும்பியுள்ளது)
24. நிலை.(திரும்பியுள்ளது)
28. கைத்தாளம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.503 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எம்.ரூபன், தில்லையடி, புத்தளம்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. ம.நிலாமதி, கோவில் வீதி, வவுனியா.
02. க.ராகுலன், நெல்சன்பிளேஸ், வெள்ளவத்தை.
03. மு.சிவானந்தன், சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
04. ஜே.ஆயிஷா, தோப்பூர்.
05. கா.மாளவிகா.கல்லடி, மட்டக்களப்பு.
06. கு.சிந்துஜன், வெள்ளாம் போக்கடி, கச்சாய்.
07. கா.திருவருள், வரணி இயற்றாலை, வரணி.
08. எஸ். திருக்குமரன், தும்பளை, பருத்தித்துறை.
09. மா.சேத்தன், பிரதானவீதி, கண்டி.
10. எம்.ஸ்ரீகாந்த், நுவரெலியா.

16



**இராமசாமி ரமேஷ், அளம்பில்**


ஆம்! வலிகளையும், சுமைகளையும் தோல்விகளையும், அவமானங்களையும் சுமந்து - கடந்து வெற்றிக்காகப் போராடும் எழுத்தாளன் ஒருவனின் எழுத்துலகப் பயணம் இங்கே தொடர்கிறது.

# வலிகளின் சன்மானம்

**ஒரு** காலத்திலும் யாருக்கும் எந்தத் தீங்கும் நினைக்காதவர் இராசலிங்கம். இதுவரை கஷ்டப்பட்டவன் என்று யாரும் சொல்வார்களே தவிர, சண்டைக்காரன் பொல்லாதவனென்று எவரும் சொல்லமாட்டார்கள். அந்தளவுக்கு சாதுவான வர் அவர். கடலும் – தன் வீடும் மனைவி மக்களுமாகவே அவருடைய உலகம் இயங்கிக் கொண்டிருந்தது. யாரையுமே வருத்தி இன்பம் காண்பதில் உடன்பாடு இல்லை இந்த மனுசனுக்கு!

"நல்லவர்களை கடவுள் வாழ விடுவ தில்லைத் தானே..." யாரோ இருவர் பேசிக் கொள்வது வசந்தனின் காதில் கேட்டது. நட்சத்திரனுக்கு நினைவு திரும்பியது. சூரியன் உச்சியிலிருந்து இறங்கத் தொடங்கியிருந்தான். நா உலர்ந்து எழுந்திருக்கக்கூட திராணி யில்லை. தம் நண்பனின் அருகாமையே தஞ்சமென வாடிப்போன வதனங்களை வரித்து கொண்டவர்களாய் வசந்தனும் ருசாந்தனும் அமர்ந்திருக்க, பிரதீபன் அங்குமிங்கும் வேலை செய்தபடி ஓடிக் கொண்டிருந்தான்.

நெய்தல் நிலங்களைப் பொறுத்தவரை யில், நகரத்தவர்களைப் போல மரணச் சடங்குகளுக்கு மரத்தாலான சவப் பெட்டிகளை எடுப்ப தில்லை. தென்னை ஓலைகள் மட்டைகளைக் கொண்டு பாடைகட்டி அதனை பூ மலர்கள் கொண்டு அலங்கரித்து அதிலேதான் இறந்தவர்களை இறுதி ஊர்வலம் கொண்டு போவார்கள்.



அந்தப் பாடை தயாரிப்பதற்காக இவனது நண்பர்கள் இரண்டு மூன்றுபேர் கத்திகளோடு தென்னந்தோப்பு நோக்கி நடப்பது தெரிந்தது. யாரோ அழைப்பது கேட்டது. "வசந்தன்! நட்சத்திரனுக்கு கொஞ்சம் தண்ணி கொடப்பா..." சைக்கிள் கடை சின்னவர் அண்ணர்தான் சொன்னார். சத்தம்வந்த திசையை நோக்கிப் பார்த்தவன், ஆமோதித்தவனாய் குசினிப் பக்கம் போய் ஒரு செம்பிலே தண்ணீர் கொண்டுவந்து நட்சத்திரனை எழுப்பினான். எந்தப் பிரச்சினைக்கும் கலங்கி கண்ணீர் வடிக்காதவன், அப்பாவின் மரணத்தோடு கசங்கிப்போன பூங்கொடியாய் துவண்டு கிடந்தான். உப்புநீரில் ஊறிக் கிடந்த ஆடைகள் அசௌகரியமாய் நட்சத்திரனின் உடலைப் பற்றியிருக்க, "நட்சா... உன்ர உடுப்பை மாத்திறியோ? நான் எடுத்துத் தாறன் மச்சான்...!!! என்றபடி வீட்டினுள் இருந்த ஒரு சாரத்தையும் சேட்டையும்கொண்டு வந்து இவனை மாற்றவைத்தான் ருசாந்தன்.

எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக் கிறது என்று சொல்லப்பட்டதை இதுவரை நம்பியவன்தான் நட்சத்திரன். இப்போது நடக்கின்றதை நினைக்கையில் அந்த வாக்கு பொய்யென்றே எண்ணத் தோன்றியது. வேதனை – சோதனையென்று துன்பத்தின் சாரல் தொடர்ந்து அடிக்கையில், எப்படித்தான் யதார்த்தம் பேசி நடிக்க முடியும்? நட்சத்திரனுக்கு அடிவயிற்றில் ஏதோ செய்வது போலிருந்தது. அழுவதற்குக்கூட சக்தி உடலில் இல்லை.

எழுவதற்கு எத்தனித்தவன், உடல் இடங் கொடுக்காமையால் வேம்போடு தன்னுடலை சாய்த்துக் கொண்டான்.

❖❖❖

நிலாவின் வீட்டில்....

"இன்று வருவான்... நாளை வருவான்..." என ஒருவாரமாக காத்திருந்தாள் நிலா. இங்கே நடந்தது எதுவும் அவளுக்குத் தெரிய வாய்ப்பில்லை. பெற்றவர்கள் இவளுக்கு சம்மதமா என்றுகூட கேட்காமல், தமக்குப் பிடித்த மாப்பிள்ளையை இவளுக்குக் கட்டிவைக்க ஏற்பாடுகளை தடல்புடலாக நடாத்திக் கொண்டிருந்தனர்.

அவளின் அப்பா ரகுவுக்கு, நிலாவை சம்மந்தம் செய்ய சம்மதமாவென்று தூது அனுப்பியிருந்தார். தாம் எடுக்கின்ற தீர்மானங்களை நிறைவேற்றத் துடிக்கும் பெற்றவர்கள், கொஞ்சம்கூட தமது இரத்த உறவுகளின் மனதைப் புரிந்துகொள்ள முயற்சிக்கிறார்கள் இல்லையே!! நினைக்க நினைக்க நிலாவுக்கு 'ஓ'வென்று அழவேண்டும் போலிருந்தது. நட்சத்திரனிடமிருந்து ஒரு பதிலும் வராமை யால், தன்னை தூக்கி யெறிந்துவிட்டான், என் காதலை பொய்யாக்கிவிட்டான் என்னும் வேதனைத் தீ இவளுக்குள் உண்மைக் காதலை எரிக்கத் தொடங்கியது. எதிர்பார்த்தவன் கிடைக்காது போனதால் ஏமாற்றம் அவளை பைத்தியக்காரி போலாக்கியது. உணவைத் தவிர்த்தாள். உறக்கத்தையும் விடுத்தாள், முழந்தாளிட்டு கரங்களை முகத்துக்கு முண்டுகொடுத்து, தன் அறையில் மூலைக்குள் தன் முடிவு தெரியாமல் முடங்கிக் கிடந்தாள் நிலா!!

(வலிகள் தொடரும்...)

# தொடரும் பயணம்!

**கையிலே** கிடைத்த நியமனக் கடிதத்துடன் ஹம்தா சந்தோச வானில் துள்ளிக் குதித்தாலும் அவள் உள்ளத்தின் ஓரத்தில் மேகத்துள் மறைந்திருக்கும் மழையாக பெரும் சோகம் அவளது வாழ்வில் அவளுக்கு ஏற்பட்ட துயரங் களுக்கு ஈடாக அவளால் எதையுமே நினைக்கமுடியவில்லை. அவளது நீண்ட காலக் கனவுகளெல்லாம் நொடிப் பொழுதில் கருகிச் சாம்பலாகியதாலும், அவளது தந்தையின் இழப்பாலும் இனி கண்ணீர் தான் தனக்கு ஆறுதலென நினைத் திருந்தவளுக்கு கையில் கிடைத்த கடிதமே ஒரு ஆறுதல்தான். இருந்தாலும் தாயையும், உடன் பிறந்தவர்களையும், உயிரான நண்பர்களையும் பிரிந்துசென்று மிக நீண்டதூரம் பயணம் செய்து அவள் ஆசிரியையாக கடமையாற்றியே தீர வேண்டுமென்று விதிக்கப்பட்டுவிட்டது. மனதில் கனத்த சுமைகளோடும், கண்ணீரோடும் ஹம்தா அந்தப் பேருந்தில் கால்வைத்தாள்.

பேருந்து புறப்பட்டது. ஆனால் ஹம்தாவின் மனதிலோ ஆயிரம் சிந்தனைகள் சிறகடித்தன. 'தோப்பூர்'. அதுதான் அவள் வேலைக்குப் புறப் பட்டுச் செல்லும் ஊர், கிட்டத்தட்ட நான்கு, ஐந்து மணித்தியாலயங்கள் பயணம் செய்து வேண்டியதூரம். இதுவரைக்கும் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அந்த ஊரின் பெயரை அவள் கேள்விப்பட்டதே இல்லை. இருந்தாலும் அந்தப் பெயரே அவளுக்கு நம்பிக்கையைக் கொடுத்தது. அவள் கற்பனையில் அது அழகிய தோப்புக்கள் நிறைந்த ஊராகவும், அன்பும், பண்பாடு களும் நிறைந்த மக்கள் வாழும் இடமாகவும் தென்பட்டது.

ஆனாலும் இவ்வளவு தூரம் செல்கி றோமே என நினைக்கையிலேயே அவளுக்கு அழுகை வந்தது. வேலையை விடவும் முடியாமல், வேலைக்கு செல்லவும் முடியாமல் அவள் மனம் போராடியது... யாருடனும் எதுவும் பேசாமல் தனது இருக்கையில் இருந்துகொண்டு வந்தவர் களுக்கு தனது முன் அமர்ந்திருந்தவர் களின் பேச்சில் கவனம் திரும்பியது...

நல்ல, அழகான, கம்பீரமான தோற்ற முடைய அந்த ஆள் சீட்டில் அமர்ந்திருந் தான், பக்கத்தில் கையில் குழந்தையுடன் மிகவும் நெரி சலான அந்தப் பஸ்ஸில் நிற்கவும் முடியாமல், இருக்கவும் இட மின்றி தடுமாறினாள். இருந்தாலும் அவள் அருகில் அமர்ந்திருந்த அந்த ஆளுடன் கதைப்பதும், சிரிப்பதும் ஜோக்கடிப் பதுமாக நின்றுகொண்டிருந் தாள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஹம்தாவிற்கு ஆத்திரம் வந்தது. "சே... என்ன மனிசன் இவன் அந்தப் பிள்ளையைக்கூட வாங்காமல் கல்லு மாதிரி அமர்ந் திருக்கிறாள். அப்படிப் பட்டவனோட இந்தப் பெண் பேசிக்கொண்டு வாறாள்... அந்தக் குழந்தையையாவது அவன் வாங்கியிருக்கலாமே.."

நினைத்தவளுக்கு எரிச்சல் வந்தது. தானாவது உதவி செய்யலாம் என்று நினைத்தாள். ஆனால் சனக்கூட்டம் அதிகாக இருந்ததாலும் அவளால் எதுவும் செய்யமுடியவில்லை.

சிறிது தூரம் சென்றதும் சனநெரிசல் கொஞ்சம் குறையத் தொடங்கியது... அந்தப் பெண் பெல் அடித்து பஸ்ஸை நிறுத்தினாள். பின்னர் அந்த ஆணின் கையைப் பிடித்து உதவியவாறு பஸ்ஸை விட்டு இறங்கினாள். அதைப் பார்த்த ஹம்தாவின் உள்ளம் அழுதது.

"இறைவா! இந்தப் பெண் இவ்வளவு தியாகியா?... நான் தப்பாக நினைத்து விட்டேனே.. மனதிற்குள் அவள் நினைத்துக் கொண்டிருக்கும் போதே.... ஒரு கையும், காலையும் இழந்த அந்த ஆள் அந்தப் பெண்ணின் துணையுடன் பஸ்ஸை விட்டு இறங்கிக் கொண்டிருந்தான்.

"பாவம் தினமும் இந்தப் பெண் அவளது கணவனை கிளினிக் கூட்டிட்டு போக எவ்வளவு கஷ்ரப்படுகிறா....



எம்.ரீ.தஸ்லிமா,
அல்–அமான்–தோப்பூர்.

பஸ்ஸில் இருந்த யாரோ சொன்னது ஹம்தாவின் செவிகளில் மோதியது...

ஹம்தா சற்றுமுன் அடைந்த துயரங்களை நினைத்து வேதனைப் பட்டாள். இப்படியான தியாகிகளுக்கு மத்தியில் நாமெல்லாம் வெறும் தூசு தான். இந்தப் பெண்ணின் துயருக்கு முன்னால் எமது துயரம் சிறு புள்ளிதான் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு கல்வியிலே பின்தங்கி, அதிலும் ஆங்கில வாடையையே நுகராத அந்தப் பிஞ்சுகளுக்கு கற்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு கவலை மறந்து, கண்ணீர்துடைத்து, கம்பீரமாய் நடைபோட்டாள் தோப்பூரை நோக்கி! அவ்ளது பயணம் தொடர்ந்தது....!

# சமத்துவம்

**ஒருவர்** எதற்கெடுத்தாலும் மனைவியுடன் சண்டை போடுவார்.. ஒருநாள் அலுவலகம் போய் வேலை செய்துபார்.. சம்பாதிப்பது எவ்வளவு கஷ்டம் என்று புரியும் என்று அடிக்கடி சவால்விடுவார்.

அவள் ஒருநாள் பொறுமை இழந்து, ஒருநாள் நீங்க வீட்ல இருந்து பசங்களை பார்த்துக் கோங்க.. காலைல குளிக்க வைத்து, சாப்பிட வச்சு, வீட்டுப் பாடங்கள் சொல்லிக் கொடுத்து சீருடை அணிவித்து பள்ளிக்கு அனுப்புங்க.. அதோடு சமைப்பது துவைப்பது எல்லாத்தையும் செஞ்சு தான் பாருங்களேன்.. என எதிர் சவால்விட்டாள்..

கணவனும் அதை ஏற்றுக் கொண்டான்..

அவன் வீட்டில் இருக்க.. இவள் அலுவலகம் போனாள்.. ஒரே குப்பை, கூளமாக கிடந்தது அலுவலகம். முதலாளி மனைவி என்பதை மனதில் கொள்ளாமல்கூட்டிப் பெருக்கி சுத்தம் செய்தாள்..

வருகைப் பதிவேட்டை சரிபார்த்து தாமதமாய் வருபவர்களை கண்டித்தாள்.. கணக்கு வழக்கு களைப் பார்த்தாள்.. மாலை 5 மணி ஆனதும் வீட்டுக்குப் புறப்பட நினைத்தபோது, ஓர் அலுவல ரின் மகள் திருமண வரவேற்பு குறித்து உதவி யாளர் சொல்ல, பரிசுப் பொருள் வாங்கிக்கொண்டு கல்யாண மண்டபத்திற்கு சென்றாள்..

கணவர் வராததற்கு பொய்யான காரணம் ஒன்றை சொல்லிவிட்டு, மணமக்களின் கட்டாயத் தால் சாப்பிட சென்றாள்.. பந்தியில் உட்கார்ந்த வளுக்கு சிந்தனையெல்லாம் வீட்டைப் பற்றியே..

இலையில் வைத்ததில் பாதியை கணவனுக் கும் பிள்ளைகளுக்கும் எடுத்துவைத்தாள். ஒரு வழியாய் வீடு வந்து இறங்கியவள், கணவன் கையில் பிரம்போடு கோபத்துடன் அங்கும் இங்கு மாக நடந்து கொண்டிருந்ததைப் பார்த்தாள்..

இவளை பார்த்ததும், பிள்ளையா பெத்து வச்சிருக்க..? சொல்றதை கேட்க மாட்டேங்குது.. படின்னா படிக்க மாட்டேங்குது.. சாப்பிடுன்னா சாப்பிட மாட்டேங்குது.. அத்தனை பேரையும் அடிச்சு அந்த ரூம்ல படுக்க வச்சிருக்கேன்..பாசம் காட்டுறேன்னு பிள்ளைகள கெடுத்து வச்சிருக்கே என்று பாய..

அவளோ,அய்யய்யோ பிள்ளைகளை அடிச்சீங்களா...என்றவாறே உள்ளே ஓடி கதவை திறந்து பார்த்தாள்.. உள்ளே ஒரே அழுகையும் பொருமலுமாய் பிள்ளைகள்..

விளக்கை போட்டவள் அதிர்ச்சியுடன்,'ஏங்க.. இவனை ஏன் அடிச்சு படுக்க வச்சீங்க..? இவன் எதிர்வீட்டு பையனாச்சே ' என்று அலற.. ஓஹோ ,அதான் ஓடப் பார்த்தானா..! எனக் கணவன் திகைக்க..

அந்த நிலையில் இருவருக்கும் ஒன்று புரிந்தது.. இல்லாள் என்றும், மனைக்கு உரியவள் மனைவி என்றும் சங்க காலம் தொடங்கி நம் மூதாதையர்கள் சொல்வது சும்மா இல்லை... அது போல, பொருளீட்டி வரக்கூடிய ஆண்களின் பங்கும் அளப்பரியது..






# உனக்காக மறக்கலாம்



"மற என்னை
துற காதலை!"

அவன் தான் - அவனே தான்
அப்படி அம்பெய்தான்!

அன்பை எய்தவனால்
எப்படி இன்று
அம்மை எய்ய முடிந்தது?

"மற என்னை
துற காதலை"

முட்களால் என்னை
எப்படி மோதினான்?

முத்தங்களால் நனைத்தவன்
முட்களால் என்னை
கிழிக்க எப்படித் துணிந்தான்?

"மற என்னை
துற காதலை"

கொஞ்சிப் பேசிய
அவன் உதடுகள்
எப்படி நஞ்சை
விதைக்க நினைத்தன?

"பஞ்சு நீ என்றவன்
நஞ்சால் அன்றே
எனை நனைத்திருக்கின்றான்!

"மற என்னை?
துற காதலை"

தீ நாக்கை நீட்டாமல்
தீக்குள் என்னை தூக்கி
எறிந்திருக்கலாம்!

"மற என்னை?
துற காதலை"

ஒரு முழம் கயிற்றில்
என்னை கட்டி
தொங்கவிட்டிருக்கலாம்
ஒரு பாழாங் கிணற்றில்
என்னைப் பிடித்து
தள்ளி விட்டிருக்கலாம்!

ஒரு மலையுச்சியில்
கொண்டுபோய்
என்னை
உருட்டி விட்டிருக்கலாம்!

எரிமலைக் குழம்பில்
என்னைத் தூக்கி
எறிந்து
போயிருக்கலாம்!

"மற என்னை?
துற காதலை"

என்னால் முடியாததை
செய்யச் சொல்வதைவிட
உன்னால் முடிந்ததை
செய்திருக்கலாம்!

அழுதாள். அரற்றினாள்
கண்ணீரில் மிதந்தாள்!

பின்னர் யோசித்தாள்
கண்ணீரை துடைத்தபடி
ஒரு முடிவுக்கு வந்தவள்
மடல் எடுத்தாள்!

வெந்நீராய் கொதித்த
உள்ளத்தை தணித்து,
மடலில் தன் எண்ணத்தை
ஒவ்வொன்றாய் விதைத்தாள்!

"காதலா! என் காதலா!
உனக்காக உன்னை
மறக்க சம்மதிக்கிறேன்!

காதலை மறக்கவில்லை
காதலால் தான் மறக்கிறேன்!

நான் இல்லாத வாழ்க்கை
உனக்கு இனிக்கும் எனில்,
உன் நலம் கருதியே
உன்னை மறக்கிறேன்!

உன் பாதையில் என்னை
முள்ளாக நீ நினைப்பதால்
உன் கால்களுக்கு
வலிக்காமல் இருப்பதற்காக
நான் விலகிக் கொள்கிறேன்!

உன் தோளுக்கு
நான் சுமையாகி விட்டதால்,
உன் பாரத்தை குறைக்கவே
இறங்கிக் கொள்கிறேன்!

உன் மனதில் வேண்டாத
விருந்தாளியாகியதால்
நானாகவே அங்கிருந்து
வெளியேறிப் போகிறேன்!

என் நினைவுகள்
உனக்கு முட்களானால்
அவற்றை வீசாதே!
உன்னை
எப்போதாவது
அவை குத்தக் கூடும்!
ஆகவே குழிவெட்டி
ஆழப் புதைத்துவிடு!
நினைக்கும்போது
மறப்பதற்கும்,
விரும்பும்போது
துறப்பதற்கும்
காதல் என்னை
காவி உடையா?

என்னால் காதலை
துறக்க முடியாது!
என்னால் காதலை
மறக்க முடியாது!

காதலுடனும் -
மீண்டும்
காதலுடனும்
மீண்டும் மீண்டும்
காதலுடனும்
உனக்காக
வேண்டுகிறேன்!

உன் பாதையில்
மலர்கள் தோன்றட்டும்!
உன் வாழ்க்கையில்
மகரந்தம் கசியட்டும்!

வாடிவிட்ட மலராக
நான் மாறிவிட்டபோதும்,
துவண்டுவிட்ட கொடியாக
நான் மாறிவிட்டபோதும்,
வற்றிவிட்ட பொய்கையாக
நான் மாறிவிட்ட போதும்,
பூத்துக் குலுங்கும் மரமாக
நீ வாழ ஜெபிக்கிறேன்!

"என்னை தொட்ட கைகள்
என்னை தீண்டிய உதடுகள்
என்னை தழுவிய கால்கள்
என்னை தாங்கிய மார்பு
என்னை வியந்த கண்கள்
என்னை மணந்த நாசி
என்னை நனைத்த நாவு
உன் அத்தனை
அவயவங்களுக்கும் - என்
நன்றியை தெரிவிக்கவும்!

இனிமேல் சந்திப்பதற்கோ
சிந்திப்பதற்கோ
முடியாத பாதைகளில்
பயணம் ஆரம்பமாகும்!
காதல் என்பது
பெறுதல் மட்டுமல்ல!

காதல் என்பது
ஒருவரை ஒருத்தர்
அடைதல் மட்டுமல்ல!

காதல் என்பது
ஒருத்தருக்காக ஒருத்தர்
இழத்தல் என்பதும்தான்!

பெறுவதைவிட
இழப்பதற்கே
மன விசாலம்
பெரிது வேண்டும்!

காதலை மற என்றாயே!
முட்டாள் காதலா
காதலை மறந்திருந்தால்
ஊர் நடுவே உன்னைக்
காட்டிக் கொடுத்திருப்பேன்!

குற்றவாளியாக
சபை நடுவே
நிறுத்தி வைத்திருப்பேன்!

காதலை மறக்கவில்லை
அதனால் தான்
காதலுக்காக மறக்கிறேன்!
காதலை மறைக்கிறேன்!
மறக்க முடியாததையும்
மறைக்க முடியுமல்லவா!

எழுதி முடித்தாள்
மடலை!

மடலை அவள் மடிக்க
மனமும் மடிந்தது!
அடக்கிய சோகம் வெடித்தது!

"நாம் இருவர்
ஒருவரானோம் என்றவர்
இன்று கொன்றார் அன்பை!
நினைத்த நெஞ்சம் நீறாகிறது!
பதைத்த உயிர் அழிகிறது!
என்றாள் தனக்குள்ளே!"

"விரியுமென் இன்னுயிர்
வேறல்லம் என்பார்
அளியின்மை ஆற்ற நினைந்து"

அதிகாரம் :121, குறள்: 1209


ஸ்ரீ ராமஜெயம்



**நிரூபித்துக் கொண்டிருக்கும் மலையாள மாந்திரீகம்**



சித்தக் கோளாறு, தோல் வியாதி, ரோக பயம், ஸ்திரி சாபம், செய்வினை தோஷங்கள், திருமணத்தடை, மாங்கல்ய தோஷம் உடையவர்கள், புத்திரதோஷம் உடையவர்கள், வீண் நஷ்டம் - கஷ்டம் வாழ்வா சாவா என்று சிந்திப்பவர்களுக்கு நஞ்சருந்தாமல் பிரச்சினைதீர, முறிந்த காதல் ஒன்றுசேர, கணவன் - மனைவி பிணக்குத் தீர, காதல் கைகூட, சர்வ கஷ்ட நஷ்ட துன்பங்களை விலக்கி சுகமாக வாழ, ஓடிப்போனவர்கள் தேடிவர, பெற்றோர் விருப்பம் இல்லாத திருமணம் விரும்பி நடக்க, நெஞ்சுவலி, நெஞ்சு எரிவு, மார்புவலி, உடல் பீடை நீக்கி ஐஸ்வரியம் கிட்ட, திருமணத்தடை தரித்திரியம், கல்வி சித்தம் கிடைக்க, காதலர்கள் நினைத்ததை சாதிக்க, ராகு திசை, ராகு புத்தி, கேது திசை கேது புத்தியால் ஏற்படும் சகல தோஷங்களை நீக்கி சர்பாதி தோஷம், பூர்வ ஜென்ம சாபங்களை நீக்கி, துர்சொப்பனம், செய்வினை தோஷம் நீக்கி, குலதெய்வ அருள்கிட்ட, மேலதிகாரிகளின் தொல்லை நீங்க, வெளிநாட்டு பிரயாணத் தடை நீங்க, ஆண் - பெண் உடலுறவு வீரிய குறைவுகள் தீர, சனிபுத்தி சனித்திசை தோஷம் நீங்க, ஆயுள் ஆரோக்கியம் பெற்று தனவஸ்து கிட்ட இவைகளில் இருந்து சித்தி கிட்ட, என்னைச் சந்திக்கலாம். வெளிநாட்டவருக்கு 24 மணித்தியால சேவையுண்டு.

அருள்ஞான சித்தர், துர்க்கைதாசன், தேசபந்து, பேராசிரியர், கலாநிதி,
திரு. P.K சாமி (J.D.G.A.N) J.P ஐயா SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM. **No.23, MAYFILD ROAD, KOTAHENA, COLOMBO -13.**
முவரெலியா கிளை :- **No.33, daily Fair Complex. 052 - 2222508**
தொலைபேசி இலக்கம்: - 011 - 2470615, 011 - 2342463, 011 - 2342464
**FAX** :- 011 - 2344831 **E -MAIL**:- drpksamy@sltnet.lk


# சிந்தியா பதில்

**சிந்தியா! அகிம்சை போராட்டத்துக்கான நேரம் நெருங்குகின்றது என சம்பந்தன் கூறுவதை எந்தளவு ஏற்றுக் கொள்ள முடியும்?**

எம்.பரமலிங்கம், பூநகரி.

இதே சம்பந்தன்தான் புலிகளின், ஆயுதங்கள் தமிழ் மக்களுக்கு உயரிய தீர்வைப் பெற்றுத்தரும் என்று, இருட்டுவழியில் குருட்டுத்தனமாக நம்பிக்கொண்டு, புலிகளுக்குப் பின்னால் நின்றவர்.

இவர் அகிம்சை பற்றி பேசுவது அவருக்குச் சம்பந்தமில்லாத பேச்சு.

**சிந்தியா! 2014 இல் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு ஐ.தே.கவை தயார்ப்படுத்த ரணில் கோரிக்கை விடுத்துள்ளாரே?**

ஆர்.பிரணவன், தம்தெனிய.

சில வாரங்களுக்கு முன்னர் பத்திரிகைச் செய்தி ஒன்று படித்தேன்.

அதில் 2014 அல்ல. 2050 இலும்கூட ஐ.தே.கவால் ஆட்சியைப் பிடிக்க முடியாது என்று கூறப்பட்டிருந்தது.

அந்தச் செய்திக்கு பதிலளிக்கும் செய்தியாகவே எதிர்க்கட்சித் தலைவரின் செய்தியையும் பார்க்கலாம்.

இவரின் தலைமையில் தொடர் தோல்விகளைச் சந்தித்தவர் என்பதால் 2014 ஆம் தேர்தல் குறித்து காத்திருக்கிறார். அதையும் கோட்டைவிட்டால் இவரின் தலைமைத்துவம் செல்லாக் காசாகிவிடும் என்ற அச்சம். இதற்கு ஒரு காரணமாகவும் இருக்கும்.

**சிந்தியா! ஸ்ரீதரன் மீதான குற்றச்சாட்டு பற்றி என்ன நினைக்கின்றீர்?**

உ.தவமணி, முள்ளியவளை.

அவரின் அந்தரங்க மற்றும் இணைப்புச் செயலாளர்கள் என்போர் கடந்த காலங்களில் பல்வேறுவிதமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்திருப்பதாக செய்திகள் வருகின்றன.

அவர்களின் தேசியத் தலைவருக்கும் பிறகு தன்னை ஒரு முடிசூடாத் தலைவராக நிலைநிறுத்திக் கொள்வதற்கு ஆசிரியர் பல பிரயத்தனங்களில் ஈடுபட்டிருந்தார். இப்போதுதான் கிடங்கு வெட்டப்படுகிறது. இனி பூதங்கள் கிளம்புமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**சிந்தியா! இலங்கை தமிழர்கள் மீதான கொடுமைகளைத் தடுக்க வேண்டுமென இந்திய மத்திய அரசுக்கு கடிதம் அனுப்பியுள்ளாரே கருணாநிதி...?**

பூ.சங்கவி, கண்டி.

மத்திய அரசின், பங்காளிக் கட்சியாக இருந்துகொண்டு, மத்திய அரசுக்கு கடிதம் எழுதியே காலத்தைக் கடத்தும் கைங்கரியம் கலைஞருக்கே தெரிந்துள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்காக கலைஞர் செய்யக் கூடியதைக்கூட அவர் செய்யவில்லை என்ற பெரிய மனக்கவலை இலங்கைத் தமிழர்களிடம் உண்டு.

இந்த நிலையில் இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிடைப்பதே தனது இறுதி ஆசை என்று கலைஞர் கூறியிருப்பது எதற்காக என்றுதான் யாருக்கும் புரியவில்லை.

**சிந்தியா! வெற்றிக்கு மிக முக்கியமானது எது?**

Y.கீர்த்தனா, நெடுந்தீவு.

கடினமான உழைப்பு. கூடவே தளராத மனவலிமை. இவை இரண்டும் இருந்தால் வெற்றி நிச்சயம்.

**சிந்தியா! காதல் தோல்விக்கு முக்கிய காரணம் என்ன?**

எவ்.பாயிஷா, கல்முனை.

அவசரமும், நம்பிக்கையீனமும்.

**சிந்தியா! உங்களுக்கு நெற்றிக் கண்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?**

ஆர்.நபீக், அக்கரைப்பற்று.

அதை மறைப்பதற்காக மிண்டாசு கட்டிக் கொண்டு மிகவும் சிரமப்பட்டிருப்பேன். இந்த உலகம் என்னை அங்கவீனனாக ஒதுக்கித் தள்ளியிருக்கும்.

சத்திரசிகிச்சைக்காக பல பேரின் வாசல்களில் காத்திருக்க நேர்ந்திருக்கும்.

நல்ல காலம் நமது படைப்புக்கும் பொறுப்பான இறைவன் அந்த துன்பங்களை மட்டும் தரவில்லை.




உங்களுக்கு மட்டும் ஏன் இப்படி விபரீதமான சிந்தனைகள். உங்களுக்கு இரண்டு மூக்கு இருந்திருந்தால் எப்படியிருந்திருக்கும்?

**சிந்தியா! அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் போட்டித் தொடரில் இலங்கை அணி சிறப்பாக ஆடியமை குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன?**

செ.டிலான், மன்னார்.

அண்மைக் காலமாகவே இலங்கை அணியினரும் அதன் ஆக்க வெளிப்பாடு குறித்தும் மிக மோசமான விமர்சனங்களே முன்வைக்கப்பட்டது. அவற்றை எல்லாம் உடைத்தெறிந்த போட்டியாக நீங்கள் குறிப்பிடும் போட்டி அமைந்திருந்தது. அது இலங்கை அணி மீது மீண்டும் நம்பிக்கையைத் துளிர்க்கச் செய்துள்ளது.

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## அமெரிக்கப் பாதுகாப்பில்...

**சுரண்டப்படும் வெளிநாட்டு தொழிலாளர்**

இப்படியான நிலையிலும் தனியார் நிறுவனங்கள் வெளிநாட்டவரைத் தொடர்ந்தும் வேலைக்கு வைத்திருக்க விரும்புகின்றன. ஒரு சவுதிப் பட்டதாரி 800 டொலர்களை மாதச் சம்பளமாகக் கேட்டால் அதே வேலையை அனுபவமிக்க இந்தியப் பட்டதாரி 400 டொலருக்குச் செய்யத் தயாராகவிருப்பதுதான் இதற்குக் காரணம். ஒரு சவூதிப்பிரஜை தன்னுடைய குடும்பத்தையும் பராமரிக்கவேண்டிய நிலையிலிருக்கிறான். மேலும் வேலையில்லாப் பிரச்சினை காரணமாக ஆண்களுக்குத் திருமணமாவதும் தள்ளிப்போடப்படுகின்றது. அங்கே மணம் முடிக்கவேண்டிய ஆண், சீதனம் கொடுக்கவேண்டுமென்பதை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். இன்னொரு பக்கத்தில் துப்பரவுத் தொழில் போன்றவற்றைச் செய்யும் அடிமட்டத் தொழிலாளர்கள் இப்போதும் வெளிநாட்டவர்கள்தான். அவர்கள் மாதாந்த வருமானம் 80 டொலர்களாகும். அத்தோடு எந்தவிதத் தொழிலாளர் நல உரிமையும் அற்று அவர்கள் சுரண்டப்படுகின்றனர். சவூதி அரேபிய அரசு தனது உழைப்பாளர் வர்க்கத்தை இவ்வாறு தந்திரமாகப் பிரித்து வைத்துள்ளது.

மன்னர் தூமுஸ்லீம் அல்ல, மக்களின் எதிரி என அல்-கொய்தா அறிவித்தது.

இதுவரை கூறப்பட்ட பின்னணியின் அடிப்படையிலேயே சவூதி அரேபியாவில் அல்-கொய்தாவின் வளர்ச்சியைப் பார்க்கவேண்டும். எண்பதுகளில் சர்வதேசக் கம்யூனிசத்தை, எதிர்த்த அணியில் சவூதி அரேபியா அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்திருந்தது. உள்நாட்டுப் பிரச்சினைகளை மறைக்க தனது நாட்டு இளைஞர்களை ஆப்கானிஸ்தானுக்கு சோவியத் இராணுவத்தை எதிர்த்துப் போராட அனுப்பி வைத்தது. கடைசியில் சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் (பனிப்) போர் முடிந்து நாடு திரும்பியவர்களுக்கு, அமெரிக்க அடிவருடி மன்னரின் ஊழலாட்சி கண்ணுக்குப் புலப்பட்டது. அப்போது ஆரம்பித்தது தான் அல்-கொய்தாவின் சவூதி அரேபிய விடுதலைப் போராட்டம். ஆடம்பரமாக வாழ்ந்து, ஊதாரித்தனமாகச் செலவு செய்யும் மன்னர் 'முஸ்லீம் அல்ல, மக்களின் எதிரி' என அல்-கொய்தா அறிவித்தது. வறுமையில் வாடிய வேலையற்ற இளைஞர்கள் அல்-கொய்தாவினால் கவரப்பட்டனர். அன்று சவூதி அரேபியாவில் சுதந்திரமான தேர்தல் நடாத்தப்பட்டால் பின்லேடன் ஜனாதிபதியாகும் வாய்ப்புள்ளதை எதிரிகளும் ஒப்புக்கொள்கின்றனர்.

2001 செப்டம்பர் 11 இல் நிகழ்ந்த நியூயோர்க் தாக்குதலுடன் உடனடியாக ஆப்கானிஸ்தான் தொடர்புபடுத்தப்பட்டது. விமானக் கடத்தலில் சம்பந்தப்பட்டவர்கள் என அறிவிக்கப்பட்டவர்கள் சவுதி அரேபியப் பிரஜைகள் என்ற விடயத்திற்கு அன்று யாரும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. செப்டம்பர் 11 க்கு பிற்பாடு, சவூதி அரேபியாவில் அல்-கொய்தாவிற்கு ஆதரவு பெருகியுள்ளது, மறுக்கவியலாத உண்மை. இதற்கு அமெரிக்க அரசின் சர்வதேச அளவிலான பிரச்சாரமும் காரணமாக இருக்கலாம். சவுதி ஆட்சியாளர்கள் எவ்வளவுதான் ஊழல் பெருச்சாளிகளாக இருந்தபோதும் அவர்க்ளைக் குறிவைக்கும் தாக்குதல்களை பின்லேடன் ஆதரித்திருக்கவில்லை என்றும் தெரியவருகின்றது. இருப்பினும், சவூதி அரசாங்கம் அல்-கொய்தாவை அடக்குவதில் தீவிரம் காட்டுகிறது.

'சவூதி அரசாங்கம் பயங்கரவாதத்தை அடக்குவதில் தீவிரம் காட்டவில்லை. றியாத் குண்டுவெடிப்பைத் தடுக்கத் தகுந்த பாதுகாப்பு கொடுக்கவில்லை என்று அமெரிக்க அரசு அறிவித்தது. இந்தக் கூற்று நகைப்பிற்கிடமானது. ஏனெனில் உலகில் சவூதி அரேபியாவிற்கு நிகரான சர்வாதிகார ஆட்சியை காண்பதரிது. அங்கே அரசியல் நிர்ணயச்சட்டம் எதுவும் கிடையாது. மன்னர் சொல்வதுதான் சட்டம். அப்படியான நிலையில் அரசுக்கு எதிராகக் கதைப்பதற்குக்கூட யாரும் துணியமாட்டார்கள். மேலும் றியாத் தாக்குதலுக்கு இலக்கான வினெல் நிறுவனம் சவூதி அரசின் முழுப்பாதுகாப்பையும் பொறுப்பெடுத்திருந்தது. இப்போது யார் யாரைப் பாதுகாக்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஆப்கானிஸ்தான் போரில் அல்-கொய்தாவை அடக்கிவிட்டோம் என்று அமெரிக்கா தம்பட்டம் அடித்த பிறகு இந்தத் தாக்குதல்கள் அன்று நடந்திருந்தது. பயங்கரவாதத்திற்கு எதிரான போர் எவ்வளவு தூரம் வெற்றியளித்தது என்ற கேள்வியை எழுப்பியது.

**வேலைவாய்ப்பு இன்மை, வறுமை என்பனவே பயங்கரவாதிகளை உருவாக்கும் விளைநிலங்கள்**

இருப்பினும் அமெரிக்க அரசின் வெளிவிவகாரக் கொள்கையும் முதலாளித்துவப் பொருளாதாரமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கமுடியாதவை என்பது மத்திய கிழக்கு அரபுகளுக்கு புரிய இன்னும் சிறிது காலம் எடுக்கலாம். ஆனால், சித்தாந்த ரீதியாகச் சீரமைக்கப்படாத தன்னெழுச்சியான எதிர்ப்பியக்கங்கள் வளர்ந்து வருகின்றன. அவைகள் 'பேசும் மொழி' இஸ்லாமாக இருப்பதனால் பிறருக்கு இதைப் புரிந்து கொள்ள முடியாதிருக்கலாம். ஏகாதிபத்தியத்திற்குச் சேவை செய்யும் அரபு நாடுகளின் அரசாங்கங்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளாக எல்லாவகையான எதிர்ப்பையும் முறியடித்த பின்னர், மக்களுக்குத் தமது எதிர்ப்பைக் காட்ட இருக்கும் ஒரே வழி மதம் மட்டும்தான் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

உள்ளூர் சந்தைகளில் வந்து குவியும் மேலைத்தேச நுகர்பொருட்களின் தாக்கம் உருவாக்கும் எதிர் விளைவுகள் அளவிடமுடியாதவை. உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் வீழ்ச்சி அதனைச் சார்ந்திருக்கும் மக்களின் வருமானத்தைப் பாதித்து வறுமைக்குத் தள்ளிவிடுகின்றது. மேலும் உள்நாடு உற்பத்திகள் அந்தப் பிரதேச மக்களின் கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்தவை. இதற்கு மாறாக மேற்கத்தைய பாவனைப் பொருட்கள் கலாசாரச் சீரழிவை உருவாக்குகின்றன. குறிப்பாக, அமெரிக்கா தனது உற்பத்திப் பொருட்களின் சந்தைக்காக பிறநாட்டுக் கலாசாரங்களில் ஆதிக்கம் செலுத்துவதைக் காட்டித்தான், ஈரானிய மத அடிப்படைவாதத் தலைவர் கொமெய்னி 'அமெரிக்கா பெரிய சாத்தான்' என்று கூறினார். அதாவது சாத்தான் மக்களின் மனதை மயக்கி மறைமுகமாக ஆதிக்கம் செலுத்துகிறது.

இஸ்லாமிய ஆயுதபாணி இயக்கங்கள் மோசமடையும் சமூகப் பிரச்சினைகளை தமது கண்ணோட்டத்தில் பார்க்கின்றன. வறுமையை ஒழிக்க, அந்நியக் கலாசார ஆதிக்கத்தைத் தடுக்க முழு முஸ்லிம்களினதும் தேசிய விடுதலைப் போராட்டமே சரியான பாதை என்று போதிக்கின்றன. இதனால் இஸ்லாம் மூலம் தமக்கு விமோசனம் கிடைக்கும் என்று நம்பும் குறிப்பாக வேலையற்ற, வறிய இளைஞர்கள் தீவிரவாத அரசியலால் கவரப்படுவதில் வியப்பில்லை. மொரோக்கோவிலுள்ள கஸாபிளாங்கோவில் நடந்த தாக்குதலைச் செய்தவர்கள் அனைவரும் மாநகர சேரிப்பகுதிகளிலிருந்து வந்த வறிய இளைஞர்கள் என்பதை அரசே தெரிவித்தது.

அடிப்படை வசதிகள் இன்மை, வேலைவாய்ப்பு இன்மை, வறுமை என்பனவே பயங்கரவாதிகளை உருவாக்கும் விளைநிலங்கள். அதனால் பயங்கரவாதத்திற்கெதிராக போர் புரிபவர்கள் முதலில் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என இதுவரை பலர் கருத்துக் கூறியுள்ளனர். பிரான்ஸில் நடந்திருந்த உலகப் பணக்கார நாடுகளின் G 8 மாநாட்டில் அறிக்கை சமர்ப்பித்த சமூக ஆய்வு நிறுவனமொன்று உலகில் பல உள்நாட்டு யுத்தங்களுக்குக் காரணம் இனங்களுக்கு அல்லது மதங்களுக்கு இடையிலான மோதலல்ல, மாறாக வறுமைதான் அடிப்படையென்று தெரிவித்துள்ளது. இந்த அறிக்கை பல மேலைத்தேய (ஆளும் வர்க்க சார்பு) அறிஞர்களின் கருத்துகளை நிராகரிக்கின்றது. பல்வேறு இனங்கள், மதங்கள் தமது கலாசார ஆதிக்கத்தை நிலைநாட்ட ஒன்றோடொன்று மோதுகின்றன. 'கலாசாரங்களின் மோதல்' (?) அல்லது ஜனநாயகமின்மை என்பவையே இன்றைய யுத்தங்களுக்குக் காரணமென்பது மேற்கத்தைய புத்திஜீவிகள் எம்மீது திணிக்க விரும்பும் கருத்து.

'சவூதி அரேபியா ஜனநாயக நாடானால், அவர்கள் எம்முடன் ஒத்துழைக்கமாட்டார்கள்.' என்று வெளிப்படையாகவே கூறினார் அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர். பெரும்பான்மை மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு அரசாங்கத்திற்கு ஆயுத உதவிசெய்வது எந்த வகை ஜனநாயகம் என்று தெரியவில்லை. ஈரானில் இவ்வாறான போக்கு கடைசியில் இஸ்லாமியப் புரட்சிக்கு வித்திட்டது. சவூதி அரேபியாவில் அப்படியொரு நிலைவந்தால் அந்நாட்டு அரசியல் தலைமையை எதிரியாகக் காட்டிவிட்டு, அமெரிக்க இராணுவம் நேரடியாகத் தலையிடும். ஆப்கான், ஈராக், லிபியா, சிரியா, ஈரான் எனத் தொடரும் வரிசையில், நாளை சவூதியும் இணையலாம்.

**ஷரீஆ சட்டமும் சவுதி அரேபியாவும்**

மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்பு சபை போன்ற பன்னாட்டு மனித உரிமை நிறுவனங்கள் சவூதி அரேபியாவின் மனித உரிமைகள் நிலைப் பற்றி தொடர்ந்து கவலை வெளியிட்டுள்ளன. எனினும் சவூதி அரசு இதனை மறுத்து வருகின்றது.

உலகளவில் குற்றவியல் தண்டனை முறைகளின் நோக்கம் பழி வாங்குதல், அச்சமூட்டி குற்றத்தை தடுத்தல் என்பதைத் தாண்டி – சீரதிருத்துதல் , மறுவாய்ப்பளித்தல் என்பதை நோக்கி ஏற்கனவே நகர்ந்துவிட்டது. ஆனால் சவுதி அரேபியாவோ ஷரிஆ என்பது தங்கள் அரசால் உருவாக்கப்பட்டதல்ல அதை மாற்றம் செய்ய முடியாது என வாதிடுகிறது.

ஷரிஆவில் தவறேதும் இல்லை , அது குறித்த வெளியுலகப் புரிதலில்தான் தவறு என்று ஐரோப்பிய தொலைக்காட்சியொன்றுக்கு தெரிவித்தார் ஹொலி மாகாணத்தின் ஆளுனராக இருக்கும் சவுதி அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர் சவுத் பின் அப்துல் மோஷின்.

எழுதப்படாத ஷரியா சட்டத்தை அமுல்படுத்துவதில் இஸ்லாமிய நாடுகளிடையே மாறுபாடுகள் காணப்படுகின்றன. வரலாற்று ரீதியாக பார்த்தால்கூட இஸ்லாமிய அரசுகள் இச்சட்டத்தை அமுல்படுத்துவதில் சீரற்ற தன்மை இருந்ததாகவே ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சீனாவில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கானோர் மரண தண்டனைக்குட்படுத்தப்படுகின்றனர். ஆனால் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்ற விபரத்தை அந்நாடு வெளியிடுவது கிடையாது. சீனாவைத் தவிர மற்ற நாடுகளில் கடந்த 2010 ஆம் ஆண்டு 527 பேர் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர். 2011 ஆம் ஆண்டு இத்தண்டனை 676 ஆக உயர்ந்து விட்டது. அதிகளவில் மரண தண்டனைகள் நிறைவேற்றப்படும் நாடுகள் பட்டியலில் சீனாவுடன், ஈரான், ஈராக், சவுதி அரேபியா, வடகொரியா, சோமாலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இருக்கின்றன.

அதேநேரத்தில் 140க்கும் அதிகமான நாடுகள் மரண தண்டனையை முற்றாக ஒழித்துவிட்டன. நாகரிக உலகோடு ஒத்துப்போகும் வகையில் ஷரிஆ சட்டத்தில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்கிறார் அமெரிக்காவில் பணியாற்றும் ஏ.ஆர்.எம் இம்தியாஸ்.

வெள்ளைத் தோலுக்கு மரியாதை பிரிட்டிஷ் கனடிய பிரஜையான வில்லியம் சாம்சன் பயங்கரவாத குற்றச்சாட்டுக்கள் அடிப்படையில் 2001 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப் பட்டிருந்தாலும் நிறைவேற்றப்படவில்லை. சவுதி சிறையில் 964 நாட்கள் கழித்த இவர் தனது பாஸ்போர்ட்தான் தனது தலையை காப்பாற்றியது என்று கார்டியன் நாளிதழில் எழுதியுள்ளார். அதேபோல ஓரினச்சேர்க்கை காரணமாக மரண தண்டனை விதிக்கப்பட்ட மற்றொருவரும் பிறகு பத்திரமாக பிரிட்டனுக்குத் திரும்பினார்.

சவுதியில் வேலைபுரியும் ஆசிய மற்றும கறுப்பின மக்கள் சமூக ரீதியாக மிகவும் கீழுழைப்புக் கூலி வேலைகளை செய்வதாலும், அவர்களின் நாடுகளால் இராஜதந்திர ரீதியாக அழுத்தங்களை செலுத்த முடியாமல் இருப்பதுமே இதற்கு காரணம் என்று கூறும் சர்வதேச மன்னிப்பு சபையின் சவுதி ஆய்வாளர் டினா இல் மாமோன், கடுமையான தண்டனைகள் சவுதியில் குற்றங்களை குறைத்துவிடவில்லை என்கிறார்.

அதேசமயத்தில் சவுதியில் தூக்குத்தண்டனை நிறைவேற்றும் பணியை செய்வோர் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பதாகவே தெரிகிறது. தலையை வெட்டும் பணியை செய்யும் அப்துல்லா சையத் அல் பஷி தான் கடந்த இருபது ஆண்டுகளாக இப்பணியை செய்வதாகவும், இது தனக்கு திருப்தியைத் தருவதாகவும் தொலைக்காட்சி செவ்வியில் கூறியுள்ளார்.

சவுதியில் கொலை, போதைப் பொருட்களைக் கடத்துவது, தீவிரவாத செயல்களோடு தொடர்பு, திருமணத்துக்கு வெளியிலான உறவுபோன்ற பல குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. உலகில் பல நாடுகளில் மரண தண்டனைக்கு எதிரான கருத்தியல்கள் வலுப்பெற்ற போதிலும் இஸ்லாமிய நாடுகளில் காணப்படும் சமூக பொருளாதார சூழல் பிற சமூகங்களில் காணப்படும் முற்போக்கான எண்ணங்களை உள்வாங்கத் தடையாக இருக்கிறது என்கிறார் பேராசிரியர் ஏ.ஆர்.எம் இம்தியாஸ்.

ஆனால் ஷரியா எக்காலத்துக்கும் ஏற்றது. மாற்றம் செய்ய முடியாதது என்ற வாதத்தை வைக்கிறார் இலங்கையைச் சேர்ந்த ஆதம் பாபா மௌலவி.

கடந்த 2011 ஆம் ஆண்டில் அரசுகளால் யாரும் கல்லால் அடித்துக் கொல்லப்படவில்லை என்றாலும் ஈரான், வட கொரியா, சவுதி அரேபியா மற்றும் சோமாலியாவில் பொதுஇடத்தில் மரண தண்டன்னை நிறைவேற்றப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி சீனாவைத் தவிர பிற நாடுகளில் 18,750 பேர் மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ளனர். இவர்களில் எவ்வளவு பேருக்கு நியாயமான நீதிமன்ற நடைமுறைகளில் பங்கேற்கும் வாய்ப்பு கொடுக்கப்பட்டது என்பதே மனித உரிமை ஆர்வலர்கள் எழுப்பும் கேள்வியாக இருக்கிறது.

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## மொட்டை சீமானின்...

ஆகையால் சீமான் எதைப்பற்றியும், யாரைப்பற்றியும் கவலைப்படாமல் மேடை கிடைத்தால் பேசித் தீர்க்கவேண்டியதுதான்.

சீமான் சினிமா இயக்குநர்தான். இப்போது அவரை பணம் இயக்கிக் கொண்டிருக்கின்றது. வெட்டிப்பேச்சுக்களை திரும்பத் திரும்பப் பேசுவது வெறுத்துப்போயிருக்கும்.

ஆனாலும் சீமானுக்கு அதைவிட்டால் வேறு வழியில்லை. சீமான் மேடைகளில் முழங்குவதைவிட்டால் இப்போதைக்கு செய்யக்கூடிய இன்னொரு வேலைதான் தமிழ்நாட்டு நடிகர்களை அணுகி, தமிழ் உணர்வுகளைப் பேசி அவர்களுக்கு கிடைக்கின்ற வருமான சிறு பகுதியையாவது தமிழர்களுக்காகவும், தமிழ் உணர்வுகளுக்காகவும் உதவுமாறு கேட்டுப்பெறுவதாக கோடம்பாக்கத்தின் செய்திகள் கூறுகின்றன.

யாராவது உதவிகேட்டுப் போனால் தனது கையிலிருந்து ஐந்து சதத்தையும் கொடுக்காமல் நடிகர்களை நாடி உதவும்படி கேட்பதை சீமான் பழக்கமாக செய்துவருவதாக அந்தத் தகவல்கள் கூறுகின்றன.

இப்படி தன்னுடைய ஒவ்வொரு அசைவையும் பணம்போன போக்கில் செய்யும் சீமான், இலங்கை தமிழ் மக்கள் தொடர்பில் முழக்கமிடுவதை சீமானின் உளறலாகவே எல்லோரும் பார்க்கின்றனர்.

இப்போது தமிழ் நாட்டை சுடுகாடு என்கின்றார். சீமானால் மட்டும்தான் மாதத்துக்கு ஒருமுறை இப்படி தன்னிலையை மறந்து பேசமுடிகின்றது. சிங்கள அரசை நோக்கி விரலை நீட்டிய சீமானுக்கு இப்போது தமிழ்நாட்டிலேயே தனக்கு சுதந்திரம் இல்லை என்ற உண்மை புரியத் தொடங்கியிருக்கின்றது.

உரிமை, விடுதலை, போராட்டம் என்றெல்லாம் வாயளவில் எவரும் பேசலாம். ஆதை அடைவதற்காகவும், அதைப் பாதுகாப்பதற்காகவும் நடைமுறைரீதியாக அணுகும்போதுதான் அந்த நெருக்கடி புரியும். நேரடியாகவும், மறைமுகமாகவும் எதிர்கொள்ளவேண்டிய சவால்கள் புரியும். அதற்காகவெல்லாம் தன்னை தயார்ப்படுத்தாத எவரும் அந்த இலக்குகளை அடைய முடியாது.

பேசுவதற்கும், அதற்கு செயல்வடிவம் கொடுப்பதற்குமான வித்தியாசங்கள் நிறையவே இருக்கின்றன. அதைப் புரிந்து கொள்ளாமல், வெட்டிப்பேச்சுப் பேசும் சீமானிடம் வெற்றிகளுக்கான வழிமுறையோ, பொறிமுறையோ இல்லை. மொட்டையாய் முழங்கும் பேர்வழியாகவே சீமான் தெரிகின்றார். சீமானின் சீற்றங்களால் இலங்கைத் தமிழர்களுக்கோ, தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கோ நன்மையேதுமில்லை.

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## அபிவிருத்தியும் அரசியல்...

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியே இன்று கூட்டமைப்புக்கு எதிரான பிரதான கட்சி. இக்கட்சி வாழ்வின் எழுச்சிச் சட்டத்தை முழுமையாக ஆதரிப்பதோடு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இச் சட்டத்தின் மூலம் விமோசனங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு முனைப்புடன் செயற்படுகின்றது. இந்த வகையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செல்வாக்கு அதிகரித்துவிடும் என்று கூட்டமைப்பு அச்சமடைவதில் நியாயம் உண்டு.

தங்கள் அச்சத்தை மையமாகக் கொண்டே கூட்டமைப்புத் தலைவர்கள் வாழ்வின் எழுச்சிக்கு எதிரான பிரசாரத்தை முன்னெடுக்கின்றார்கள். வாழ்வின் எழுச்சிச் சட்டத்தால் மக்களுக்கு நன்மை இல்லை என்று இவர்கள் சொல்லவில்லை. அப்படி இவர்களால் சொல்ல முடியாது. எனவே, மாகாண சபைக்குரிய விடயங்கள் பலவற்றை வாழ்வின் எழுச்சிச் சட்டம் உள்ளடக்கியிருப்பதால் மாகாண சபை வலுக்குறைப்புச் செய்யப்படுகின்றது என்றும் இப்படியான சட்டத்தை ஆதரிக்கும் தலைவர்கள் துரோகிகள் என்றும் பிரசாரம் செய்கின்றார்கள்.

மாகாண சபைப் பட்டியலிலுள்ள விடயங்கள் அதிலிருந்து நீக்கப்பட்டு வாழ்வின் எழுச்சிச்சட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பது போலக் கூட்டமைப்பு செய்யும் பிரசாரம் தவறானது. மாகாண சபைப் பட்டியலிலுள்ள விடயங்கள் அதிலிருந்து நீக்கப்படவில்லை. அவ்விடயங்கள் வாழ்வின் எழுச்சிச் சட்டப் பட்டியலிலும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. வாழ்வின் எழுச்சித் திணைக்களத்துக்குப் போதிய நிதி வசதி இருப்பதால் அத்திணைக்களம் அவ்விடயங்களை இப்போது நடைமுறைப்படுத்தும். மாகாண சபைக்குப் போதிய நிதி வசதி கிடைக்கும் பட்சத்தில் மாகாண சபையினாலும் அவற்றை நடைமுறைப்படுத்த முடியும்.

இனப்பிரச்சினையின் தீர்வுக்கான ஆரம்பமாகவாவது மாகாண சபையை ஏற்க முடியாது எனக் கூறும் கூட்டமைப்பு வாழ்வின் எழுச்சிச் சட்டம் மாகாணசபையை வலுக்குறைப்புச் செய்வதால் தமிழ் மக்களுக்குப் பாதிப்பு என்று இப்போது பிரசாரம் செய்கின்றது. இதைத்தான் முதலைக் கண்ணீர் என்று சொல்வார்கள். இனப்பிரச்சினையின் தீர்வுக்கு மாகாண சபை எந்த விதத்திலும் பொருத்தமற்றது என்றால் அதன் விடயங்கள் வாழ்வின் எழுச்சிச்சட்டத்தால் சேர்க்கப்படுவது பற்றி ஏன் அலட்டிக் கொள்ள வேண்டுமா? வாழ்வின் எழுச்சி பற்றிப் பொய்யான அச்சத்தை மக்களிடம் தோற்றுவிப்பதன் மூலம் தங்கள் செல்வாக்கைத் தக்கவைக்கும் சுயநல அரசியலே இது. சாதீய ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின் மூலம் விமோசனம் பெற்றுக்கொடுப்பவர்கள் துரோகிகள் என்றால், அறுபது வருடங்களுக்கு மேலாக இம்மக்களின் துயர வாழ்க்கையைத் திரும்பியும் பாராமல் இருந்ததோடு இப்போது அவர்களுக்குக் கிடைக்கவுள்ள விமோசனத்தைத் தடுக்கும் வகையில் செயற்படுபவர்களை என்னவென்று சொல்வது?




# காதிலை பூ

கந்தசாமி

## யாரால் யாருக்கு

இந்தக் கடிதம் யாரால் யாருக்கு எழுதப் படக்கூடியது என்பதை கண்டுபிடிக்க வாசக நெஞ்சங்களிடமே விட்டு விடுகின்றோம்.

மாண்புமிகு...... அவர்கட்கு.
வணக்கம்!

நாம் கூட்டமைத்து செயற்படுவது குறித்து பலரும் பலவிதமாக கூறக்கூடும். ஆனால், எமது கூட்டுச் செயற்பாடு குறித்து முற்றும் அறிந்தவர் என்றவகையில் உங்களுக்குச் சிரிப்பு வரும் என்பதில் சந்தேகமில்லை.

ஏனெனில், நாங்கள் தனியாகச் சந்திக்கும்போது நாம் ஒவ்வொருவரும் இன்னொருவர் பற்றிக் கோள்மூட்டுவதை நீங்கள் மட்டும்தானே அறிவீர்கள்.

கூட்டாக நாம் தயாரிக்கின்ற அறிக்கைகள், மேடைகளிலே பேசுகின்ற பேச்சுக்கள் எல்லாமே பத்திரிகைகளுக்கு அனுப்புவதற்காகவும் மக்களுக்கு சொல்வதற்காகவும் தயாரிக்கப் பட்டவை என்பதை தங்களின் மேலான கவனத்துக்கு மீண்டும் ஒருமுறை கொண்டுவரவிரும்புகிறேன்.

எங்கள் உண்மையான கோரிக்கைகள் என்ன என்பதை நாம் தனியாகச் சந்திக்கும்போது பல தடவைகள் கூறி இருக்கின்றோம். நாங்கள் கொடுத்த பட்டியலில் உள்ள பலருக்கு இன்னும் உயர்பதவிகள் கிடைக்கவில்லை.

மீன்பிடி ஆலோசகர் பதவி, மான்பிடி ஆலோசகர் பதவி, கார்பிடி ஆலோசகர் பதவி, ஆள்பிடி ஆலோசகர் பதவி, போன்றவை காலியாக இருப்பதை அறிந்தோம்.

அப்பதவியைத் தருவீர்களேயானால் எங்களது குடும்ப வாரிசுகளுக்கு தரமான எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்க உதவியாக இருக்கும்.

எக்கட்டத்திலும் தங்களுக்கு இடையூறு செய்யும்விதமாக எமது நடவடிக்கைகள் அமையாது என்பதை தயவு கூர்ந்து தாங்கள் மறந்து விடக்கூடாது.

பத்திரிகைகளில் வருகின்ற கருத்துக்கள் ஆவேசப் பொருமல்கள் எல்லாம் நாங்கள் விரும்பி இருப்பதல்ல. அவ்வாறான பேச்சுக்களில் மக்கள் ஆர்வம் காட்டுகிறார்கள்.

எனவே, அவ்வாறு பேசியே ஆக வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகின்றது.

உதாரணமாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சிலரை அமுக்கிக் கொண்டு போய் பூட்டிய விடயத்தில் கொஞ்சம் அதிகப் படியாக உணர்ச்சி வசப்பட வேண்டிய தாகிவிட்டது. உண்மையில் அவர்கள் நமக்கென்ன மாமனா - மச்சானா?... அவர்களை இவர்கள் பிடிச்சுக்கொண்டு போய் பூட்டி வைத்தால் நாம் எதற்குக் கொந்தளிக்க வேண்டும்?! உங்களுக்கு ஏற்படுகின்ற கேள்வியைப் போன்றே எங்களின் உள் மனமும் கேள்வி கேட்கின்றது நியாயம்தான்.

என்ன செய்வது உந்தப் பாழாய்ப்போன அரசியல் அமைப்பில் சர்வஜன வாக்குரிமை என்ற ஒண்டு அடக்கப் பட்டிருக்கிறதே. அது இருக்கும்வரை இப்படியான நடிப்புத் திறமையை அவ்வப் போது வெளிப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது என்ற யதார்த்தத்தை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

அவ்வாறு இல்லாவிட்டால் அடுத்த தேர்தல்களில் நாமம் போட்டுவிடுவார்கள். ஆனால் நாம் மறுபடி வெற்றி பெற்றால் தான் உங்களுக்கு உபத்திரமில்லாத ஆதரவைத் தரக்கூடியதாக இருக்கும்.

மாறாக நாம் தோற்று நடைமுறைச் சாத்தியமாக மக்களின் அபிவிருத்தி பற்றிச் சிந்திக்கின்ற பிரிவினர் அங்கு உள்நுழைவார்களாயின் மீள் கட்டுமானம், புனர்வாழ்வு, புனரமைப்பு.... என்று எப்பொழுதும் உங்கள் காதுகளுக்குள் நச்சரித்துக் கொண்டே இருப்பார்கள்.

அது உங்களுக்கு தேவையில்லாத மேலதிக அசௌகரியமாக அமைந்து விடும் என்பதனால் எமது வெற்றி என்பது உங்களின் வளமான எதிர்காலத்துக்குத் தேவை என்பதை தாழ்மையுடன் தங்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஆகவே எமது அறிக்கைகள் எமது பதவி-களைக் காப்பாற்றி அதன்மூலம் உங்களுக்கு ஆதரவு தருவதற்கான முயற்சிகளாக மட்டும் கருதுவதோடு தயவுகூர்ந்து காலியான பதவிகளை நிரப்பும்போது எம்மைப் பற்றியும் கவனத்தில் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

என்றும் தாழ்மை அதிகமுள்ள,

.........................................

யாவும் கலப்படமற்ற பொய்

# உலகை வியக்க வைத்தவர்கள்

## பேசும் புள்ளிகளை உருவாக்கியவர்


மோர்ஸ்

அந்தத் துயரத்தை மறக்கவே அவர் ஐரோப்பாவின் பல நகரத்து மாதா கோயில்களுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தார். வரும்போதுதான் இந்தப் புதிய சிந்தனை, ஜெயலெல்லாம் இனி வாழ்க்கைக்கு ஏதாவது உத்தியோகம் பார்த்தாக வேண்டும் என்ற கவலையோடு, கையில் கப்பலில் தயாரித்த வரைபடங்கள் அடங்கிய ஃபைலோடு, தரையில் இறங்கினார் மோர்ஸ்.

அவருடைய நண்பர்கள் அவரைக் கைவிடவில்லை. நியூயோர்க் சர்வகலாசாலையில் ஓவிய ஆசிரியராக ஒரு வேலை வாங்கிக் கொடுத்துவிட்டார்கள். பகலெல்லாம் சித்திரக் கலை, இரவெல்லாம் செய்திகளை மின்சக்தியின் உதவியால் எப்படி வேறு இடத்துக்கு அனுப்புவது என்ற ஆராய்ச்சி. அவர் வசித்தது எளிய, சிறிய அறை. ஓவியக் கூடம், ஆராய்ச்சிக் கூடம் எல்லாம் அதுவேதான். ஒரு பழைய கடிகாரத்தின் ஸ்பிரிங், சக்கரம், ஒரு பட்டரி, கொஞ்சம் வயர் ஆகியவைகளைக் கொண்டு, மின்சக்தியால் தானாக நகரும் ஒரு காகிதப் பென்சில், காகிதத்தில் குறிகளைத் தானாக வரையும் ஓர் அமைப்பை உருவாக்கிவிட்டார் மோர்ஸ்.

காகிதத்தில் பென்சில் குறிக்கும் கோடுகளைச் சில அடிகள் தூரத்திலுள்ள மற்றோர் அமைப்பு ஏற்று, அதை ஒலியாக்கியது. ஆரம்ப கட்டம்தான், அதிக தூரத்துக்குச் செய்திகளை அனுப்ப இயலவில்லை. ஆனால் மோர்ஸ் சும்மா இருக்கவில்லை. ஐந்து ஆண்டுகள் அதனோடு போராடினார். நியூயோர்க்கிலிருந்து பாஸ்டனுக்குச் செய்திகளை அனுப்பிப் பெறவேண்டும் என்ற தீவிரத்துடன் செயற்படலானார்.

(தொடரும்...)

# இந்தவாரம் உங்கள் பலன்

(24.01.2013 தொடக்கம் 30.01.2013 வரை)

### மேடம்

மற்றவர்களின் விசயங்களில் அநாவசியமாகத் தலைமிட்டு சிக்கலில் மாட்டிக்கொண்டு அவதிப்படாதீர்கள். அரசியல்வாதிகள், வெளிநாட்டில் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் இருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும். புதிய கடன்கள் வாங்குவதைத் தவிர்த்தல் நல்லது. சகோதர சகோதரிகளின் தடைப்பட்டு வந்த திருமண காரியங்கள் சம்பந்தமாகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். காதலர்கள் சந்தோசமாக இருப்பர். வடக்குத் திசையில் இருந்து பெண்களால் எதிர்பாராத ஆதாயம் உண்டாகும். தீராத நாட்பட்ட நோய்கள் தீர்வதற்காக வேறு மருத்துவர்களின் உதவிகளை நாடுவீர்கள். பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடிகள் மாறி சற்றுமுன்னேற்றம் காண்பீர்கள்.

### இடபம்

குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்து வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உற்றார் உறவினர்களின் திடீர் வரவுகளால் வீண் பொருட்செலவுகள் உண்டாகும். தேவையற்ற புதிய நட்புக்களால் மனநிம்மதி இழக்க வாய்ப்பு உள்ளதால் மிகுந்த கவனமுடன் இருக்கவும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களை கடன் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். உடம்பில் வாயு வாத சம்பந்தமான தொல்லைகள் வந்து போகலாம். உடல்நிலையில் இதுநாள்வரை இருந்து வந்துள்ள மருத்துவச் செலவுகள் சற்று குறையும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகவும் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லதாகும்.

### மிதுனம்

மற்றவர்களிடம் முன்கோபத்தைத் தவிர்த்தல் நல்லதாகும். செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச் சொல்லுக்கு ஆளாக நேரிடலாம். காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும். கணவன் - மனைவி உறவுகளில் இது நாள் வரை இருந்துவந்த கருத்துவேறுபாடுகள் தீர்ந்து ஒற்றுமை உண்டாகும். புதிய ஆடைகள் மற்றும் ஆபரணங்கள், ஆடம்பர அலங்காரப் பொருட்களை வாங்குவதற்காகப் புதிய கடன் வாங்குவீர்கள். நீண்ட காலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்ப வீடு வந்துசேரும். புதிய ஆடை ஆபரணங்களை வாங்குவதன் மூலம் பொருட்செலவுகள் உண்டாகலாம்.

### கடகம்

மற்றவர்களுக்காக ஜாமீன் போட்டு வீண் சிக்கலில் மாட்டிக்கொண்டு அவதிப்படாமல் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லதாகும். கூட்டுத்தொழில் செய்வதற்கான புதிய முயற்சிகளில் நல்ல பலன் வந்துசேரும். மற்றவர்களை நம்பிப் பணம் பொருட்களை கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். புதிய நண்பர்களின் சேர்க்கையால் பொருட்செலவுகளும், மனநிம்மதி இன்மையும் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் கவனம் தேவை. புதிய கடன் வாங்கிப் பழைய கடனை அடைக்க முயற்சிப்பீர்கள். பிரிந்துபோன உறவுகளுடன் மீண்டும் சேர்ந்துவாழ வாய்ப்பு உள்ள காலமாகும்.

### சிங்கம்

அதிர்ஷ்டலாபச் சீட்டுக்கள் போன்றவற்றின் மூலமாகப் பணம் கிடைக்கும் என எண்ணி ஏமாற்றம் அடைய வேண்டாம். உடம்பில் வாயு, வயிறு சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். அண்டை அயலார்களுடன் காரணமற்ற சிறிய விசயங்களுக்காக வீண் பிரச்சினைகள் உருவாக இருப்பதால் கவனமுடன் பேசிப் பழகுதல் நல்லது. தென்திசையில் இருந்து நல்ல செய்திகளை கேட்பீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் பரிசு மற்றும் பாராட்டுகளைப் பெற வாய்ப்பு உள்ள காலமாகும். வீட்டை அலங்கரிப்பதிலும், வாகனங்களைப் பழுது பார்ப்பதன் மூலமும் பொருட்செலவுகள் ஏற்படலாம்.

### கன்னி

விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ள கால மாகும். அண்டை அயல் வீட்டுக்காரர்களிடம் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது. உடம்பில் சளி மற்றும் காய்ச்சல் சம்பந்தமான உபாதைகள் வந்துபோகலாம். வீடுகளில் அல்லது யாத்திரையில் புதிய நட்புக்கள் உண்டாகி அவர்களால் எதிர்பாராத சிற்சில ஆதாயம் அடைவீர்கள். உடம்பில் எலும்பு நரம்பு போன்ற உபாதைகள் வந்து போகலாம். இதுநாள் வரையில் இருந்து வந்துள்ள பண நெருக்கடிகள் மாறிச் சற்று முன்னேற்றம் காண்பதன் மூலம் மனநிம்மதி அடைவீர்கள்.

### துலாம்

குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்து வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உற்றார் உறவினர்களின் திடீர் வரவுகளால் வீண் பொருட்செலவுகள் உண்டாகும். தேவையற்ற புதிய நட்புக்களால் மனநிம்மதி இழக்க வாய்ப்பு உள்ளதால் மிகுந்த கவனமுடன் இருக்கவும். ஒரு சிலருக்கு வீடு மற்றும் தொழிற்சாலைகளைத் திருத்திக் கட்ட வாய்ப்பு உள்ளது. உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு எதிர்பார்த்த இடங்களுக்கு இடமாற்றம் ஏற்படலாம். குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவர எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும். உடல்நிலையில் இதுநாள் வரை இருந்து வந்துள்ள மருத்துவச் செலவுகள் சற்றுக் குறையும்.

### விருச்சிகம்

பொருள் இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் எச்சரிக்கையுடன் இருக்கவும். வெகுகாலமாக வழிபடாமல் விட்டுப்போன குலதெய்வ ஆலயங்களைத் தரிசனம் செய்வதற்கான காலமாகும். உத்தியோகத்துறையினருக்கு பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றமும் மேலதிகாரிகளின் ஆதரவும் உண்டாய் இருக்கும். குடும்பத்தில் தேவையற்ற மனக்குழப்பங்கள் வர இருப்பதால் மிகுந்த கவனமுடன் இருத்தல் உகந்ததாகும். தொலை தூரப் பயணங்களை மேற்கொள்வதன் மூலம் எதிர்பார்த்த காரியங்களில் மனநிறைவடைவீர்கள். குல தெய்வ ஆலய வழிபாடு செய்துவர முயற்சிப்பீர்கள். காதல் விசயங்களில் மற்றவர்களில் ஆதரவுகள் கிடைக்கும். பொதுவாக இது ஒரு மன நிம்மதி தரக்கூடிய வாரமாகும்.

### தனுசு

உத்தியோகம் பார்ப்பவர்கள் தங்களது மேலதிகாரிகளுடன் மிகவும் பொறுமையுடன் பணி ஆற்றுதல் நல்லதாகும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் எச்சரிக்கையுடன் இருக்கவும். கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். அரசியல்வாதிகளால் எதிர்பார்த்த ஆதாயம் கிடைப்பதற்கு இன்னும் சற்றுப் பொருமையுடன் இருத்தல் நல்லது. குடும்பத்தில் தந்தையின் மருத்துவச் செலவுகளுக்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர வாய்ப்பு உள்ளது. ஒரு சிலருக்கு வீடு மற்றும் தொழிற்சாலைகளைப் பழுது பார்ப்பதன்மூலம் பொருட்செலவுகள் ஏற்படலாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### மகரம்

நீண்டகாலமாக வரவேண்டிய பணம் மற்றும் பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். உறவினர்களின் எதிர்பாராத சில திடீர் வரவுகளால் வீண் பொருட்செலவுகள் உண்டாகலாம். வெளிநாட்டில் இருந்து செய்திகள் கிடைப்பதற்கு இன்னும் சற்றுக் கால தாமதம் ஆகலாம். புதிய நண்பர்களின் சேர்க்கையால் வீண் மனக் குழப்பங்கள் உண்டாகலாம். கணவன் -மனைவி உறவுகளில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி மனநிம்மதி அடைவீர்கள். சமுதாய முன்னேற்றப் பணிக்கான பொதுத் தொண்டுகளில் தலையிட்டு பெயர், புகழ் அடைய வாய்ப்பு உள்ளது.

### கும்பம்

காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேர இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். தாயின் உடல் நிலையில் ஏற்பட்டு இருந்த பாதிப்புகள் நீங்கி மருத்துவச் செலவுகள் குறையும். பணப் புழக்கம் சுமாராகக் காணப்படும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்பட்டாலும் அவர்களால் பாராட்டுகளும் பொருள்வரவும் உண்டாகும். அரசியல்வாதிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் பணி ஆற்றுதல் நல்லது. வெளிநாடு சென்றுவருவதற்கான முயற்சிகளில் நண்பர்களின் ஆதரவுகள் கிடைக்கும்.

### மீனம்

உடல்நிலையில் கண், காது போன்ற இடங்களில் கவனம் தேவை. குடும்பச் சொத்து சம்பந்தமாகிய விசயங்களில் பெரிய மனிதர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தேவையற்ற விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்காதிருங்கள். வெளிநாடு சென்று வருவதற்கான முயற்சிகளில் பணம் ஏமாறவேண்டாம். வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்களது உறவுகளைத் தேடி தாய்நாடு சென்று வருதற்கான வாய்ப்பு உள்ள காலமாகும். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக நீண்டதூர உல்லாசப் பயணங்கள் சென்றுவருவதன் மூலம் மனமகிழ்ச்சியை அடைவீர்கள். பொதுவாக இது ஒரு மகிழ்ச்சி தரும் வாரமாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012





# தங்கமோ தங்கம்!

அவுஸ்திரேலியாவில் விக்டோரியா மாகாணத்தின் பாலார்ட் என்ற நகருக்கு அருகே மெட்டல் டிடெக்டரின் உதவியுடன் புதையலை நபர் ஒருவர் தேடிக் கொண்டிருந்தார்.

அப்போது தரைக்கு கீழே இரண்டடி ஆழத்தில் உலோக கட்டி இருந்ததால் பீப் என்ற ஒலி எழுந்தது. இதனையடுத்து அந்த இடத்தை தோண்டி பார்த்ததில், சுமார் ஐந்தரை கிலோ எடையுள்ள தங்கக் கட்டி கிடைத்தது. இதன் விலை 3 இலட்சம் டொலர்களுக்கு மேல் என்று கருதப்படுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அவுஸ்திரேலியாவில் சூடுபிடித்த தங்க வேட்டையின் போது, இந்த இடம் தங்கம் தேடுவோர் மத்தியில் பிரபலமாக இருந்தது குறிப்பிடத் தக்கது.







# வாடிக்கையாளர்கள்...

GMTUnder: Pets & Animals கென்யாவில் உள்ள யேசைழடிை என்ற ஹோட்டல் வாடிக்கையாளர்களை கவர ஒட்டகச் சிவிங்கிகளை பயன்படுத்திவருகின்றனர். 150 ஏக்கர் பரப்பில் காணப் படும் இந்த உணவு விடுதியில் காலை நேர உணவை பகிர்ந்து கொள்ள ஒட்டகச் சிவிங்கிகளும் வருகின்றனவாம். இதுவே இந்த ஹோட்டலின் தனிச்சிறப்பு ஆகும்.



# துறைமுகம்

கொழும்பிலிருந்து வடக்காக 10 கிலோமீற்றர் தொலைவில் மிகப்பெரியதான திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ திறந்துவைத்தார். ஆசியாவிலேயே மிகப் பெரிய மீன்பிடித்துறைமுகமான திக்கோவிட்ட துறைமுகம் நெதர்லாந்து அரசின் நிதியுதவியில் கிட்டத்தட்ட 53 யூரோ மில்லியன் செலவில் (இலங்கை ரூபாயில் கிட்டத்தட்ட 9500 மில்லியன் ரூபாய் செலவில்) நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் 19ஆவது மீன்பிடித் துறைமுகமாக திறக்கப்பட்டுள்ள திக்கோவிட்டத் துறைமுகம் தேசிய மீன்பிடித் துறையை ஊக்குவிக்கும் நோக்குடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மீன்களைப் படகுகளிலிருந்து பதப்படுத்தும் நிலையங்களுக்கு ஆட்களைக் கொண்டு நகர்த்தாமல் நவீன நகரும் பெல்ட்டுகள் மூலமாகக் காவிச் செல்லும் வசதிகள் இங்கு காணப்படுகின்றது. கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு 20 நிமிடங்களில் மீன்களை கொண்டுசெல்லும் வசதிகள் இருக்கின்றன, வடக்கு - தெற்கு என்று நாட்டின் எந்தப் பகுதியிலுள்ள மீன்பிடிப் படகுகளும் இங்கு வந்து தரித்துநின்று ஏற்றுமதி தொழிலில் ஈடுபடமுடிகிறது.

ஐஸ்லாந்து அதிகளவில் வெந்நீரூற்றுகளைக் கொண்ட ஒரு நாடாகும். ஐஸ்லாந்து தீவு முழுவதும் இவ்வகையான வெந்நீரூற்றுகள் பரவிக் காணப்படுகின்றன. 5–8 நிமிடங்களுக்கு ஒரு தடவை 30 மீற்றர் உயரத்திற்கு நீரை வெளியேற்றக் கூடிய ஒரு வெந்நீரூற்று Strokkur என்ற இடத்தின் அருகில் காணப்படுகின்றது. வெந்நீரூற்று அல்லது வெந்நீர்ச்சுனை (Geyser) என்பது நீரானது, நீராவியுடன் சேர்ந்து குறிப்பிட்ட இடைவெளிகளில் கிளர்ந்தெழுந்து, மேல்நோக்கி மிகவும் வேகத்துடன் வெளியேற்றப்படும் ஒரு நீர் நிலையாகும். குறிப்பிட்ட சில நிலத்தடி நீர்ப்படுகைகளில் மட்டுமே இவ்வாறான வெந்நீரூற்றுகள் காணப்படுகின்றன. புவியின் ஒரு சில இடங்களில் மட்டுமே இவ்வகையான வெந்நீரூற்றுகள் இருப்பதனால், இது ஒரு அரிதான தோற்றப்பாடாகவே கருதப்படுகிறது.

# வெந்நீரூற்று!



இராட்சத நாக பாம்புடன் விளையாடும் குழந்தைகள் ரஷ்யாவின் தலைநகரிலிருந்து கிழக்காக 300 கிலோமீற்றர்கள் தொலைவிலுள்ள Yakutsk பகுதியில் குழந்தைகளை கவருவதற்காக Mikhail Bopposov என்பவர் 400 கிலோ எடையுள்ள இராட்சத நாகபாம்பின் சிலை ஒன்றினை உருவாக்கியுள்ளார்.



# கைவண்ணம்!

Tanah Lot எனப்படுவது இந்தோனேசியாவின் பாலி கடற்கரைப் பகுதியில் காணப்படும் மிகப்பெரிய பாறையாகும். இப்பாறையானது இயற்கையிலேயே அழகிய வீடுபோன்று தென்படுவதுடன் மேலும் அலங்கரிக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளின் சொர்க்க வாசலாக தற்போது திகழ்கின்றது.



# இயற்கை!